ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது

| | | |
|---|---|---|
| சிலம்பு ௬ | மெய்கண்டான்யாண்டு-எ௱௬ மார்கழித்திங்கள் 1928௵ டிசம்பர்௴—1929௵ ஜனவரி௴ | பரல் ௧௨ |


பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியிங் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே.

அப்பர்

*உரை:*

*பின்னிரண்டடிகளை முன்னும் முன்னிரண்டடிகளை அதன் பின்னுமாக நிறுத்திக் கருத்துணர்ந்துகொள்க.*

*சிறப்பர், நினைவிலுஞ் சொல்லிலுஞ் செயலிலும் ஏனையோரினுஞ் சிறந்தவர்; அவர் அறவாழி அந்தணர்; 'சிறப்பர்சேறை' யென்றது அவ் வந்தணர் வாழுஞ் சேறைநக ரென்றற்கு; 'சிறப்பர் வாழ்தில்லை' யென்று ஞானசம்பந்தப் பெருமானும் இங்ஙனமே கூறுவர்.*

*'செந்நெறியான்' சிவன்; என்றது, சிவப்பான நிறம் வாய்ந்த தீயின் நெறியானும், செம்மையான ஒழுக்கம் வாய்ந்த அறிவின் நெறியானும் இறைவன் உணரப்படுவானென்பது.*

*'மறப்பதின்றி' என்றார், இடையறாப் பழக்கத்திற்கு.*

*'மனத்தினுள்' என்றார், போலியான வெளியன்பல்லாத உண்மையான உள்ளன்பிற்கு.*

*'வைக்கவே' யென்பது வைத்தலின் அருமை யுணர்த்துமுகத்தால் 'நும் முயற்சி வலிதாதல் வேண்டு'மென்றுஅதற்கு முயல்வாரை நோக்கி அறிவுறுத்தா நின்றது.*

'வைக்கவே எய்திடும்' என்க.

'பிறப்பு, பெரும்பசி, மூப்பு, வான்பிணி, இறப்பு' என்று முறையே நிகழுமாறு தெரிந்து முறைப்படுத்திக்கொள்க; இவை ஒருடற்கண் உண்டாம் ஐவகைத் துன்பமாம்.

'பெரும் பசி' மிக்க பசி; இதனை 'அறிவு முதலியன அழிதற்குக் காரணமான பசி' யென்பர் நச்சினார்க்கினியர் (சிறுபாண், கஅய) இப்பசி பண்டை யிலக்கியங்களில் 'அழிபசி,' 'காய்பசி' என்பனவாகக் கூறப்படும். 'வான்பிணி' யென்பதும் அது. எனவே, 'நல்லாரோடிணங்கி அறிவுமிக்க ஒழுக்கம் வாய்ந்து செந்நீயின் வழியாகச் சிவபெருமானை இடையறாத நினைப்புடன் வணங்கி வழிபட்டால், உலகத் துன்பங்களான பெரும்பசி; வான் பிணிகளும், அவைதாம் விளைதற்கு இடனாயிருக்கும் இளமை முதுமைகளும், அவைதம்மின் எது வ்ளைவுகளான பிறப்பிறப்புகளும் ஒருங்கே ஒழிந்து இன்பம் விளைந்திடும்' என்று இப் பாட்டிற்குக் கருத்துரைத்துக்கொள்க.

---

# உலகெங்கும் தமிழரிடமிருந்து நாகரீகம் பரவியதென்பது

[அ. சிதம்பரநாதனவர்கள் B.A.]

இவ்வுலகம் படைக்கப்பட்ட தென்ஞான்றென்பதைத் திட்டமாய்க் கூறலரிது. ஆயினு மேதோவொரு காலத்திற்றான் அஃதுண்டாக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுண்மை. அவ்வாறுலகம் படைக்கப்பட்ட பொழுது இஞ்ஞான்றிருக்கும் பொருள்களெல்லா மிருந்தனவல்ல. உலகைப் படைக்க முற்பட்ட கடவுள் முதலில் ஒரு பூமியை யமைத்தார். பின்னர் செங்கதிரையுந் தண்கதிரையுமமைத்தார். காற்றையு நீரையு மமைத்தவ ரவரே. இவ்வாறுண்டாக்கப்பட்ட வுலகு முதலில் வெற்றிடமாகவே யிருந்திருக்கவேண்டும் அவ்வுலகில் உயிர் முதலில் வெப்ப மண்டலத்திடத்தேதான் தழைத்திருக்கவேண்டும். மக்கள் முதலிற் படைக்கப்பட்டது வெப்ப மண்டலத்திடத்தேதான். வெப்ப மண்டலக்கோடு இந்தியாவின் வழியாய் ஓடுகிறதென்பது மாநில வளவறிவுடையோர் கூற்று. ஆதலால் இந்தியாவில்தான் முதலி லுயிர் தழைத்திருக்க வேண்டுமென்பது பெறப்படும். அவ்விந்தியாவிலும தென்பக்கத்தேதான் முதன் முதலில் உயிர் பிறந்ததென்பது "இலெமூரியா" (Lemuria) என்ற தீவொன்றிருந்ததாகக் கூறப்படுவதினின்று தெரியவருகிறது. ஆசுதிரேலியாவிலும் தென்னாப்பிரிக்காவிலுஞ் சிற்சில பகுதிகளும் தென்னிந்தியாவு மொருங்கு சேர்ந்திருந்ததால் அவை இலெமூரியா என்ற பெயரான் முற்காலத்தழைக்கப்பட்டன. முதலிற் படைக்கப்பட்ட மனிதன் ஆடு மாடு

குரங்கு முதலிய உயிர்களைப் போலவே மொழியொன்று மறியானாய்த் திசையொன்றுந் தெரியானாய் ஓடியாடித் திரிந்து கிடைத்ததைத் தின்றுங் குடித்தும் வந்திருக்கவேண்டும். நாட்கள் வளர வளர அவனதறிவும் வளர்ந்து உணர்ச்சியும் பெருகி, இன்னும் மிகுந்த நலன்களைப் பெறவேண்டுமென்ற வவாவும் பெருகியிருக்கவேண்டும். அவ்வவாவை நிறைவேற்ற வேண்டிப் பல வழிகளிலும் அவனோடித்திரிந்து பயன்தரக்கூடிய பொருள்களைத் தேடியிருக்க வேண்டும். உலகிலுள்ள மற்றப்பொருள்களையெல்லா மெவ்விதம் தான் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற பேரவாவே அவனைக் குடிகொண்டிருக்கக் கூடும். இவ்வாறு மனிதன் நாளடைவில் கல், இரும்பு, செம்பு, பித்தளை, மரம் முதலியவற்றின் தன்மையை உணர்ந்து அவற்றால் வேண்டிய கருவிகளைச் செய்துகொண்டு, புல் பூண்டு கனி காய் இலை சருகு இவைகளைத் தின்னவாரம்பித்து, பின்னர் சிக்கிமுக்கிக் கல்லைக் கொண்டு நெருப்புமூட்டி உணவுப் பொருள்களைச் சிறிதும் பெரிதும் வேகவைத்துண்டு, ஆடையின்றித் திரிந்ததைவிட்டு, மரப்பட்டைகளாலுந் தளிர்களாலும் உடம்பை மூடிக்கொண்டு, வாழ்ந்து வந்திருக்க வேண்டும். தன் வயிற்றுக்கு முடம்புக்கும் வேண்டிய நலன்களைத் தேடிக்கொண்ட பிறகு உலகிற் படைக்கப்பட்டுள்ள மற்றப் பொருள்களினமைப்பையுந் தன்மையையும் பற்றி யறியவேண்டுமென்ற வவா மக்களிடத்துத் தோன்றியிருக்கவேண்டும். அவ்வாறாராய முற்பட்டபொழுது வெங்கதிருந் தண்கதிரும் முதலில் அவனெஞ்சில் அச்சத்தையு மயக்கத்தையு முண்டுபண்ணியிருக்கவேண்டும். இருள் சூழ்ந்துழி அவ்வச்சம் பெருகியிருக்கக் கூடும். இருளைப் போக்குங் கதிரவனெழுந்தகாலை அச்சம் நீங்கி மகிழ்ச்சி தோன்றியிருக்கக்கூடும். அம்மகிழ்ச்சி யெளிதில் அன்பாய் மாறியிருக்கக்கூடும். ஆகவே இருசுடர்களிடத்தும் அன்புமார்வமும் பெருகி, மனிதன் அவ்விரண்டையும் அவற்றைச் சுற்றியுள்ள விண்மீன்களையும் வணங்கியிருக்கக்கூடும். இவ்வாறே நீர்க்கடவுளென்றும் வளிக்கடவுளென்று மொளிக்கடவுளென்றும் நீரும் வளியு மொளியும் மதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். பின்னரே படைக்கப்பட்ட பொருள்களிடத்திலிருந்து படைத்தவரிடத்தன்பு தோன்றியிருக்கக்கூடும். இதுதான் முறை.

இம்முறைபற்றியேதான் பண்டைத் தமிழரும் வாழ்ந்து வந்தனரென்க. இலெமூரியா தென்னிந்தியாவை யுட்கொண்டதேயன்றி வட இந்தியாவை யுட்கொண்டதல்லவென்பது மேலே கூறப்பட்டது ஆகவே முதலில் உயிர் தழைத்தது தென்னிந்தியாவில்தான். முதலி லுயிர் தழைத்தவிடத்தே

நாகரீகமு முதலிற் பிறந்தது என்று சொல்வதுதான்முறை.
அதுதான் தகுதி; அதுதா னுண்மை. பழைய காலத்தில்
இந்தியாவிற்கென்ன பெயரிருந்ததோ வறியோம். ஆயினும்
வட இந்தியாவுந் தென்னிந்தியாவு மிரண்டு வேறு நாடுகளாகவே
யிருந்தனவென்று நினைக்க இடமுண்டு இவ்விரண்டு நாடுகளுக்கு
மிடையே அரசபட்டணக்கடலும் கீழ்க்கடலுமிருந்தனவென்று
தெரிகிறது. அவ்விரண்டு கடல்களையுந் தாண்டி ஒரு நாட்டி
லிருந்து மற்றொரு நாட்டிற்குச் செலவதென்பது முதல் மக்
களுக் கெளிதானதன்று. தென்னிந்தியாவில் மக்கள் தோன்றி
யதற்குப் பின்னரே வட இந்தியாவில் மக்கள் தோன்றினாகள்.
இதனுண்மை வெப்ப மண்டலப் பகுதியைப்பற்றி முறகூறியதி
லிருந்து தெரியவரும். தென்னாடு உயிருண்டாக்குவதிற் றலை
சிறந்ததென்பது ஆட்டொகைக் கணக்கிலிருநதும தெரிவதால,
தென்னாட்டிற் றோன்று முன்னர் வடநாட்டில் மக்கள் தோன்றி
னார்களென்று கூறுவது பிழைபாடுடைத்து. ஆனால், மக்கள்
தென்னாட்டிற்றோன்றிய காலத்தே வட நாட்டி லுந தோன்றினார்
களென்பது பெரும்பாலோரா லொப்பத்தகுந்தது.

அவ்வாறு தென்னிநதியாவிலும் வடஇநதியாவிலும் முதன்
முதற் றோன்றியோர் யார்? தென்னிநதியாவில் தமிழருமு வட
இந்தியாவில் ஆரியருந தோன்றினர் அத்தமிழரையே தமிளர்,
திரமிளர், திரமிடர், திரவிடர், திராவிடர் எனப்பலரழைததனர்.
திராவிடரென்பது பிற்காலத்தாரியரால் தமிழருக்கிடப்பட்ட
பெயர். ஆயினும் முதற்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்தவர்
தமிழரேயாவா. பண்டைத் தமிழக் குடிகளுள் பாணர் என்ப
வர் ஒரு வகுப்பார் என்பது யாருமறிந்தது. வெகு பிற்காலத்
தெழுந்த புறநானூற்றிலும் இவா வகுப்பைச் சேர்ந்தவரைப்
பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. "துடியன் பாணன் பறை
யன் கடம்பனென்றிந்நான் கல்லது குடியுமில்லை" என்பது
புறம் பாணர் என்ற பெயர் நிலத்தைப் பண்படுத்துவோரென்ற
ஏதுப்பற்றியெழுந்ததாக விருக்கலாம். அன்றிப், பண்ணுக்குரியவ
ராதலால் அவரவ்வாறழைக்கப்பட்டனர் என்று கூறுவது
முண்டு. அவருள் மண்டைப்பாணர், யாழ்ப்பாணர், குடை
கட்டிப்பாணர், நிலப்பாணர், வலைப்பாணர் எனப பல பிரிவு
களுண்டு. மண்டைப்பாண ரென்போர் இறந்த மக்களது
மண்டையோட்டை யெடுத்துப் பக்குவப்படுத்தி மைமுதலான
வை செய்துகொண்டு மந்திரவாதிகளாகவுங் குறிகூறுவோராக
வும் வாழ்ந்து வந்தோராவர். யாழ்ப்பாண ரென்போர்
யாழைக் கையிலேந்தி இன்னிசையியக்குவோர். குடைகட்டி
வயிறு வளர்த்த பாணர் குடைகட்டிப் பாண ரெனப்பட்டனர்.

நிலப்பாணரென்போர் நிலத்தைப் பண்படுத்தி யுழுது பயிர் செய்தோராவர். வலைப்பாணரென்போர் குளத்திலுங் குட்டையிலும் ஆற்றிலுங் கடலிலும் வலைபரப்பி மீன் பிடித்தோராவர்.

ஆகவே பண்டைத் தமிழ்க்குடியினரு ளொருவராகிய பாணரென்போர் மந்திரவாதிகளென்றும் கைத்தொழிலாளிகளென்றும் வேளாண்மைக்காரர்கள் என்றும் கடற்பழக்க முள்ளவரென்றுந் தெரியவரும். ஆனால் மந்திரவன்மையால் நஞ்சுடைப் பாம்பைக் கட்டுப்படுத்த அவராலியலவில்லை யாதலால், பாம்பைத் தெய்வமென்றே அவருட் பல்லோர் வணங்கி வந்தனர். பாம்பின் நஞ்சைப்போக்குதற்குரிய இலை வேர் பூண்டு முதலியவற்றைத் தேடும் ஏது அதனாலேற்படவே அவர்க ளிங்குமங்குந் திரிந்து தேடத்தொடங்கினர். குடைகட்டற்குரிய பொருளைக் குறித்தும் பலர் பலவிடத்துக்குச் சென்றனர். இவருட்சிலர் மலையாளம் சோழமண்டலக் கரைப்பக்கஞ் சேர்ந்து மரம் மிகுதியாயிருப்பதைக் கண்டனர். அங்கிருந்து சில கட்டைகளைப் போட்டுக்கொண்டு முதலில் கடலிலிறங்கிப்பார்க்கத் தொடங்கினர். பின்னர் நாளடைவில் படகுகள் கட்டிக்கொண்டு கடலிற் காதக்கணக்காகச் செல்லத் தொடங்கினர். இவ்வாறு படகுப் பழக்கமிருந்த காலையில் தொலைவான துலைக்கும் அவருட் சிலர் போகத் தொடங்கினர். மீன்பிடிக்குங்கால் அவர்கட்கு முத்தும் பவளமு மகப்பட்டன. அவற்றினருமை தெரியாமலே வேடிக்கையாகவவற்றைக் கரைமீது கொணர்ந்து சேர்த்தனர். நாளடைவில் அதனாலாய பயனையும் அறிந்து கொண்டனர். பின்னுமத்தகைய முத்துக்களையும்பவளங்களையுஞ்சேர்க்கவேண்டுமென்ற விழைவு தோன்றக்கடலிற் கணக்கின்றி வெகுதொலைவு செல்லத் தொடங்கினர். இவ்வாறு செய்ததில் ஒருகால் அவர்கள் அரசபட்டணக் கடலைக்கடந்து வடக்கே சென்றனர். இவர் வடநாடு சேர்ந்தகாலையில் அங்கு ஆரியரெனப்படுவோரிருந்தனர். யாரோ அயலார் வந்தனரென நினைத்து ஆரியர் அவரைத் துரத்த முயன்றனர். ஆரியரிடையே கடற்பாணர் தம்முடன் கொண்டுபோன முத்துக்களையும் பவளங்களையும் பரப்பவே ஆரியர் அவரைத் துரத்துவதை விட்டு அவைகளைப் பொறுக்கத் தொடங்கினர். ஆரியர் தமிழர் கொணர்ந்த முத்து பவள முதலியவற்றைப் பெறக் கருதியதாலும் தமிழர் ஆரியரிடமிருந்து உணவு முதலியவற்றைப் பெறக்கருதியதாலும் இருதிறத்தார்க் குள்ளும் ஒற்றுமை யேற்பட்டது. ஆனால் அவ்வொற்றுமை நீண்டு வாழ்ந்ததன்று. ஆரியர் தமிழரிடமிருந்து கடலிற் படகோட்டும் வகையைத் தெரிந்து கொண்டதாலும், உணவுப் பொருள்கள் கிடைக்கக்கூடிய விடத்தைத் தமிழர் ஆரி

யரிடமிருந் தறிந்துகொண்டதாலும் சிலகாலங் கழிந்து அவ்விரு
வர்க்குஞ் சண்டைசச்சரவு ஏற்பட்டது. ஒருவர் உதவி மற்ற
வருக்குவேண்டியதில்லை என்னுங் காலத்து இத்தகைய பூசல்கள்
விளைதல் இயல்பே. பின்னர்ப் பாணருட் பலர் வடக்கு வட
மேற்கு ஆகிய திசைகளை நோக்கிச் சென்றனர். மரக்கலத்தில்
வந்த பாணரில் தெற்குநோக்கி ஊர்சேர்ந்தோர் சிலரே. அவர்
தென்னாட்டிலிருந்த அவரினத்தார்க்கு வட நாட்டிலுள்ள மக்
களைப்பற்றிய செய்திகளைக் கூறினார். ஆரியர் கடற்பாணரிட
மிருந்து மரக்கலமோட்டும் வகையை அறிந்து கொண்டனரே
யன்றி மரக்கலஞ்செய்வதற்குரிய மரம் அவர்களுக்குக் கிடைக்க
வில்லை. அம்மரம் சோழமண்டலக் கரையிலும் மலையாளத்தி
லுந்தான் மிகுதியாகவுண்டு. அதனாற்றான் தென்னாட்டிலிருந்த
பாணர்க்குக் கடலைக்கடப்ப தென்பது இசைந்தது. வடநாட்டு
மக்களையும் பொருள்களையுங் காணவேண்டி முத்து, பவளம்,
அகில் முதலியவற்றைத் தாங்கள் மரக்கலங்களிலேற்றிக்கொண்டு
பல பாணர்கள் வட இந்தியா சேர்ந்தனர். இவ்வாறு சென்ற
இரண்டாவது கூட்டத்தாருட் பெரும் பாலோர் வடநாட்டி
லேயே தமது தொழிலைச் செய்ய முற்பட்டனர். வடநாட்டைப்
பண்படுத்தித் தானியாதிகளை விதைத்துப் பயன் பெற்று இன்ப
மாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு நல்ல பயன் கொடுத்
தது வரகுங் கோதுமையுமாம். ஆடுமாடுகளின் பாலில் சுவை
யைக்கண்டு அவற்றைப் பெரிதுங் கொண்டாடத் தொடங்கினர்.
மழை பெய்யாத காலத்தில் பயிர்கள் விளையாது போவதைக்
கண்ட அவர் நீர்க்கடவுள் சினங்கொண்டனரோவென அஞ்சி
னர். சினத்தைத் தணிக்கவுன்னி நீர்க்கடவுளை நினைத்து ஆடு
மாடுகளின் சுவைமிக்கபாலைக் கடலிலும் ஆற்றிலுஞ் சொரிந்த
னர். இவ்வாறு செய்யவே மழையும் சிலகால் பெய்தது. கட
வுளின் சினத்தைத் தணிக்கும் வகையைக் கண்டறிந்ததைக்
குறித்து அவர்கள் பெருமகிழ்ச்சி யெய்தினர். மழைமிகுந்து
வெள்ளம் பெருகிப் பயிர்களழுகிப் போவதைக்கண்ட பாணர்
காய்ந்த குச்சிகளையு முலர்ந்த விலைகளையும ஒன்று சேர்த்து
நெருப்பு மூட்டிச் சுவைமலிந்த பாலான் வந்த நெய்யை யதனுட்
சொரிந்து தீயைப் பரப்பினர், அவ்வாறு செய்யின், தீக்கடவுள்
மகிழ்ந்து துணைபுரியும் என்று நினைத்தனரென்க. இதனைக்
கண்ணுற்ற ஆரியரிற் சிலர் கடவுளை மகிழ்விக்க வெண்ணுங்காலை
யில் முழு ஆடுமாடுகளையே கடவுளர்க்களிக்க நினைத்து அவற்றை
வெட்டி வீழ்த்தி நெருப்பிற் போட்டனர். இங்கு அன்பர்கள்
பொன் முட்டையிட்ட வாத்தின் கதையை நினைவுபடுத்திக்
கொள்க. பாணர் ஆடுமாடுகளின் பாலையும் நெய்யையுமளித்த
னர். ஆரியரோ அவற்றின் பாலனைத்தையும் நெய் கொடுக்கும்

பொருள் அனைத்தையு மொருங்கே கொடுக்க நினைத்து அவற்றை யடியோடொழித்துப் போட்டனர். ஆரியரின் மதி என்னே! எவ்வாறாயினும் கடவுளை மகிழ்விக்கவும் அவர் சினத்தைத் தணிவிக்கவும் முதன் முதலில் வழிதேடியறிந்தவர் தமிழரே யாவர். அவர் கொண்ட முறையின் வழி வந்ததே ஆரியரின் வேள்வியாகும்.

## நையாண்டி

[திரு. கபசம் அவர்கள்]

குடியர்களாகிய நண்பர்களே! உங்களுக்கு நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் நீங்கள் வெட்கப்பட்டுக் கொண்டு சும்மா விருப்பீர்களானால் சீக்கிரத்தில் உங்கள் குடியே இல்லாமல் ஒழிந்துவிடும். எல்லோரும் ஒன்றாகக் கூடுங்கள்; உங்களுக்குள்ளிருக்கும் வித்தியாசங்களை உடனே நீக்கி விடுங்கள். ஒற்றுமையில்லாவிட்டால் ஒன்றும் நடவாது. ஒயின், உவிஸ்க்கி, பிராந்தி, சாராயம், கள்ளு என்ற வேற்றுமைகள் உங்களுக்குள் இருந்து வருவதால் நீங்கள பொது நன்மைக்காக ஒன்றுபட்டு உழைக்க முடியவில்லை. சாராயம் சாப்பிடுகிறவன் கள் உண்கிறவனைத் தாழ்வாகக் கருதுகிறான்; பிராந்தி குடிக்கிறவன் சாராயத்தை இழுக்கிறவனைக் கீழாக நினைக்கிறான். இதில் என்ன நியாய மிருக்கிறது? கள்ளுஞ் சாராயமும் சுதேச வஸ்துக்களாதலால், அவை மேலாக மதிக்கப்பட வேண்டும். நாட்டு நூலுக்கும் நாட்டுத் துணிக்கும் மதிப்புக் கொடுப்பது போல், இவற்றிற்கும் மதிப்பு இருக்க வேண்டும். அறியாமையால் நீங்கள் பல பிரிவுகளை வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிறீர்கள். நீங்கள் எல்லாரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். உங்களுக்குள் எந்த வகையான வேற்றுமையும் இருக்கலாகாது எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம். நேற்றுப் புறப்பட்ட காப்பிக் குடியர்களைப் பாருங்கள்! அவர்கள் ஊக்கத்துடனும் ஒற்றுமையுடனும் வேலை செய்து, ஒருவர்க்கொருவர் உதவிசெய்து எங்குப் பார்த்தாலும் காப்பிக்கடைகளை ஏராளமாய் ஏற்படுத்தி எவ்வளவு உன்னத பதவிக்கு வந்துவிட்டார்கள்? சோடாக் குடியர்கள் இதை விட உயர்ந்த நிலையிலிருக்கிறார்கள். உங்களுடைய வரலாறு என்ன? புராண இதிகாசங்களில் எல்லாம் உங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. உலகந் தோன்றியது முதல் குடியர்கள் இருந்தார்கள் என்று சொல்வது தவறாகாது. பூர்வீக குடிகளாகிய நீங்கள் அசதியாலும் மறதியாலும் மிகக் கீழான நிலைமைக்கு வந்து விட்டீர்கள். உங்களுடைய மூதாதையர்

அஞ்சா நெஞ்சினராய், ஆண்மை நிறைந்தவராய், செல்வாக்கு மிகுந்தவராய், சீருஞ் சிறப்பு முடையவராய், பேரும் பெருமையும் வாய்ந்தவராய், பொருளும் புகழும் படைத்தவராய், உலகமெங்கும் பரவி உயர் நிலையிலிருந்தனர். அந்த மகிமையும் மாட்சிமையும் உங்களுக்கும் வேண்டுமானால், குடியர்களை எல்லாம் கூவியழையுங்கள், கூப்பிட்டுச் சொல்லுங்கள், கூட்டம் போடுங்கள், கூச்சல் போடுங்கள். தேயிலை நீர்க்குடியர்கள் தாராளமாய்க் கடைகளுக்குப் போய் எந்த வேளையிலும் தங்களுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு சாப்பிடுகிறார்கள். கள்ளுக்கடைகளும் சாராயக்கடைகளும் ஜனங்கள் நெருங்கி வசிக்குமிடங்களில் இருக்கக்கூடாதென்றும், ஊருக்கு வெளியே ஒதுக்கான விடங்களில் இருக்கவேண்டுமென்றும் துரைத்தனத்தார் உத்தரவிட்டிருக்கிறார்கள். நீங்கள் அவ்விடங்களுக்குப் போகவேண்டுமானால் தலையிலே முக்காடிட்டுக் கொண்டு போகவேண்டிய நிலைக்கு வந்துவிட்டது. என்ன பாவம்! என்ன பரிதாபம்! விழியுங்கள், எழுந்திருங்கள்; நீங்கள் கருதியது கைகூடுமட்டும் ஓயாது வேலை செய்யுங்கள்.

இன்னுமொரு முக்கிய செய்தி. சென்னைநகரில் நீங்கள் ஒரு பெரிய மகாநாடு சேர்க்கவேண்டும். நீங்கள் கவலையின்றிக் கருத்தின்றி உங்கள் குடிப்பெயரைக் கெடுத்துக் கொண்டதால், குடிக்குந் தொழிலில் நிபுணர்களாயிருக்கும் பலர் உங்களோடு கலந்துகொள்ளாமல் வேறு வகையினரைப் போல் நடிக்கின்றனர். ஆனால் நீங்கள் தைரியமாய் முன் வந்து உங்களுடைய உரிமைகளுக்காகப் போர் தொடங்குவீர்களானால், இரகசியமாய்க் குடித்துக் கூத்தாடுகிற அநேக ஆயிரம்பேர் வந்து கூடிக்கொள்வார்கள். ஒரு இலக்ஷம் பேர் ஒன்றாகக்கூடிக் குடியர்களின் நிலைமையை உயர்த்தும்பொருட்டுப் பல தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும். இந்த மகாநாடு முடிவுபெற்றபின் நீங்கள் ஒரு பெரிய ஊர்வலம் ஒழுங்கு செய்ய வேண்டும். ஊர்வலத்தின் முதலில் இந்தியாவிலுள்ள ஆங்கில படைகளைச் சேர்ந்த 500 சோல்ஜர்களைப் போகச் செய்வது நல்லது. இவர்களெல்லாம் பொறுக்கியெடுத்த பீர்க்குடியர்களாயிருத்தல் அவசியம். இவர்களுடன் இந்தியருங் கலந்து கொள்ளலாம். வேற்றுமையே இருக்கக் கூடாது. இவர்களுக்குப் பின், இடது கையில் நுரைபொங்குகிற கள்ளு மொந்தைகளும், வலது கையில் ஒளி வீசுகிற கூரிய அரிவாள்களு முடைய ஆயிரம் கள்ளுக்குடியர்கள் அணிவகுத்துச் செல்லவேண்டும்.

“எள்ளுக்கு ளெண்ணெய்போல் எங்கும் நிறைபொருளே
கள்ளுக்குப் போதைதந்த கருத்தே பராபரமே”

என்றிவர்கள் பாடிக்கொண்டு போக, வக்கீல்கள், துரைத்தன உத்தியோகஸ்தர்கள் நிரம்பிய பிராந்திப்பட்டாளம்; "பிராந்திக்கி, ஜே" என்ற சத்தத்துடன் அழகு பெற அசைவாடித் தாளத்துடன் அடி எடுத்து நடந்துபோகவேண்டும். இப்படியே இன்னும் பல வரிசைகள் ஒன்றின் பின் ஒன்றாய் ஒழுங்காக அமைந்து சென்னை நகரின் முக்கிய வீதிகளின் வழியாய்ச் செல்லுமாயின், 'குடி அரசு' எவ்வளவு மகிமையுடன் விளங்கும்? நண்பர்களே! இன்னும் பேசிக்கொண்டு போவதில் பயனொன்றும் இல்லை. இந்திரன் முதலிய தேவரும், முடியணிந்த மன்னர் பலரும், காளி, கூளி, காட்டேரி, கருப்பன், பாவாடைராயன் முதலிய சில்லரைத்தெய்வங்களும் உங்களுக்கு உதவியாயிருப்பார்களென்பதில் ஐயமில்லை. காங்கிரஸிலுங் கூட உங்களுக்கு உதவி புரிபவர் சிலர் இருக்கிறார்கள் என்று கேள்வி. வெறியிருக்கும் போதே நான் சொல்லுவதை விரைந்து செய்யுங்கள்.

---

## 'தொண்டர் படை'

[இலங்கை திரு. சே. சின்னத்தம்பியவர்கள்]

(௫௨௫-ம் பக்கத் தொடர்ச்சி)

நம் 'தொண்டர் படை'யானது உழைக்க வேண்டிய துறைகள் மூவகைப்படும். அவை தாம் சமயத்துறை, தாய் மொழித்துறை, சமூகத்துறை என்பன. இம்மூன்று துறைகளும் நம் நாட்டில் மிகக் கேடான நிலையுற்றிருக்கின்றன. சமயச்சார்பாக நிகழும் புன்மைகளோ எண்ணிறந்தன; சமய அறிவு பெற்றவர்களும் நம் நாட்டில் மிகச் சிலரேயாவர். நம் தாய் மொழியின் நிலையோ? அது செப்பவேண்டியதில்லை. பண்டொரு காலத்தில் பல புலவர்கள் இருந்தார்கள். நூல்கள் பல இயற்றினார்கள், மொழியும் வளமுடன் நிலவிற்று. இக்காலத்தில் புலவர்களும் இல்லை; மொழியும் இறக்கும் தறுவாயில் இருக்கிறது. என்ன ஊர்க்கதை நிகழுகின்றது. நம் நாட்டுச் சமூக நிலையோ மிகவும் கேவலமான நிலையில் இருக்கின்றது. தமிழ் நாகரிகத்திற்கும் உயர்விற்கும் முழுதும் மாறான சமூக ஒழுங்குகள் பல நம் நாட்டில் நிலவுகின்றன. அண்மையில் சமூக சீர்திருத்த நோக்கமாகச் சென்னையில் "சீர்திருத்தக்காரர் மகாநாடு" என்று கூடியதும் அன்பர்கள் நினைவில் இருக்கும். எனவே இம்மூன்று துறைகளிலும் இறங்கி நம் நாட்டை உயர்வடைய வளம்படச் செய்வதே 'படை'யின் நோக்கமென்றுணர்க. 'படை' முயற்சி

களுக்கு எதிர்ப்புகள், ஊறுகள், தடைகள் பல நேர்தல் கூடும். ஆயின் அவற்றையெல்லாம் எளிதில் வென்று விடலாம்; வேண்டுமானால் அறப்போர் நிகழ்த்தி அவற்றை அகற்றி விடுதலும் செய்யலாம். முதன் முதல் நம் நாட்டுச் சமய நிலையை நோக்குவோம். பழமையை நூல்களின் துணை கொண்டு வரலாற்றொளியில் நோக்குங்கால், இவ்வுலகத்தில் முதன் முதல் கடவுளுண்மை கண்டவர்களும், கடவுட் காட்சிக்குரிய நெறி வகுத்தவர்களும் நம்முன்னோர்களேயென்பது வீக்க தாக்கமில்லா நேர்மையாளர்க் கெல்லாம் ஒப்ப முடிந்த வொரு கொள்கையாக இலங்கும். பிறநாடுகளில் கடவுட் கொள்கையானது அரும்புங் காலத்தில் நம்நாட்டில் சைவமுதலா மளவில் சமயங்கள் முறுகி வளர்ந்து முதிர்கனிகளாயிலங்கின வென்னும் உண்மை யாவர்க்கும் உடம்பாடாய தொன்றெனக. தொல்காப்பியம் முதலிய நம் பழைய நூல்களிற் பரந்து கிடக்கும் 'சித்தாந்த' மறைநுண் பொருள்களைப் பார்க்குங்கால், அக்காலத்திய நம் முன்னோர்க்குச் 'சமய' அறிவு எத்துணை ஆழமும் அகற்சியும் நுட்பமும் உடையதாய் இருந்ததென்னும் உண்மை மிகவும் அழகாய் நம் முன்னே ஒளிரும். பொருள்களையெல்லாம் முப்பாற்படுத்தி, கடவுள் உயிர் மலம் எனும் மூலப் பொருள்கள் மூன்றின் விரிவையும் தொடர்பையும் நுனித்து நம் முன்னோர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். அவர்களது முதிர் அறிவும் நுண்மதியும இவ்வாராய்ச்சிகளில் நிறைந்து விளங்குகின்றன. இவ்வுலகத்தின் பல அமைப்புக்களையெல்லாம் துறைபோக ஆராய்ந்து, இப்பன்மைப் பெருக்கில் அரியதோர் அழகிய ஒருமையைக் கண்டார்கள். இவ்வொருமையில் அண்ட கோடிகளெல்லாம் ஒழுங்காய் இயங்குவதையுங் கண்டார்கள். இவ்வியக்கம் அவர்களுக்கு ஒரு அழகுக் காட்சியை வழங்கியது. இயக்க முதலும் ஒரு இன்ப அழகிய பொருளாகவே அவர்கள் கருத்தில் தோன்றிற்று. இம் முதற்பொருளை இயற்கையெங்கும் கண்டார்கள்; செங்கதிர் ஞாயிற்றிலும் தண்கதிர்த் திங்களிலும், மால்வரையிலும், மலர் வனத்திலும், ஆற்றிலும், கடலிலும், அகல் விசும்பிலும், யாண்டும் இம்முழுமுதற் பொருள் உறைந்திருப்பதை உணர்ந்தார்கள்; கண்டார்கள்; காட்சி இன்பத்தில் திளைத்தார்கள். 'முருகு' என்றும் 'கந்தழி' என்றும் அப்பொருளை அழைத்தார்கள்; அன்புமலர் கொண்டு வழுத்தினார்கள். பின் அப்பொருளொடு கிழமை பூண்டு 'முருகன்' என்று உறவாடினார்கள்; மணந்தார்கள்; இறவாத இன்ப அன்பிற் றேங்கினார்கள். இஃதே நம் பழம் பழம் முன்னோர் கண்ட கடவுளும், அதன் பயனாகிய இன்பப்பேறும் என்றறிக. 'முருகு', 'கந்தழி' என்று அரும்பிய கடவுட் கொள்கையானது

நாளடைவில் 'முருகன்' 'அம்மையப்பன்,' 'இன்பக் கூத்தன்' 'மாதொருபாகன்' என்று பல்லிதழ் மலராய்த் தமிழகத்தில் அழகுடன் அலர்ந்தது. பரத கண்டத்தில் பரந்து கிடக்கும் பல்லாயிரச் சமயங்களின் திரண்ட கருத்துக்களை யெல்லாம் தன் னகத்தடக்கித் தெளித்துக் காட்டும் நிலையில், தமிழர் நெறி யாகிய 'சைவ' நெறி இருக்கின்றது.

"ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித்தாந்தத் தேன்"

என்று இக்கருத்திற் கிணங்கவே அண்மையில் ஒரு பெரியாரும் கூறிப் போந்தார். இத் திரு நெறியானது பழந்தமிழ்ச் சான் றோர்களால் விதைக்கப்பட்டுப் பின்வந்த பெரியோர் பலரால் காதலுடன் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. ஆயின் இப் பெரு நெறியானது இக்காலத்தில் மிகவும் பெருமை குன்றி நிற்கின் றது. குருடர் நெறியென்றும், அறிவிலார் சமயம் என்றும் "சைவசித்தாந்தம்" இக்காலத்தில் பெரிதும் இகழப்பட்டு வரு கின்றது. 'ஒடுங்கிய நோக்குள்ளவர்கள்' என்றும், 'பழங் கொள்கையாளர்கள்' என்றும் (Narrow-minded Conservatives) சைவ சித்தாந்திகள், சைவத் திருநெறியாளர்கள் எள்ளி நகையாடப்பட்டு வருவதையுங் கண்டிருக்கிறேன். இருபதாம் நூற்றாண்டுக்குரிய அகலறிவும், புத்தொளியும் சைவாகளி னிடத்தில்லையாம்! இருபதாம் நூற்றாண்டில் 'சைவசித்தாந்தம்' நிலவுதற்கு உரிமையும் இல்லை; இடமும் இல்லையென்று புதிதின மாணவா பலர் மேடைகளினின்றும் உரத்துக் கூறவும் கேட் டிருக்கிறேன். இவற்றிற் கெல்லாம் காரணம தேடி அலைய வேண் டியதில்லை. இக்காலத்தில் நம் சமயமானது தாங்கி நிற்கும் கோலமே இவ்விகழுரைகட்கெல்லாம் முதற் காரணமென்றறிக. திருமூலனர், மணிவாசகனர், ஆளுடைய பிள்ளை, மெய்கண்ட தேவர் முதலிய சான்றோர்களால் வளர்க்கப்பட்ட "சைவசித் தாந்தம்" வேறு ; இக்காலத்தில் எம்மிடை வழங்கும் "சைவ சித்தாந்தம்" வேறு. வைதிகப் புராணங்களும், சுமார்த்த நூல் களும் நம் சமயத்திற்கு அழகளிப்பன, அரண் செய்வன என்று சிலர் எண்ணி அவற்றை அதற்குப் புனைந்து விட்டார்கள். இந்தச் செம்மை சான்ற சீரிய புனைவின் திருக்கோலமே நம் சமயத்தின் அலங்கோல மென்றுணர்க. புராணக் குப்பைகளா லும், சுமார்த்தச் சூழ்ச்சிகளாலும் நம் சமயத்திற்கும் நாட்டிற் கும், மொழிக்கும் விளைந்த கேடுகளோ அளவிறந்தன. இந்த வீண் குப்பைகளை யெல்லாம் நம் சமய உலகினின்றும அகற்

றித் தூய்மை செய்தலே படையின் முதற்றொண்டு என்றறிக. பார்ப்பான் முதுகிற்றான் இந்தக் குப்பைகளையெல்லாம் ஏற்றி விடல் வேண்டும். அவனே இவற்றை நம் சமயத்துட் புகுத்தியவன். இக் குற்றத்திற்குத் தீர் திறன் குப்பைகளையெல்லாம் அவன் சுமத்தலேயாகும். புராண சுமார்த்தப் பொய்ப்புன் சுருட்டுகளி னிடையில் நம் அருளொளி நூல்களெல்லாம் மறைந்து கிடக்கின்றன. மீண்டும் தமிழகத்தில் சைவ மணி நூல்கள் முன்போல் தனிமையாய் நிற்றல் வேண்டும்.

நமது சமயத்தின் மாண்பைக் கெடுத்து நிற்கும் கோட்பாடுகளும் ஒழுங்குகளும், அமைப்புக்களும், சடங்கு முறைகளும் உடனே களையப்படல் வேண்டும். இறை வழிபாட்டிற் குரிய முறைகளும் செய்கைகளும் (Riteals) திருந்திய வகையில் வகுக்கப் பெறல் வேண்டும். கோவில்களில் வடமொழி வேண்டாம்; பார்ப்பனத் தரகர் வேண்டாம்; புராணப் படிப்பும் வேண்டாம். ஆண்டவன் அருள் இல்லங்களில் எத்தனை எத்தனை புன்மைகள்! உயர்வு தாழ்வு; மூல மண்டபம், இடை மண்டபம் வெளி மண்டபம்! மூலத்தில் பார்ப்பானும்; இடையில் வேளாளனும்: வெளியில் பிறரும்! என்ன அநாகரிகம்! என்ன கொடுமை! கோயிலின் கண்ணுள்ள திருவுருவங்களை யாம் ஒருவரும் நண்ணுதலும் ஆகாது; தீண்டுதலும் ஆகாது; பார்ப்பான் என்னவும் செய்யலாம். பல்லிகள் எச்சம் இடலாம்; பறவைகள் கூடு கட்டலாம்! இவை யெல்லாம் சைவ சித்தாந்தமா? என்று கேட்கிறேன். அன்பர்களே! இவையெலாம் பரம்பரை வழக்கமாய்க் கண்மூடி ஒழுக்கமாய் வந்தனவேயன்றிப் பழைய நூல்களின் சார்பால் வகுக்கப்பட்டன வல்லவென்று தயங்காது சொல்லுவேன். ஆகையால் அச்சமின்றி இக்கட்டுப்பாடுகளை யெல்லாம் உடைத்தெறிதல் வேண்டும். வடமொழி, தேவர் மொழி, இறைமொழியென்ற கட்டுக்கதை இந்து சமுத்திரத்தில் தாழ்க்கப்பட்டது. அந்தப் பேய்க் கதைக்கு அஞ்ச வேண்டியதில்லை. தேவர் மொழி யென்றொரு மொழி உலகத்தில் இல்லவே இல்லை யென்று நாம் நன்றாய் உணர்தல் வேண்டும். உண்மையே பேசும் காந்தியடிகள்தாமும் வடமொழி தேவர் மொழி யென்று செப்பினும் கூட நாம் அதை ஒப்புக் கொள்ளப் போவதில்லை. உலகத்திலுள்ள மக்களுக்கெல்லாம் தம் தம் தாய் மொழியே சிறப்புடையது; அதுவும் இறை வழிபாட்டிற்குத் தாய் மொழிபோல்,—தாய் மொழிப் பாடல்களைப்போற் சிறப்புடையன பிறிதொன்றும் இல்லை. ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்துவ மதம் பரவி வந்து வேரூன்றி இருக்கும் காலத்தில் (Luther) லூதர் என்றொரு பெரியார் பிறந்து கத்தோலிக்கக் கிறிஸ்துவ மதக்

கொள்கைகளுட் பலவற்றையும் வழிபாட்டு முறைகள் பலவற்றையும் நீக்கிப் புதியதோர் நெறி (Protestantism) வகுத்தது அன்பர்கட்குத் தெரியுமென நினைக்கிறேன். கத்தோலிக்கர்கள் இலத்தீன் மொழியிலேயே செபங்களும் வேண்டல்களும் பாடல்களும் நிகழ்த்தினார்கள். உலூதரோ இலத்தீன் வேண்டாமென்று மறுத்தார்; ஒவ்வொரு நாட்டினரும் தம் தம் மொழிகளில் வழிபாடு ஆற்றலாமென்னும் சிறந்த கொள்கையை நாட்டினார். இன்றைக்கு (Protestant) கிறித்துவ உலகமெங்கும் இக்கொள்கை கையாளப்பட்டு வருகின்றது அதுபோல் நாங்களும் வடமொழியை அஞ்சாது உதறிவிடுவோம்; நம் மருமைத் தாய்மொழியை உயர்விலும் தாழ்விலும் எப்பொழுதும் தழுவிக் கொள்வோம். இதுவே யாம் செய்யும் தொண்டுகளிற் பெருந் தொண்டென்றறிக. மணவினை பிணவினை காலங்களிலும் பார்ப்பானின்றியும் வடமொழியின்றியும் யாம் சடங்குகளைச் செய்தல் வேண்டும். இவை போன்ற ஒழுங்குகளை யெல்லாம் 'படை'யானது வகுத்துக் கொண்டு தொண்டாற்ற இறங்குதல் வேண்டும். எப்படியாயினும் நமது சமயத்தைத் தூய்மைப்படுத்திப் புதுக்க வேண்டுமென்பதே நோக்கம்.

இரண்டாவதாக நம் தாய்மொழி நிலையை நோக்குவோம். உலகத்திலே யுள்ள மொழிகளுள் தொன்மை வாய்ந்த செம்மை மொழிகள் மிகச் சிலவேயாம். அவற்றுள்ளும் நம் தமிழ்மொழியே தொன்மை கூடியது. இலத்தீன், கிரேக்கு சமஸ்கிருதம் போன்ற மொழிகளோடொப்ப நம் தாய் மொழியும் கலை நலம் நிறைந்த வொரு செம்மொழி யென்பது மேல் நாட்டார்க்கும் தெரிந்த ஒரு உண்மை. சொற்சுவை பொருட்சுவை தரும்பும் நூல்கள் பலப்பல நம் மொழியில் இருக்கின்றன. வாழ்வு நெறி கோலும் வள்ளுவர் நூல் போன்ற விழுமிய நூல்களும் இருக்கின்றன. தமிழ் நூற்பரப்பை—தமிழ் இலக்கியக் கடலை நோக்குங்கால் ஆண்டு பல மணிகள் ஒளிர்வதைக் காணலாம். திருக்குறள், திருக்கோவையார், கலித்தொகை, சிந்தாமணி, சிலப்பதிகாரம் இராமாயணம், பெரிய புராணம் முதலிய மணி நூல்கள், செழுஞ் சுவை நூல்கள் நம் மொழிக் குரியன. இப்பழந் தமிழ் நூல்களில் இயற்கைத் தேவி கோயில் கொண்டிருக்கிறாள். இயற்கை அழகும், தெய்வ அன்பும் இப்பழைய நூல்களிற் சிறந்து இலங்குகின்றன. பழந்தமிழ் நூல்களெல்லாம் உண்மைப் பாட்டுகள், பழைய புலவர்களெல்லாம் உண்மைப் புலவர்கள். பாட்டிற்குரிய பல்வகை வனப்புக்களும் வளங்களும் நம் பழம் பாடல்களில் நிறைந்திருக்கின்றன. இயற்கை எழுத்தோவியங்கள், தெய்வப் பாடல்கள், வீரப்பாக்கள், காதற் காவியங்கள், நிறைந்த நம்மொழி இக்காலத்தில் உற்றிருக்கும் நிலை மிகவும்

இரங்கத்தக்கதா யிருக்கிறது. நங் கன்னித் தமிழின் இள நலங்களை யெல்லாம் கண்டு சுவைத்த புலவர் பெருமக்களாகிய சுந்தரம் பிள்ளையும், பாரதியாரும் பகர்ந்த செஞ் சொற்கள் எனது செவிகளில் ஓவாது அமுத இசை ஊற்றிக்கொண் டிருக்கின்றன. இவ்வுயர்மொழிக் குரியராய்ப் பிறந்ததும் நம் தவப்பயனே யென்க. "தமிழனாகப் பிறந்து தமிழ்ச் சுவை யுணர்ந்த ஒருவன் வீடு பேற்றையுங் காதலியான். அவனுக்கு வீடுபேறு தமிழின்பமே யாகும். அவன் மீண்டும் மீண்டும் தமிழனாகப் பிறந்து தமிழ்ச் சுவை மாந்தின்புறவே விரும்புவன" என்று சமரச வள்ளல் திரு. கல்யாண சுந்தர முதலியார் சொல்லுகிறார். இத்தகைய நலம்வாய்ந்த நம்மொழியானது இத்துணை இழிவடைந்து நிற்பது எமக்கெல்லாம வெட்கமே யன்றிப் பிறிதென்கொல்! ஐம்பதாண்டுகளுக்கு முன் இலக்கண அமைப்பில்லாச் சிறுமொழியாயிருந்த வங்காளம் இன்றைக்கு இருக்கும் நிலையென்ன? அன்பர்களே கூர்ந்து சிந்தியுங்கள். வங்காள நாட்டில் தாய்மொழி தெரியாதவர்கள், கல்லாதவர்கள் இருப்பார்களோ என்று ஐயுறக் கூடிய நிலையில் ஆண்டுக் கல்வி பரந்திருக்கிறது. தாய் மொழிக் கல்வியின் பயனாய ஆண்டு அண்மையில் எத்துணை புலவர்கள் பிறந்தார்கள், பிறந்திருக்கிறார்கள். பிறக்கப் போகின்றார்கள்! நம் நாட்டிலும் தாய்மொழிக் கல்வி பரந்தால் தாகூர்த் தேவர் போன்ற பல புலவர்கள் விரைவில் தோன்றுவார்கள். மீண்டும் வள்ளுவர்கள், நக்கீரர்கள், இளங்கோ அடிகள், கம்பர்கள் நம் தமிழகத்தில் பிறப்பார்கள். வேண்டியது நாட்டுக் கல்வி, தேசியக் கல்வி, தாய்மொழிக் கல்வியே யாம். 'தொண்டர் படை' யானது பாரதியார் பணித்தாங்கு 'தேமதுரத்தமிழோசை உலகமெங்கும் பரவும்வகை' செய்தல் வேண்டும். உலகமெங்கும் பரவுமுன் தமிழகத்தில் பரவுதல் வேண்டும். தமிழ் நூல்களும தமிழ்ப பாடசாலைகளும, தமிழ்நூல் நிலையங்களும் யாண்டும் பரவுதல் வேண்டும். கண்கவர் வனப்புடன் பழந்தமிழ் நூல்களெல்லாம் அச்சிடப்பட்டுக் குறைந்த விலையுடன் வெளிவரல் வேண்டும். 'படை' ஆதரவின் கீழ் ஊர்கடோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படல் வேண்டும். இவ்வாறு ஊக்கமாகத் தமிழ் வளர்க்கப்பட்டாற்றான் அதன் செம்மையை நாடு உணரும்; நாட்டில் புத்துயிர் கிளம்பும், பின் நாட்டில் அடக்க வொண்ணாப் பெருங் கிளர்ச்சியும் இன்பப் பெருக்கும் அலைகொண்டெழும். வீரம், அச்சமின்மை, உண்மை, தியாகம், முதலிய பண்புகள் எல்லாம் நாட்டில் முறுகி வளரும். புதுக்கோள் அலைகள் (New Thought waves) பல வரை யெழுந்தாற் போன்று புலவர்களையும், ஞானிகளையும ஏந்திக்கொண்டு நம் நாட்டில் உதிக்கும். நம் பழமையெலாம் திரண்டு புது உருத்தாங்கிப் புலவர்

கள் மூலமாகப் பிறக்கும். மீண்டும் தமிழ்நாடு புதுமை இளமை யுறல் வேண்டும். இடைக்காலப் புன்மைகளெல்லாம் ஒழிந்து பண்டைப் பெருமையுடன் நம்நாடு இளநலஞ் சான்ற ஒளியுடன் மீண்டும் விளங்குதல் வேண்டும். புத்திளந் தமிழ்நாடு உதிக்கும் நாள்தான் எந்நாளோ, அறியேம். அந்நாளில் தமிழனாகப் பிறந்து தமிழின்பம் சுவைக்கும் பேறு நமக்குக் கிடைக்குமாறு ஆண்டவனை வழுத்துவோமாக!

தமிழ் வளர்ச்சியே 'படை'யின் நோக்கம். வடமொழி நம் மொழியை நசுக்கிவிட்டது. நம்மொழி தனித்தியங்க வல்ல வொரு செம்மொழி. பிறமொழிச் சொற்களின் கலப்பில்லாது புதுச் சொற்களைப் படைத்துக் கொண்டோ, அல்லது பழஞ் சொற்களைப் புதுக்கிக் கொண்டோ நம் மொழியானது வளர் தல் வேண்டும். அஃதே இயற்கை வளர்ச்சி; வடமொழியினால் நம்மொழி கெட்டவகை மொழிகள் போதும்! போதும்! தனித் தமிழ் வளர்க! தூய தமிழ் வாழ்க! தனித்தமிழ் வளர்ச்சிக்கு வேண்டிய நெறிகோலி உதவி செய்ய வேண்டியது 'படை'யின் தொண்டென்றுணர்க. இன்னும் நம் மொழியில் சில குறைகளி ருக்கின்றன. இக்காலப் பருப்பொருள் ஆராய்ச்சி நூல்கள் (Material Sciences) ஒன்றும் நமமொழியில் வடிக்கப்பட வில்லை. கணக்கு நூல்களும (Mathematics) எழுதப்படவில்லை. இந்தக் குறைகளை எல்லாம் நீக்கிப் புதுப் புது நூல்களைப் பெருகச் செய்து நம்மொழியை வளமுறச் செய்தலும் வேண்டும்.

இனி நம் சமூக நிலையை நோக்குவோம். ஒரு நாட்டின் சமூக ஒழுங்குகளே அந்நாட்டின் நாகரிகத்திற்கு அறிகுறி. நம் நாட்டுச் சமூக ஒழுங்குகள் நாகரிகத்தையா, அநாகரிகத்தையா காட்டுகின்றன? சாதி வேற்றுமை, தீண்டாமை, இளமைமணம் முதலிய சிறுமைகள் நிலவும்வரை நம் சமூகம் நாகரிக மடை தல் முடியவே முடியாது. இச் சிறுமைகளெல்லாம் தமிழர்க்குரி யன வன்று. அயல் நாட்டவர்களால், ஆரியப் பார்ப்பனர்களால் நம் நாட்டினுட் புகுத்தப்பட்ட புன்மைகள் இவையென்பதை யாம் உணர்தல் வேண்டும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'சாதி யிரண்டொழிய வேறில்லை,' என்றெழுந்த தமிழ் அலைகள் நம்முன்னே இலங்குகின்றன. மக்களிடையில் சாதி வேற்றுமை களை வகுத்துச் சாதிக்கொரு நீதியும் வகுத்து நம்மை அநாக ரிகக் குழியில் வீழ்த்திவிட்டவை ஆரிய நூல்களாம் என்பதை நாம் ஒருபொழுதும் மறந்துவிடல் ஆகாது. ஆகையால் பிறப் பால் உயர்வு தாழ்வு, தீண்டாமை, இளமை மணம் முதலிய புன்மைகள் பிறவும் உடனே களையப்படல் வேண்டும். முன்

குறித்த இரு துறைகளிலும் திருத்தம் நிகழுமேல் சமூகமும் திருத்தமுறுமென் றுணர்க. பார்ப்பனீயத்திற்கும் வடமொழிக்கும் யாம் கொண்டுள்ள பற்றையும் தொடர்பையும் அறுத்து விடுவோமானால் நம் சமயமும் மொழியும் சமூகமும் ஒருங்கே உயர்வடையும் என்று மீண்டும் உறுதியாகச் சொல்லுகிறேன். சமூக வாழ்விற்கும் தனி வாழ்விற்கும் நெறிகோலும் திருந்திய நூலொன்று நம்மிடையிருப்ப யாம் இவ்வளவெல்லாம் அலைவுற்றுத் தியங்குவானேன்? அன்பர்களே! திருக்குறள் நெறியே நம்சமூக நெறி யென்பதை உணர்மின். திருக்குறளையே அடிப்படையாகக் கொண்டு நம் சமூக மாடத்தைக் கட்டுவோம. இப்பொழுதிருக்கும் சமூகம் குலைந்து போகட்டும ஆகையால் சமூக சீர்திருத்தத்திற்கு முன் நாட்டில் தாய் மொழிக் கல்வியும் வடமொழி வெறுப்பும் பரப்பப்படல் வேண்டும். இந்தப் பெருந் தொண்டையே நம் 'படை'யானது முதன முதல் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

'படை'யின் முயற்சிகளை யெல்லாம் விரிக்கிற் பெருகும்; விரிக்க வேண்டியதுமில்லை; விரிப்பிற் பயனும் இல்லை. ஏன்? இன்னும் 'படை' வகுக்கப்பட வில்லையே யென்க 'படை' வகுக்கப்பட்ட பின் வேண்டிய விரிவுகளை யெல்லாம செய்து கொள்ளலாம். முதன் முதல் 'படை' வகுக்கப்படல் வேண்டும; தலைவர் ஒருவரைத் தெரிவு செய்தலும் வேண்டும். இவை முடிந்ததும் பிறபின். 'படை'த் தலைவராவார் சமய அறிவும் தமிழ்ப புலமையும நிரம்பிய ஒரு பெரியாராய் இருத்தல் வேண்டும். இப்படைக்குத் தலைமை பூண்டு நம்மை இயக்கவல்ல வீரர் ஒருவர் தமிழ் நாட்டில் இருக்கின்றார். தமிழ் மலையா யிலங்கும் மறைமலை யடிகளே அவரென்றுணர்க. அவரது வீரத்தைப் பற்றியும், தனித் தமிழ் ஒழுக்கத்தைப்பற்றியும், விழுமிய அறிவைப் பற்றியும் ஈண்டுப் பேச வேண்டியதில்லை. அவரது பெருந் தகைமையைப் பற்றித் தமிழ நாட்டிற்கு விரித்துரைக்கப் புகுதல் மிகையாகும். அடிகளின் தலைமையில் 'படை' வகுத்துத் தொண்டாற்றி அம்மையப்பர் திருவடிகளை யடைந்து உய்வோமாக. சிவம்.

---

# வள்ளுவர் குறளும் அன்னதன் புகழும்

[திரு. தி. பி. இராமசுப்பிரமணியனவர்கள்]

விரிந்த கடல் சூழ் இப்பரந்த பாரின்கண் எல்லாம் வல்ல இறைவனால் படைக்கப்பட்ட மக்களாகிய நாம் பெற வேண்டும் பேறுகள் நான்கு. அந்நால் வகைப் பேறும் முறையே அறம், பொருள், இன்பம், வீடு என்றமையும். இந்நான்கினுள் முன்னைய மூன்றாகிய அறமும் பொருளும் இன்பமும் இம்மண்ணுலகினனுபவிக்க வேண்டியவை. இப்பூவுலகில் திரண்ட செல்வத்துடன்வாழ்ந்து அச்செல்வத்தை அறத்துறையில் அள்ளியிறைத்து, அவ்வறப் பயனாய் இன்பம் நுகர்தல் ஆறறிவுடைய மானிடர் கடனாம். சிலர் இவ்வின்பத்தை அறத்துறை தோன்றும் அளவிலாப் பெருமகிழ் வென்பர். சிலர் அன்னதை ஒத்த காதலனுங் காதலியுங் கருத்தொருமித்து ஆதரவுபட்டு வாழ்ந்து அதனால் அன்னார் நுகரும் அன்புவழித் தோன்றும் இன்பம் என்று அறைவர். எங்ஙனமாயினும் அறஞ் செய்கையில் ஒருவனாயினும் ஒருத்தியாயினும் ஒன்றியாய்ச் செய்யின் உவப்பு மிகாதாதலின், ஒருவனும் ஒருத்தியும் ஒன்றுபட்டு அறஞ் செய்யின் அளப்பரிய மகிழ்வடைவாராகலான் "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்று துணியலாம். இத்தகைய ஒள்ளிய பொருளை வெள்ளியங்கிரிபோல் தெள்ளிதில் விளக்குவது உள்ளுவர்க்கமுதாம் வள்ளுவர் குறளே. இப்பாரின்கண் வாழ் சீரியமக்கட்கு உற்றதோழனாய் இம்மைப் பயனை இனிது காட்டி, அவ்விம்மையின் விளைவாய் மறுமையில் உயர் கதியடைய உடனின்றுதவும் ஊன்று கோல் முப்பாலும் விளக்கும் செப்பரிய சிறப்புடைய செந்நாப்போதார் செய் செந்தமிழ்க்குறளே. இப்படியின்மீது ஒருவன் தன் மனையாளோடும் இல்லறத்தை இனிது நடாத்துங்காலை அவன் தன் செல்வப் பேற்றைப் போக்கற்றவர்களுக்கும் உறுப்புக் குறைந்தார்களுக்கும் உதவி அறம்புரிதல் வேண்டும். இங்ஙனம் நல்லறத்தாலான இல்லறம் செவ்வனே நடத்துங்கால் இல்லற இறைவன் தன் இல்லக்கிழத்தியினிடம் இன்பமடைய அன்பு கொள்வான். அம்மனையாளும் அதனைத் தன் காதலனுக் கீந்து களிப்பு மிகச் செய்வள். பின் தலைவன் அவ்வின்பம் சின்னேரத்தில் சென்றவழி காணாது தியங்கி அவ்வின்பம் சிற்றின்பம் (சிறு இன்பம்) எனத்தேர்வன். அதன் பின் அவன் சிற்றின்பம் வெற்றின்பமாய் மாறும் பான்மைகண்டு அவ்வின்பத்தினவாவைத் தவிர்ப்பன். தவிர்ப்புழி, சிற்றின்பத்தால் சீரிய உயிர்கள் கட்டுண்ட தன்மை கண்டு அவ்

வின்பத்தினை உயிர்களுக்குதவிய கடவுளிடத்து அவன் உளம் பரிந்தோடும். அப்பொழுது அவன் இறைவனிடத்து நிறை யன்பு கொண்டு எங்கும் நிறையும் பெரியோன் மலர்த்தாளில் ஈடு படும் வழியை ஆராய்ந்தறிவான். இங்ஙனம் அவன் சிற் றின்ப வாயிலாய்ப் பேரின்பத்தில் புகுவன். பின் வீடடையுந் துறையில் பயிற்சி செய்வான். பயிற்சியிற் றேர்ந்து புழு வுடம்பு நீத்துப் புகழுடம்பு எய்துவன். இதுவே நால் வகைப் பேற்றின் தன்மை. இக்குணங்கள் நான்கினுள் இவண் யாம் விரித் துரைத்த மண்ணுலகில் நுகரும் அறம், பொருள், இன்பத் தைத் திறம்பட விளக்குஞ் சீரியநூல் திருக்குறளே. அறம் பொருள் இன்பத்தை நயம்படக் கொளின் வீடடைதல் மிக எளிதாதலின், யாம் திருக்குறள், வீட்டினது பூட்டுடைக்கும் பாட்டுடைச் சம்மட்டி எனச் சாற்றலாம்.

இது காறும் புகழ்ந்துரைத்த பொய்யா மொழியினைச் செய்தார் மறைந்தனராயினும், அன்னார் நாமமேனும் அவர் செய்த சீரிய குறளேனுஞ் சிறிதுஞ் சிதறுண்டன வல்ல. இந் நூலினது சிறப்பு இந்நூலரங்கேற்றப்பட்ட காலத்துச் சங்கப் பலகை யீந்த பங்கமி லன்பாலும், அள்ளியே பாவினைக்குந் தெள்ளிய புலவர் செய்த "வள்ளுவமாலை" என்னும் வளப் பரிய நூலாலும் கைலையங்கிரி போல் சாணக் கிடக்கும். இந் நூல் குல வேற்றுமை, கொள்கை வேற்றுமை, கால வேற்றுமை இட வேற்றுமை முதலியன யாது மின்றி யாவர்க்கும் பொது வாய் விளங்குந் தன்மை கண்டு ஒவ்வொரு நாட்டினரும் இப் பொய்யா மொழியைத் தத்தம் மொழிகளில் மொழி பெயர்த் திருக்குந் தன்மை வியக்கக் கூடியதே. எக் கொள்கையர்க்கும் ஒப்பு முறையில் இயற்றப்பட்ட இந்நூல் ஆசிரியர் "எம்மதத் தைச் சார்ந்தார், நும்மதத்தாரல்லர்" என்று பல்மதத்தோரும் எம் நாயனாரைப் போற்றும் பரிவு மிகவியப்பே.

இங்ஙனம் பொன்னினுஞ் சிறந்த மதிப்பிலா மாணிக்கத் தினது ஆழ்ந்த கருத்தை ஊர்ந்து நோக்கித் தேர்ந்து உரை எழுதிய செம்மல் பரிமேலழகியார். தற்பொழுது தமிழ் நாடு செய்ததவப்பயனாய் இம்மதிப்பரிய மாணிக்கம் வறியார், செல் வர் யாவரு மறியத் தமிழ் மக்களுதவியால் குறைந்த விலையில் பரவி வரும் தன்மை கண்டு மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறோம். தென் மொழி மாந்தர் திருக்குறள் பரப்புவான் செய்யும் பெரு முயற்சி எம் உளம் உவப்பிக்கும். இந்நூலினது உள்ளக் கருத்தை ஊர்ந்து நோக்கி "வள்ளுவர் நூல் நயம்" எனப் பெயர் புனைந்து திருநெல்வேலி வக்கீல் திருவாளர் ஆர். பி.

சேதுப்பிள்ளை யவர்கள் எழுதிய சிறு நூல் வள்ளுவர் குறளை வனப்புறும் உரை நடையிற் புகட்டும் மாண்பும், இந்நூலினது கருத்தறிந்து எம் அன்ப ரொருவர் சிறிது எழுத்து வாசனை யறிந்த தம் மனையாளுக்கு நாடோறும் ஒவ்வொரு குறளைப் பாடம் பண்ணி அன்னாள் தன் காதலனுக் கேற்ற கற்பரசியாகிக் குறளுக் கிணங்கக் குடித்தனம் நடத்தி ஆசிரியர் வள்ளுவர் விளக்கிய சீரிய இன்பம் செவ்வனே காட்டும் சிறப்பும் எம் அக மகிழ் வூட்டும். இன்னும் தென் காசியில் "திருக்குறள் தொண்டன்" எனப் பெயர் கொண்டு ஒரு செம்மல் நாடோறும் தம்மாலியன்றவரை மாணவமாணவிகட்குக் குறள் பாடம் கற்றுக் கொடுக்கிறார் என்பது கேட்டும், நாயனார் தோற்றிடமாகிய திருமயிலையில் "வள்ளுவர் கோவிலில்" ஞாயிற்றுக்கிழமை தோறும் காலையில் குறட் பாடங் கற்றுக் கொடுக்கப்படுகிறது என்பது அறிந்தும் யாம் கழி பேருவகை பூக்கின்றோம்.

சென்னையிலும் நெல்லையிலும் "சைவ சித்தாந்த சங்கத்தார்" குறள் பரப்ப எடுத்துக் கொண்ட திறம் எமக்கு மகிழ்ச்சி விளைவிக்கும். அக்குழுவினர் முன் இரண்டணா விலையில் தனிக் குறளையும், தற்பொழுது எட்டணாவில் திருவாளர். கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ, எம். எல். அவர்களால் செவ்வனே எழுதிய சீரிய வுரையுடன் கூடிய திருக்குறளையும் கணக்கின்றிச் சிறு தொகைக்கு விற்று மனைதோறுங் குறள் புகுத்தும் மாண்பும், திருமங்கை நகரில் (பேட்டையில்) "தின போதனாலயத்தார்" நாடோறுந் திருக்குறளைச் சிறிது சிறிதாய்ப் பரப்புஞ் செம்மையும், கொழும்பில் "மெய் கண்டான் அச்சுயந்திர சாலை" யார் ஆண்டு தோறுந் தினங் கிழிக்கும் தெய்திக் கட்டில் ஒவ்வொரு இதழுக்கும் ஒவ்வொரு குறட்பாவைப் பதித்து "மெய் கண்டான் திருக்குறள் கியாலண்டர்" (நாட் குறிப்பு) என்று பெயரிட்டு அத்தெய்திக் கட்டுகளின் மூலம் திருக்குறள் பரப்புஞ் செய்கையும் எம்மனத்தினு லார்வம் அதிகம் புகுத்தன.

நிற்க, இவ் ஐப்பசித் திங்கள் எம் நகரில் நடந்தேறிய ஓர் மணவினையில் மணமகன் றந்தையான அம்பை வக்கீலும், சேர்மாதேவித் தாலூகா போர்டு தலைவரும், வேளாளர் கல்வி யபிவிருத்தி சங்க அமைச்சரும், திருநெல்வேலி சிவதேவஸ்தானங் கமிட்டி மெம்பருமாகிய திருவாளர் கே. ஏ. சிவஞானம் பிள்ளை யவர்கள் தன் மகனுக்கும் மருகிக்கும் மணப் பூட்டு நினைப் பூட்டுதலாய் வள்ளுவர் குறளின் செவ்விய பகுதியாம் "இல்லற இயலை" இசைந்த உரையோடும் அச்சிட்டு மணவினைக்கு வந்திருந்தார் அக மகிழ விலையின்றிப் பல புத்தகங்கள்

யாவர்க்கு முதவிய செய்கை மிகவும் மகிழ்ச்சி விளைவிக்கத் தக்கதே. இங்ஙனம் ஒவ்வொருவரும் "மணப்பூட்டு நினைப்பூட்டு தலாய் மணமக்கட்கு அவர் தம் உற்ற உறவினர் பணப்பூட்டு வைப்பதினும்" திருக்குறளுக்கு உரைபூட்டி உதவல் உயர்ந்த செய்கையாகும். தற்பொழுது திருக்குறளின் பெருமை கண்டு தமிழ்நாடு—அல்ல, எந்நாடும்—அதனைப் போற்றுந் தன்மையும் அச்சிரிய பொதுமறை பிறைமதிபோல் பெருகுவதும் எமக்கு இன்பம் பயக்கும்.

"தமிழுக்குக் கதியேகதி" என்று தமிழ்ப் பாடங்களில் மாணவமாணவிகட்குத் தமிழ்ப் பண்டித பண்டிதைகள் வினய மாய்க் கூறுவதை அநேகர் கேட்டிருக்கலாம். அதாவது ஒரு வன் தமிழில் புலமை யடைய விரும்பின் கம்பரையும (க) திரு வள்ளுவரையும் (உ) வாசிக்க வேண்டுமாம். தமிழுலகு செய்த தவப்பயனுய் உதித்த கம்பரும், செந்தமிழ்க்குறள் விரித்த செந் நாப் போதாரும் முறையே இயற்றிய கம்பராமாயணத்தையும் திருக்குறளையும் நாம் நாடோறும் வாசிப்பின் தமிழில் வல்லமை பெறலாம் என்பதே "தமிழுக்குக் கதியேகதி" என்னும் தொட ருக்குப் பொருளாம். ஆகலான் இன்றே திருக்குறள் பரப்புந் திருத்தொண்டிற் புகுவோம. "வள்ளுவர் குறளும் அன்னதன் புகழும்" எம்முளம் விட்டு என்று மகலா.

திருக்குற ளென்னு நூலைத் தினந்தினம் பயில்வ தாலே
பெறப்படும் பேறு நான்கும் பெறுவது திண்ண மாலே
மறப்பதி யாது மின்றி வளம்பெறுங் குறள் பரப்பப்
புறப்பட முயல்வீர் இன்றே புத்துயிர் கொண்டு நீவிர்.

---

# புகழேந்தி—செந்தமிழ் நாடகம்

[திரு. அ நடராஜ பிள்ளையவர்கள்]

(௬௮௬-ம் பக்கத் தொடர்ச்சி

## முதலங்கம் - நான்காங்காட்சி

இடம்—பாண்டியன் அரண்மனை அந்தப்புரத்திலுள்ள நிலா முற்றம்.

காலம்—முன்னிரவு.

நடர்—கற்பகவல்லி. வெண்டாமரையாள், செந்தாமரையாள்.

(கற்பகவல்லி யணையிற் சார்ந்திருக்கப் பக்கலில்
வெண்டாமரையும்; செந்தாமரையுஞ் சூழ்ந்துபசரிக்க)
(நிலைமண்டிலவாசிரியப்பா)

**கற்பகவல்லி:—**

ஐயோ! அனலினைச் சாந்தென வப்பி
மெய்யினை வாட்டலிர்! விடுதிர் செந்தண்
பாற்கடற் பிறந்த பானிலாச் செல்வனு
மாற்கடற் படுத்தனன் மாநில மதனிற்
"கெட்டார் தமக்கு நட்டா ரில்லை"
என்றே தமிழ்மறை யியம்பிய வதனை
யின்றே கண்டனன் என்னருந் தோழிகாள்!
வெள்ளிவெண் குடநிறை விழுப்பயன் றன்னைத்
துள்ளியங் கொருவன் றுடுமென வறிதே
கவிழ்த்தா லொக்குங் கவின்மதி யொளியெனப்
புவிபுகழ் சீத்தலைச் சாத்தனும் புலவன்
உரைத்தது முழுதும்வீ ணுபசா ரம்மே.
கருப்பு வில்லுடைக் காமனுங் கொடியோன்
நெருப்பினைத் திராவக நீர்மைய தாக்கி
மதியெனும் வெண்கல மாண்புற நிறைத்துச்
சதியாய்ச் சொரிந்தனன்; சற்றும் பிசகிலை
அதோபார்! மதிபா லமர்ந்துள விசாகையும்
மதோன் மத்தனின் வளர்கலை நெருப்பாம்
நீரினைப் பொறுத்தன னின்மல வுருவினை
நீரினி லிட்ட வுப்பது நேடி
யளக்கு மளவி லகப்படா வதுபோல்
இழந்தன னின்றாள்.

**வெண்டாமரை:—**

ஏந்திழாய்! முன்ன
ரொருகா லீண்டே யோகையோ டமர்ந்து,
"புரிகுழன் மங்கையர் புல்லிடு கணவர்
மயமாய் மாறி மற்றவர் பாற்காண்
செயலுந் தன்மையுங் கொண்டு திகழ்ந்திடன்
மரபா மென்பதை வாணிலாச் சார்ந்து
கரதல நெல்லிக் கனியென விளக்குங்
கார்த்திகை திறத்தினைக் கா"ணெனக் கூறுசொற்
போர்த்திறம் விட்டுப் புலம்புவ தந்தோ!

காணத் தரியேன் காரிகாய்! வடமீன்
நாண முதலிய நாற்குணம் பூண்டு
காமுகர் செயலைக் கண்டரு வருத்துப்
பூமியை நோக்கு பொற்றொடி போன்றும்,
நம்மிடைப் பலமறை நவின்றிட விரும்பி,
"வம்மின்! வம்மின்!" என்றழைத் திடுவதை
மான மின்னியும் வயங்கிடல் காணுதி.

**செந்தாமரை:—**

வெண்டா மரையே கண்டனம் மீனென
அருந்ததி நாளை யறைந்தனை தென்? நீரிற்
பொருந்திடு மீனைப் புலரவைத் திட்ட
கருவா டன்றோ கருதிடின் வடமீன்?

**கற்பகவல்லி:—**(சிரிப்புடன்)

ஏ! சே! வடம்! வடாம்! மீன்வடாம்! ஏ! சே!
வாசே செப்பினை! வடமீன் கருவா
டாமே! அதுசரி!

(வெண்டாமரையை நோக்கி)

அயனார் நாவாம்
பூமே லமர்ந்தாள் பொருந்திடு மிடத்தைப்
பெயராக் கொண்ட பேதாய்! உன்மொழி
அயரா நகைப்பை யருத்திய தறியாய்.

**வெண்டாமரை:—**

செந்தமிழ் பயிலுஞ் சிறுபரு வத்தில்
நொந்திடுந் தலையென நுவன்றசெந் தாமரை
வடமீ னென்றையோ வடாம தாக்குவள்?
குடக்கெழு பிறையையும் பாலினிற் குத்தி
யருந்ததி யாக்குவள் இவள்போன் முன்னொரு
அருமையாம் மாமி சிறுமியா மருகியை
நோக்கியே பரணியி னுவன்றிடு மடுப்பை
யாக்கிடல் வேண்டு மகத்திய மென்றனள்
அறிவிலாச் சிறுமி யதனையே கேட்டுச்
"சிறியே னெங்ஙனந் தெண்ணீர் கொண்டு
குறுகுவ தாண்டு குறிப்பிடு வா," யென
முறுமுறுத் தனளாம்; முறுவல் பலர்கொள.

**கற்பகவல்லி:—**(புன்னகையுடன்)

நன்று! நன்று! இதனினு நன்றே!
கொன்றிடன் னுட்களை யதுவே குறிப்பாய்!

பரணியும் பரணாய் மாறிய தந்தோ!
என்னே! என்னே! கல்வியைக் கைவிடு
பெண்களி னிலைமை! பேசுவெண் டாமரைக்
கண்மணி யனையாய்! கட்டுரை யொன்றாற்
செந்தா மரையின் சிந்தையைத் திருத்த
முந்திடு வாயே, முந்திடு வாயே.

வெண்டாமரை:—

திருவினு மிக்க செந்தா மரையே!
பெருவிருந் தாய பெருந்தமிழ் மொழிகளாம்,
"வடமீன்," எனுந்தொடர், "வடக்கும் மீனும்,"
என்றே பிரித்து நன்கே யிரண்டு
வார்த்தைக ளாகக் கொண்டிடு முதன்மொழி
கூர்த்திடு திசையினைக் குறிக்கும் பெயராம்
திசையொடு பிறவாம் மீனெனுந் தென்மொழி
யிசைந்திட விறுதி யுயிர்மெய் கவ்வோ
டொழிந்திடப் புணர்ந்ததே வடமீன் ஒண்டொடீ
மொழிந்திடு மீன்மொழி முளைத்திடு செயலினை
யறைகுவன் கேண்மோ அணங்கே! மின்னெனும்
புரையறு முதனிலை புலவர்தம் வாய்வழி
வினைமுதற் பொருளாம் விகுதி புணர்ந்து
கெட்டுமுன் னீண்டு, கிளரொளி விட்டு
மின்னுவ தாயவிண் மீனினை யுணர்த்திப்
பின்னரே மண்ணினிற் பிறங்கிடு கயலினைக்
குறித்திட லானது கோதாய்! அன்றியும்,
பறியெனும் பாசம் பற்றிடு நடுவனும்
பரதன் பிறவிப் பௌவந் தன்னின்
மரணமா வலையை மாட்டியே வலிக்கத்
துடித்துத் துள்ளித் துங்கமாம் வான
வடித்தலப பெருங்கட லமர்ந்திடு பல்லுயி
ரன்றோ விண்ணி லமர்ந்திடு முடுத்திரள்?
ஆகலின், நாளினை மீனென லடுக்கும்;
பாகெனு மொழியுடைப் பைந்தொடி நங்காய்!
வடபா ணாளெனல் கருத்தாம், மதியே.

கற்பகவல்லி:—

தண்டமிழ் மொழியாந் தனிப்பெருங் கடலை
யுண்டிடு வெண்டா மரையே! உரைத்தன
வனைத்தும் வாய்மையே ஆயினு மீனினைத்
தென்மொழி யென்றதென்? தெளிந்திடின், "மீனம்,"

என்மொழி யன்றோ விறுதி மறைந்து
மீன்மொழி யாயது? மீளுட் சியெனு
மிலக்கியங் கண்டு மியம்பிய தென்னே?
விலக்கருஞ் சொல்லுடை வெண்ணகை யணங்கே!

**செந்தாமரை:**—(எளனத்துடன்)

தமிழ்நிலக் கடலையைத் தணியா விருப்புடன்
உமிழ்நீர் பெருக வுண்டிடு சிறுமிவாய்ப்
படுபய றியாவும் பகர்நிலக் கடலையாய்க்
கடுநிகர் கண்ணாய்! காண்டிட லியல்பே.

**கற்பகவல்லி:**—(முறுவலுடன்)

செந்தா மரையே விகடச் செயலின்
முந்துநின் றனையோ? முகிழ்வெல் வாயன்
பிழைப்பிற் போட்டியாய்ப் பிறந்தாய் போலும்!

**வெண்டாமரை:**—(கற்பகவல்லியை நோக்கி)

உழைநிகர் விழியாய்! உணர்வைகொல்? சிறிது
நாளா யிருவரும் நட்பினர் போல
வாளா பேசுவர் வறிதே நகைப்பர்
நாளா விர்த்தியில், நட்பது காதலாய்
மீளா நிற்கும் விரைவினி லறிகுவம்.

**கற்பகவல்லி:**—(செந்தாமரையை நோக்கி)

ஆ! கா! வியப்பே! அங்ஙன மேயோ?
தோகாய்! ஒளித்தனை மிகுதியும், துரோகம்!
நட்போ? காதலோ? நவின்றிடு வாயே.

**செந்தாமரை:**—(நாணத்தான் முகஞ்சிவந்து)

எட்பூ வினையே யிகழ்ந்திடு நாசியாய்!
காதலோ? நட்போ? கழறிட வறியேன்
மாதுவெண் டாமரை வடமொழி தென்மொழிப்
போரிற் பயந்து புகலிட மாக
வாரிக் கொண்ட வம்புரை யிதுவே.

**கற்பகவல்லி:**—

ஓதிட வறியாய்! ஆயினு முன்முகம்
வாதிட லின்றி மனவாக் கென்னு
மிருபெருந் திரையையு மெளிதா விலக்கித்

திருவே யனையாய்! திகழ்ந்திடு முள்ளம்
படுபொருள் யாவும் பன்னியே தீர்த்தது.
(வெண்டாமரையை முறுவலுட னோக்கி)
கடலை யுண்ட மடவரால்! "மீனம்,"
வடமொழி யன்றோ?

**வெண்டாமரை:**

அன்றுதென் மொழியின்
முளையிற் றோன்றி விளைவட மொழியே
காணெனும் பகுதிகொள் காட்சியா மொழியும்,
ஆளெனு முதற்கொள் ஆட்சியாஞ் சொல்லும்,
மாளெனு பகுதிகொண் மாட்சியாங் கிளவியும்,
பகுவெனு முளைகொள் பக்கமாம் பகர்ச்சியும்,
இலக்கெனு முதலி லெழுந்திடு மிலக்கண
விலக்கிய மாய வெம்முடை யொலிகளும்
முறையே காக்ஷியும், ஆக்ஷியும், மாக்ஷியும்,
நிறைவேர் பக்ஷமும், லக்ஷண, லக்ஷிய
மாம்வட மொழியென வகந்தையாற் கூறித்
தென்மொழி பழிக்குஞ் சிலர்க்கே யன்றியிவ்
வெம்மொழி வாசகம், மீன்புரை கண்ணீ!
மலயப் பொருப்பின் மாமுத லூழி
நிலவிய காலே பிறந்து நெடுமுடித்
தென்னர் புகழிலே திகழ்ந்து, முச்சங்க
நன்னர் மாடம் நலம்பெற விருந்து
வையை யென்னும் பொய்யாக் கொடியின்
மெய்யிற் றவழ்ந்து, விளங்குமெவ் வூழியுங்
காண்பேன் யானெனக் கழறீடல் கடுப்ப
மாண்பேர் காழி வள்ளல்கை யேட்டிற்
பற்றுட னெருப்பிற் பசுமையாய் நின்றும்,
கற்றவர் நெஞ்சக் கவின்பெறு தெருவிற்
சிற்றி லிழைத்துத் திகழ்ந்திட வாடியும்,
தமிழநன் னாட்டுத் தனிப்பெருந் தூண்களாம்
மூபெரும் வேந்தரை முழங்கிட வளித்தும்,
கன்னட முதலிய கவின்மொழி யீன்றுங்
கன்னியா யிருந்தநங் கன்னிநன் னாட்டுச்
செந்தமிழ்ச் செல்வியின் சீரினை யறிந்தநாம்
விட்டிட னேரிதாம்.

**கற்பகவல்லி:—**

கட்டியை நிகர்மொழிக்
காரிகாய்! இவையெலாங் கழறுசெந் தாமரை

நாரியைத் திருத்தவே வேண்டின மன்றித்
தாயினைக் குறையுறச் சாற்றிய வாகா
வேயினை நிகர்த்திடு மென்றோட் பாவாய்!
தொடார்குல மொழித்துத் துவன்றிய வெற்றித்
தடாதகைப் பிராட்டி தன்மணக் காதையை
இயம்பாய் நாங்க ளின்பினை யெய்தவே.

## தடாதகை திருமணம்

(கலிவெண்பா)

வெண்டாமரை:—(யாழ் மீட்டிக்கொண்டு)

"பூமேவு புத்தேளும் புண்மேவு கார்வணனுந்
தேமேவு ருத்திரராந் தேவரினம்—போய்மேவுஞ்
செம்பொருளின் தண்ணொளியாய்த் தேடரிய பல்லுயிர்க்கு
மம்புவியிற் போற்று மருமருந்தாய்—நம்புமடி
யார்விரும்பு மெய்ப்பொருளை நல்கும் பசுங்கிளியின்
கூரருளா னையேன் குவிமுலைக்கண்—கார்நிறமாய்க்
காணாது செவ்வாய் வெளிறாது காரயிற்கண்
பூணா பசுமைநிறம் புன்வயிறு—காணாதே
யையிரண்டு திங்க ளருஞ்சுமையுஞ் செய்யாதென்
கையிரண்டுந் தாங்கக் கவின்முலைகள்—செய்ய
வயதுமொரு மூன்றாய் வருந்திருவே! பாண்டிக்
கயற்கொடியு நாடுங் களிக்கப்—பெயலாற்
களிக்குநெடுஞ் சாதகம்போற் காசினியோர் போற்ற
தெளிக்குமணிச் செம்பொற் றிருமா—குளிக்கும்
மகுடம் புனைந்துமதி வல்லமைச்சர் தற்சூழ்
தகுமே றரியணையிற் சார்ந்து—பகுவெண்மைத்
திங்கணுதல் வெண்கமலச் செங்கமலக் கோயில்வாழ்
மங்கையர்கள் வெண்கவரி வைத்திரட்ட—சங்கையிலாக்
கஞ்சுகர்கள் சேவைசெயுங் காந்தாரன் சேரனும்
மஞ்சரினைக் கோலால் வழிவிலக்க - அஞ்சம்போற்
செந்தமிழைக் கற்றுணர்ந்தோர் செப்புமறை நூலாதி
நந்தலில்சங் கச்செய்யு ணன்குணர்ந்து—அந்தமிலாச்
சைவநூற் போதகர்சொல் சாரங் கருத்திருத்தி
மைவண்ணன் றங்கையைப்போன் மாநிலத்தைச்-சைவலம்போற்
சூழுஞ் சுமதியின்றன் சூழ்ச்சியினா லொற்றரா
லாளு மரசே! அழகெல்லாம்—வாழுகின்ற
மாடமே! வீரமெலாம் வாய்த்தபெண் சிங்கமே!

பேடனமே! யான்கூறும் பேற்றினையே—கூடியநல்
லுள்ளமொடு கேட்டுணர்வாய்! ஓங்கியவிப் பேருலகங்
கள்ளமிலாப் பேரன்பாங் காட்சிபெற—வள்ளலாம்
மெய்ப்பொருளாற் பல்லுயிர்க்கும் வில்லுமிழக் கட்டிவைத்த
வைப்புமிகு பள்ளியெனு மாட்சித்தே—கைப்புமிகு
பேதமையுந் தன்னலமும் பேராசை யும்பலவாங்
கோதமையு மான்மாக் குவலயத்தில்—ஆதரவாய்
வந்தம்மை மாட்டன்பு மாத்தந்தை சுற்றத்தார்
சொந்தவூ ரார்நாட்டார் தொல்லுலகோர்—மைந்தமைந்த
நட்டார் முதலோர்பா லுளடைவி லேபெருக்கி
நெட்டாலி னுண்விதையை நேர்கொண்டு—ஒட்டார்
உலகி லிலரா யொருபதியைப் போல
அலகிலா வன்புருவா யார்ந்து—மலநீங்கி
வீடடைதல் காண்டியிந்த வேதகத்தைச் செய்யுமன்பு
வீட்டறத்தை விட்டடைதன் மேதினியிற்—காட்டு
மொளியின்றி நுண்பொருளை யோர்துமெனச் சென்ற
களிமகனின் கட்டுரையாங் காண்பாய்—தெளியின்
'அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை' என்ற
மறைமொழியி னுட்பொருளு மன்னும்—அறற்கூந்தால்!
'கோமக்க ளெம்முறையோ வம்முறையே பூமக்கள்
போமுறையாம்,' என்றமொழி புந்தியிற்கொண்—டாமுறையா
மாமணத்தைக் கைக்கொள் வகைதேடு வாய்மானே
தேமணக்கும் பூவே! செழுந்தேனே!—பாமணக்குஞ்
சொல்லணங்கே!'' என்றனளெஞ் சூரன்மகள் காஞ்சனை
வில்லார் தடாதகைபான் மேவியன்று—மல்லார் [யும்
தடந்தோட் டடாதகையாள் தாய்முகத்தை நோக்கிக்
"குடம்போற் குவிமுலையென் கோத்தாய்—கடனாகக்
கூறியன வாய்மை கொடுமுடியைப் பாதமிடும்
வீரியராம் வேலரசர் விஞ்சையிலோ—நாரிநான்
காதலுற? அன்னாய்! கட்டழகு மாண்மையொடு
வாதிற்பின் வாங்காத வாலறிவுந்—தீதி
லுழுவலன்புங் கொண்ட வொருவனுக்கே யன்றிக்
கெழுமியவென் காதலின்பங் கிட்டா—விழுமியவென்
தாயே!'' எனக்கூறத் தான்கேட்ட வேந்திழையாள்,
"ஏ! யே! அதுவேயென் னெண்ணமுமாம்—சேயே!
நினக்கு மணமகனார் நேர்வரேல், நங்காய்!
மனக்குள்ளா நாண மலிய—தனக்குன்றாய்
நெஞ்சகத்தின் மத்தியி னின்றிடுமிம் மூன்றாகும்
வஞ்சகமு மாறி மகிழ்ந்திடுவாய்—கிஞ்சுகமே!''
என்றுரைக்க மீன்கணியு மின்னனமேல் யானதனை

வென்றியினுற் காண்பேன் விரைந்தெனவே—நன்றிச்
சுமதியொடு சூழ்ந்து தொகுபடையைக் கூட்டி
யமைதியுள்ளார் தம்மை யகற்றி—மமதையுள்ள
பூவரசர் யாரும் புறங்காட்ட வோட்டியிட்டுத்
தேவரசர் யாருந் திகைத்திடவே—காவரசோ
டெட்டாசை பற்றிநிற்பார் யாவரையும் வீட்டிவிட்டு
நெட்டா ரிமவானை நேர்குலைத்துச்—சிட்டர்வாழ்
வெள்ளி மலையடுத்து மிக்குவரு பூதகணம்
வெள்விடையா நந்தியையும் வெற்றிகொண்டு-வள்ளல்தன்
மாவரவு நோக்கி வலக்கையி லம்போடுங்
கோவிரவு நேர்மைக் கொடுமரத்தைத்—தாவி
யிடக்கையிற் கொண்டாவ மீர்த்துத்தோட் பின்னி
லடக்கமாய்த் தூங்க வரியே—றிடமகன்ற
பொற்குன்றின் மீதேறிப் போர்குறித்துப் பார்த்தெதன
நிற்கின்ற தேரி னிமிர்ந்துநின்ருள்—பொற்குன்றை
வில்லாக்கிப் புன்னகையான் மேவலரூர் மூன்றட்ட
பொல்லா மணியும் பொருக்கென்று—நல்லாண்
மணங்காணச் செல்லு மணமகன்போற் றன்னை
வணங்கா முடிமுதலா மாத்தா—ளணங்காகப்
போர்த்தணிந்து பண்டெரிந்த புத்தேளாங் காமனின்றே
ஆர்த்தெழுந்தா னென்றுலகோ ரார்ப்பரிக்கக்-கார்த்திரையிற் [யிற்
ருேன்றி யொளிக்காது துன்னுகின்ற மின்னலெனத்
தோன்றி விளங்கினுன் றாயோன்முன்—தோன்றுதலும்
சேணுளாய்ப் பொய்புகன்று சேவலெனக் கூச்சலிட்டு
வாணுளை வீணுளாய் மாற்றிவிட்டு—நாணுளாய்ப்
போக்கித் திரியும் பொறியிலியின் பொய்மமுட்டை
வாக்கிற் றவறி வழுவிவிட—காக்கவிட
மின்றி முகவெளுக்க வெச்செருக்குஞ் சென்றுவிட
நன்றியிலாத் தன்முகத்தி னுணமிக—நின்றதுபோற்
பூங்குழலாள் வீரப் பொலிவழிந்து தேரிழிந்து
கோங்குமுலை மூன்றிற் குருரமா—யோங்கு
முலைமறைய நாணம் முகமுழுதுங் கொண்டு
நிலநோக்கு விக்க நிலத்தை—முலைநோக்கும்
மாதராள் காலின் மணிவிரலாற் றுனுழுது
காதலான் நோக்கிக் கவிந்திட்டாள்—தீதின்றி
“யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்காற்
றனோக்கி மெல்ல நகு,”மென்னும்—நானோக்கங்
காட்சியாய்க் காணக் கடைக்கணித்தாள் நீலகண்டன்
சூழ்ச்சியாய் வந்து சுரும்போட்டி—மாட்சி
வலக்கரத்தைப் பற்றி மருங்கணைத்துத் தேர்மேற்

சலக்கரணை யாயமர்ந்து தம்மைக்—கலக்கமிலா
௫௫. மந்திரிகள் சூழ வளர்படைக ளார்ப்பரிக்கத்
தந்திரிக ளெக்காளந் தான்முழங்க—சுந்தரமார்
மாகதர்கள் வாழ்த்தெடுப்ப வந்தியர்க ளேத்திசைப்ப
நாகர்கள் பூமாரி நாற்றிசையும்—போகப்
புகுந்து மதுரா புரியார் மகிழத்
தகுந்தகு மென்றுபல சங்கும்—மகிழ்ந்தார்ப்ப
வந்தமண மக்களேயும் வாள்விழியாள் கண்டுவந்து
சிந்தனையாற் போற்றிச் செயன்முறையே—நந்தா
மணம் புணர்த்திச் சேர்க்க மதனும் ரதியும்போன்
௫௬. மணம்புரிந்தான் நீடூழி வாழ்ந்து.

(நிலைமண்டிலவாசிரியப்பா)

**கற்பகவல்லி:—**

நங்காய்! யாழும் பாட்டு நடக்கையான்
மங்காக் காதலர் வாழ்க்கையை யொத்தன
பொய்யில் புலவர் பொருளினி லகத்தை
மெய்யாய்க் கண்டவர் போலும், விளங்கிழாய்!

**வெண்டாமரை:—**

கண்டது மட்டு மன்று கனங்குழாய்!
உண்டது முண்டெனு வுரைக்கலாம், அன்றியும்,
புறப்பொரு ளறப்பொருள் புகன்றதென் மட்டோ?

**கற்பகவல்லி:—**

ஆமாம் திருக்குற ளாருயிர் தமக்கே
ஏமமாம் மறைப்பொருள் இருந்தமிழ் மறையே.

**செந்தாமரை:—**(மேகந் திரண்டெழ நோக்கி)
மறையே! மறையே! வானமு மறையே!
மதியு மறையே! மாநில மறையே!
மாமுகின் மறையே! மாமழை யுறையே!

(மழைபெய்ய மூவரும் போக)

(காட்சி முடிகிறது)

முதலங்கம் முற்றும்.

# சாத்தனார் பாத்திறல்

[பண்டிதர். திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்]

நம் தண்டமிழ் மொழியைப் பண்டு வளம்படுத்த நல்லிசைப்புலவருள்ளே மதுரைக்கூலவாணிகன் சாத்தனார் வித்தகக் கவித்திறம் வாய்ந்த மேதக்காரவர். "வள்ளுவர் முப்பாலால் தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு" என்பதனாற் குறிக்கப்படும் வரலாறு இவர் தமிழ்ச் செய்யுட்கள் எத்தகைய விழுப்பமுடைய வாயிருக்க வேண்டுமென்னும் கருத்துடையா ரென்பதனைப் புலப்படுத்தும். பழுதற்ற முத்தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரமளித்த சேரமுனியாகிய இளங்கோவடிகள் தண்டமிழ்ச் சாத்தன் எனவும் தண்டமிழாசான் சாத்தன் எனவும் தமது வண்டமிழ்ச் செய்யுளில் இவரை வாயாரப்புகழ்வரேல் இவரது தமிழ்ப்புலமை அற்றை நாளில் எத்துணை நன்கு மதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்? ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றுயதும், 'மணிமேகலை நூனுட்பம் கொள்வதெங்ஙன்' என்று கவிஞர் பெருமானாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவராற் பாராட்டப்பெற்றதுமாகிய இவரது மணிமேகலைக் காப்பியத்திலிருந்து இவர் தமிழ் இலக்கிய இலக்கணத் துறைபோயவர் என்பதும், அக்காலத்து நிலவிய சமயங்கள் பலவற்றையும் ஆராய்ந்து தெளிந்தவ ரென்பதும், அளவை (தருக்க) நூலின் எல்லை கண்டவரென்பதும், மற்றும் பல திறப்பட்ட கலைகளினும் வல்லுநரென்பதும் விளங்குகின்றன. படிப்பவர் நேரிலிருந்து கண்டு களிப்பதுபோலத் தோன்றும்படி மலை, கடல், வனம், நாடு, நகர்முதலியவற்றை இனிய செஞ்சொற்களால் இவர் புனைந்துரைக்கும் அழகு மிகப் பாராட்டற்குரியது. இங்ஙனம் விழுப்பமுடைய செந்தமிழ்ச்செய்யுட்களை யெல்லாம் படித்துச்சுவைத்தன்றே கவிப்பெருவேந்தராகிய கம்ப நாடர் 'செஞ்சொற்கவியின்பம்'' எனச் சீதையைப் புகழ்வாராயினர். சாத்தனாரின் இத்தகைய கவித்திறத்தை மணிமேகலையினுள்ள ஓர் காதையிலிருந்து சிறிது விளக்குதும்.

மணிமேகலையில், 'மலர்வனம் புக்ககாதை' என ஓர் காதையுளது. கோவலன் மதுரையிற் கொலையுண்டமைகேட்டு அவன் காதற்கணிகையாகிய மாதவி புத்தசமயஞ் சார்ந்து துறவுபூண்டு தன்மகள் மணிமேகலையுடன் தொண்டு செய்து கொண்டிருக்கின்றனள். காவிரிப்பூம் பட்டினத்தில் நடைபெற்ற இந்திர விழாவிற்கு வழக்கப்படி ஆடுதற்கு அவர்கள் வராமையால்

மாதவியின் நற்றாயாகிய சித்திராபதி மனம் புழுங்கி, அவள் தோழியாகிய வயந்தமாலையை அனுப்ப, அவள் மணிமேகலை யுடன் மாதவியிருந்த மலர்மண்டபத்தை யடைந்து மாதவியின் வாடிய மேனிகண்டு வருந்தி, 'நீ உன் மகளுடன் இந்திர விழா விற்கு வாராமலும், உன் மரபிற்கு ஒவ்வாத தவ வொழுக்கம் பூண்டிருத்தல் பற்றி ஊரார் கூறும் பழிமொழிகள் இன்னவை' என்று அவட்குக் கூறுகின்றனள் அதனைக் கேட்ட மாதவி 'கணவன் கொலையுண்ட கடுந்துயரைப் பொறாளாய்க் காவலன் பேரூர் கனையெரியூட்டிய மாபெரும் பத்தினியாகிய கண்ணகியின் மகள் மணிமேகலை தவத்திற்குரியளன்றி இழிந்த பரத்தைமைத் தொழிலுக்கு உரியளல்லள்' என்றும், 'இங்குள்ள அறவணவடிகளால் நால்வகை வாய்மையும் ஐவகைச் சீலமும் அறிவுறுத்தப் பெற்றுத் தவவழிப்பிற் புகுந்துளேனாதலின் யானும் அங்கு வருதற்கு உரியளல்லேன்' என்றும் கூறிவிடுக்கின்றனள். இதன் பின்னரே மேலே குறிப்பிட்ட காதை தொடங்குகின்றது.

வயந்தமாலைக்கு மாதவி கூறிய சொற்கள் வாயிலாக மணிமேகலைக்கு ஏது நிகழ்ச்சி (வினை பயன் றருங்காலம்) எதிர்ந்துளதாகலின், அவள் தன் தந்தையாகிய கோவலனுக்கும், தாயாகிய கண்ணகிக்கும் மதுரையில் நேர்ந்த வெந்துயரிடும்பை செவியகம் வெதுப்ப நெஞ்சுகலங்கி அழுது கண்ணீருகுத்துத் தான் தொடுத்துக்கொண்டிருந்த மாலையை நனைத்து விட்டனள். இங்கே மணிமேகலைக்கு ஏது நிகழ்ச்சி எதிர்ந்ததெனக் கூறப்புக்க ஆசிரியர்,

> "மாமலர் நாற்றம்போல் மணிமேகலைக்
> கேதுநிகழ்ச்சி யெதிர்ந்துள தாதலின்"

என அதனை ஓர் அழகிய உவமையுடன் படுத்துக் கூறுகின்றார். பூ அரும்பாயிருந்தஞான்று அடங்கி யிருந்து பின் போதாய் மலரும் பொழுது மணம் வெளிப்படுதலை, வினை பயன்றருங் காலம் வருந்துணை மறைந்திருந்து அக்காலம் வந்துழி வெளிப் படுதற்கு உவமை கூறியது எவ்வளவு பொருத்தமாக விருக் கிறது. இங்கேபயன்றரும் வினை மிக்க தூய்மையுடைய தொன்றாகலின் அதற்கேற்பத் தூயமலரையே தெரிந்தெடுத்து உவமை கூறுவாராயினர். மலர் தொடுத்துக் கொண்டிருக்கும் மெல்லியலின் நல்ல மெல்வினை வெளிப்படுதற்கு மென்மையுடைய மலர் மணம்வெளிப்படுதலை உவமை கூறியது மிக்க இன்பம் விளைக் கின்றது.

இங்ஙனம் மணிமேகலை வருந்துவதைக் கண்ணுற்ற மாதவி அவள் கண்ணீரைத் துடைத்து, அவளெய்திய துயரை ஒருவாறு மாற்றக் கருதி 'இத்தூய மாலை நின் கண்ணீரால் தூய்மை யிழந்ததாகலின் வேறுமாலை தொடுத்தற்கு நீ சோலை சென்று புதுமலர் பறித்து வருவாய்' என்கின்றனள். இங்கே மாதவி தன் செங்கையால் மணிமேகலையின் ஒண்முகக் கண்ணீரை மாற்றின மையை

"தாமரை தண்மதி சேர்ந்தது போலக்
காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றி"

என்று ஆசிரியர் கூறுகின்றார். அப்பொழுதலர்ந்த நறுமலரால் அழகுபெறத் தொடுக்கப்பெற்ற மாலை போன்று செஞ்சொற்களாலே தெளிவும் இனிமையும் பொருந்த யாத்த இத்தொடர் கற்றார்க்குக் கழிபேரின்பம் பயப்பதாகும். இதன்கண், தெளிவு, சமநிலை என்னுங் குணங்களும், சித்திரவண்ணமும், இல்பொருளுவமை என்னும் பொருளணியும் இயைந்துள்ளமை காண்க.

மாதவி கூறிய இம்மொழியைக்கேட்டலும், மணிமேகலையுடன் மலர் தொடுத்துக்கொண்டிருந்த சுதமதியானவள் மாதவி முகம் நோக்கி 'மணிமேகலையின் கண்ணீரைக்காணின் காமன் தன் படைக்கலத்தை யெறிந்து விட்டு நடுங்குவன்; இத்துணைப் பேரழகுடையாள் தனியே சென்று மலர் கொய்யுந்தன்மைய ளல்லள். இலவந்திகைச்சோலை, உய்யானம், சம்பாதி வனம் கவேரவனம்என்னும் பூஞ்சோலைகட்குச் செல்ல அறிவுடையோர் அஞ்சுவர். அருளும் அன்புமுடைய பகவனது ஆணையாலே பன்மரங்களும் எப்பொழுதும் பூத்துத் திகழும் உவவனம் என பதொன்றுண்டு; அவ்வனத்திற்கன்றி நின்மகள் செல்லும் தகுதியளல்லள்; யானும் அவளுடன் செல்வேன்' என்று கூறி, அழகிய பூங்கொம்புபோலும் மணிமேகலையுடன் கூடி மணித்தேர் வீதியிற் செல்லுகின்றனள். அங்ஙனம் அவர்கள் செல்லுதலைக் கூறு முகத்தானே ஆசிரியர் தமது புலமைத் திறத்தினை எங்ஙனம் வெளிப்படுத்துகின்றன ரெனக் காட்டுதலே இச்சிற்றுரையின் நோக்கம்.

(தொடரும்)

# சௌரமானமும் சாந்திரமானமும்

[திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்]

## சௌரமானம் கொள்ளத்தக்கது! சாந்திரமானம் தள்ளத்தக்கது!

வானத்திலே நக்ஷத்திரங்களும் (விண்மீன்கள்) கிரகங்களும் (கோள்கள்) நம்மைச் சுற்றிச்சுற்றி வருகிறதை நாம் காண்கின்றோம். விண்ணிலே எத்தனையோ நக்ஷத்திரங்கள் காணப்பட்டாலும் அவைகளெல்லாவற்றிற்கும் பெயர்கள் கிடையா. நக்ஷத்திரங்கள் விட்டு விட்டு மின்னி விளங்கும். கிரகங்களோ எப்போதும் ஒன்றுபோல் ஒளிரும். கிரகங்கள் தமிழில் கோளென்ற பெயரால் வழங்கப்பெறுகின்றன. கோள்கள் ஒன்பது ஆகும். அவைகளெல்லாவற்றிற்கும் முதன்மை பெற்றிருப்பது ஞாயிறே (சூரியனே). அதனால், இது 'கோளரசு' என்ற பெயரால் வழங்கப்பெறுகின்றது. மற்றைய கோள்களெல்லாம் இதனிடமிருந்தே தோன்றின. ஆதலினாலே, ஞாயிற்றுக்கிழமையே முதற் கிழமையாக, ஏனைய திங்கள் முதலிய ஆறு கிழமைகளும் இதன் பின்னரே எண்ணப்பெறுகின்றன. திங்கள் (சந்திரன்), செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஆறு கோள்களும் தங்களுக்கென இயற்கையான ஒளி இல்லாதவைகளாய்ச் சூரியனுடைய ஒளியினாலேயே ஒளிபெற்று விளங்குகின்றன. சூரியனே இயற்கை ஒளியுடையவனாய் ஏனைய சந்திரன் முதலிய கிரகங்களுக்கும் ஒளி தந்து அவைகளை விளங்குமபடி செய்பவனாயிருக்கின்றான். இராகு, கேது என்ற இரண்டு கோள்களும் கோள்களாக எண்ணப்பட்டாலும் அவை உண்மையில் உருவில்லாதனவாய்ச் சாயா கிரகங்களாக இருக்கின்றன. ஆதலின் உருவுடன் நமது கண்ணுக்குப் புலனாகும் கோள்கள், இவ் விராகு கேதுக்களைத் தவிர, ஞாயிறு முதலிய ஏழுமேயாம்.

கோளரசாகிய ஞாயிறும் அதனால் ஒளிபெற்று விளங்கும் ஏனைய ஆறு கோள்களும விண்ணில் நம்மைச் சுற்றிவருகின்றன. விண்ணில் எந்தவழியாகச் சூரியன் நம்மைச் சுற்றிவருகின்றானோ அந்த வழியாகவே மற்றைய கோள்களும் சுற்றிவருகின்றன. அவ்வழி 'விண்வழி' யென்றும், 'ஞாயிற்றுவழி' யென்றும் கூறப்பெறும். அவ்வழி ஓர் வட்டமாக இருக்கிறது. இவ்வட்டத்தில் கோள்கள் நிற்கும் நிலைகளை அளந்தறிவதற்கு இவ்வட்டத்தில் இருபத்தேழு நிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. இந்நிலைகள் அவ்-

வழியிலுள்ள அசையாத விண்மீன்களை (நக்ஷத்திரங்களை) அடையாளமாகக் கொண்டு அறியப்படுவன. இவைகளுள் முதலாவது நிலை (அசுபதி) குதிரைத்தலைபோல் உருவமைந்துள்ள விண்மீன் கூட்டங்களால் அறியப்பெறுவது. இரண்டாவது நிலை (பரணி) அடுப்புப்போலுள்ள மூன்று விண்மீன் தொகுதியால் அறியப்பெறுவது. இவ்வாறே கார்த்திகை முதலிய ஏனைய இருபத்தைந்து நிலையங்களும் ஒவ்வொரு விதமான உருவத்தையுடைய விண்மீன் தொகுதிகளைத் தமக்கு அடையாளமாகக் கொண்டு அறியப்பெறுவன. இவ் விருபத்தேழு பிரிவுகளாகப் பகுக்கப்பெற்றுள்ள ஆகாயவட்டம் தம்முள் இரண்டேகால் இரண்டேகால் விண்மீன்களை யுள்ளடக்கிய பன்னிரண்டு பெரும் பகுதிகளாகவும் பிரித்தறியப்படுகிறது. இப்பன்னிரண்டு பெரும் பிரிவுகளிலும் கோள்கள் வாழ்கின்றபடியால் இவைகள் வீடுகளென்றும், இராசிகளென்றும் பெயர் பெறுவன. இப்பன்னிரண்டு பிரிவுகளும் எவ்வாறு பிரிக்கப்பெற்றன வென்றால், கோளரசாகிய ஞாயிறு விண்வட்டத்தை எத்தனை நாட்களிற் சுற்றி வருகிறதோ அக் கால அளவைப் பன்னிரண்டு பிரிவுகளாக்கி ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு வீடாகக் கருதப்பெற்றது. ஒவ்வொரு வீட்டிலும் ஞாயிறு வாழ்கின்ற கால அளவே மாதங்களாம். இம் மாதங்கள்தான் தனித்தனி இருபத்தொன்பது முதல் முப்பத்திரண்டு நாட்கள் வரையுள்ள கால அளவாம். இவ் வளவு எக்காலத்திலும் ஒரே மாதிரியாக இருக்கும்.

இவ்வீடுகள் பன்னிரண்டும் பின்வருவன:-மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தநுசு மகரம், கும்பம், மீனம். சூரியன் மேடவீட்டிலிருக்கும் காலம் மேடமதி என்றும் மேடரவி என்றும் பெயராம். இடபத்திலிருப்பது இடபமதி என்றும் இடபரவி என்றும் பெயர் பெறும். இவ்வாறே ஒவ்வொன்றும் பெயர் பெறும். சூரியன் நம்முடைய கண்ணுக்கு நம்மைச் சுற்றிவருவதுபோற் காணப்படினும் அது உண்மையில் சுற்றுவதில்லை. அது ஒரே இடத்தில் அசையாதுள்ளது. நாம் வாழும் பூமியே சூரியனைச் சுற்றிவருகிறது. அதனால் சூரியன் நம்மைச் சுற்றுவதுபோலக் காணப்படுகிறது. பூமியைப் போலவே சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கோள்களெல்லாம் சூரியனைச் சுற்றிவருகின்றன. ஞாயிறே இக் கோள்களுக்கெல்லாம் நடுநாயகமாய் இவைகளுக்கு மத்தியிலே அசையாது அளவிலடங்கா ஒளியுடன் அரசாய் விளங்குகின்றது. சந்திரன் முதலிய கோள்கள் ஆறும் இயற்கை ஒளியற்றனவாய்ச் சூரியனுடைய ஒளி தம்மேல் விழுவதினாலே கண்ணாடிபோல் அச் சூரிய ஒளியையே வெளிவீசு

கின்றன. இவைகளுள் சந்திரன் மட்டும் சூரியனைச் சுற்றுவ தோடு நில்லாமல் பூமியையும் சுற்றிச் சுற்றி வருகிறது. கோளர சாகிய சூரியன் முன்னிலையில் சந்திரன் ஓர் மின்மினி போலு மென்று கூறுதற்கேனும் இடனின்றாம்.

சூரியனால் ஏற்படுகின்ற நாள் அறுபது நாழிகைகளை யுடை யது. இந்நாள் என்றும் ஒரே அளவினதாக இருக்கும். இதனால் சூரியனை வைத்து எண்ணப்படுகின்ற நாள், மாதம், ஆண்டு இவை கள் என்றும் ஒரே அளவினவாயிருக்கு மென்பது பெறப்படு கிறது. ஆதலினாலே பண்டைத் தமிழ்மக்கள் கோளரசாகிய இஞ் ஞாயிற்றால் ஏற்படும் காலமுறையாகிய சௌரமானத்திலேயே விரதங்கள், விழாக்கள் முதலியவைகளை யெல்லாம் ஏற்படுத்தி நடத்தி வந்தார்கள். மேலும் இவர்கள் தங்கள் கால அளவாகிய மாதங்களுக்கு மேடம் இடபம் முதலிய பெயர்களைக் கொடுத் திருந்ததுபோலவே வேறு பெயர்களையும் கொடுத்திருந்தார்கள். அவை சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்பன. இப் பெயர்களைக் கொடுப்பதற்குக் காரண மென்னவென்றால் சூரியன் மேடராசியிற் புகும்போது பூமி அதற்கு நேர் ஏழாவது வீடாகிய துலாத்திலிருக்கும். அதனாலே துலாத்தின் முதல் நக்ஷத் திரமாகிய சித்திரை என்ற பெயர் மேடமதிக்குக் கொடுக்கப் பெற்றது. சூரியன் இடபத்திற் புகும்போது அதன் ஏழாவது வீடாகிய விருச்சிகத்தில் பூமி புகும். அதனால் அம்மாதம் அவ்வி ருச்சிகத்தில் முதல் நாளாகிய வைகாசியின் பெயரால் அழைக் கப் பெற்றது. இவ்வாறே ஏனைய மாதங்களும் பெயர் பெற்றன. இவ்வாறாகப் பெயர்பெற்ற சூரியமான மாதங்களிலேயே ஆலயங் களிலும், வீடுகளிலும் விழாக்கள் நடைபெற வேண்டுமென்று பெரியோர்கள் விதியமைத்தார்கள்.

இஃதிவ்வாறாகவும் வடநாட்டிலிருந்த ஆரியர் சூரிய னுடையவும் அவனுடைய பெயர்ச்சியாலேற்படும் மானத்தி னுடையவுமாகிய பெருமைகளை ஒரு சிறிதும அறியாதவர் களாய்க் கிரகங்களில் மிகவும் அற்பமானதாய், பலவிதமாகச் சுற்றித் திரிவதாய், இயற்கை யொளியற்றதாய், வளர்ச்சி தளர்ச்சி யுடையதாய் உள்ள சந்திரனுடைய வளர்ச்சி தளர்ச் சியைக் கொண்டு காலத்தை அளந்தறிந்தனர். சந்திரன் ஒளியற் றவனாய் மறைந்திருக்கும் நாளே அமாவாசை யெனப்படும். அதன் மறுநாள்முதல் அவன் ஒளிபெற்றுக் கொஞ்சங் கொஞ்ச மாக வளர்வான். பதினைந்தாம் நாள் முழு ஒளியுடன் விளங்கு வான். அன்று பூரணை எனப்படும். மறுநாள்முதல் கொஞ்சங்

கொஞ்சமாக ஒளி குறைந்து குறைந்து பதினைந்தாம் நாள் ஒளி கொஞ்சமும் இல்லாமல் மறைந்து விடுவான். இவ்வாறாகச் சந்திரன் ஒளிபெறத் தொடங்கி முழுஒளி பெற்றுப் பின் முழுதும் ஒளியறுவது வரை உள்ள காலத்தை ஓர் மாதமென்று கருதி வந்தனர். இவ் ஆரியர்கள் பல்கித் தென்னுடைடைந்தனர். அடைந்தபோது தமிழ் மக்களுடைய மதிநுட்பத்தையும் கணித முறைகளையும் கண்டு வியந்து தாமும் தமிழ் மக்களுடைய விரத விழாக்களைக் கையாளத் தொடங்கினர்.

ஆரியர்கள் தங்கள் சந்திரமான மாதங்களுக்கும் பெயர் கொடுக்க நினைத்துத் தமிழ்மக்களுடைய சித்திரை, வைகாசி முதலிய மாதப் பெயர்களையே பெரும்பாலும் சைத்திரம், வைசாகமெனத் திரித்து வழங்கத் தொடங்கினர். சித்திரை மாதத்தில் வரும் அமாவாசையோடு முடிகிற சாந்திரமானத்துக்குச் சைத்திர மெனவும் இவ்வாறே ஏனைய மாதங்களுக்கும் பெயரமைத்துக்கொண்ட சாந்திரமானிகளாகிய ஆரியர் சில ஆண்டுகளின் பின் தங்கள் கொள்கைக்கு மாறாகச் சைத்திரம் பங்குனியிலும், வைசாகம் சித்திரையிலும் இவ்வாறே ஏனைய மாதங்களும் முடிவடைவதைக் கண்டு அஞ்சினவர்களாய்ச் சூரியனுடையமான மாதமே நிலை பெற்றதாதலினால் அச்சூரிய மாதத்தோடு தங்கள் சாந்திரமாதம் சம்பந்தப்படாது போயின் பயனற்றுப் போமென்று தெரிந்து பங்குனியோடு முடிகிற சைத்திரத்தை (சாந்திரமாதத்தை) அதிமாதமென்று தள்ளிவிட்டுச் சித்திரை மாதத்தின் அமாவாசையோடு முடிகிற மாதத்தையே நிஜசைத்திர மாதமென்று கொண்டனர். அவ் வழக்கே இன்றுவரையும் வழங்கி வருவதாயிற்று.

இஃதிவ்வாறாகவும் பிற்காலத்திய சாந்திரமானிகள் தாங்கள் கொள்ளும் விரதங்களுக்கு விதியெழுதத் தொடங்கினர். அத்துடன் நில்லாமல் தங்கள் கொள்கைப்படியே தமிழ் மக்களையும் நடக்கத்தூண்டினர். அக்காலத்திலேயே தமிழ் மக்கள் தமது ஆகமங்களிலே சௌரமானமே சிறந்தது, ஆதலினாலே சௌரமானத்திலேயே விரத விழாக்கள் நடைபெற வேண்டுமென்று விதிகள் விதித்தனர். அவ் விதிகளிற் சில பின்வருவன:-

1. பூர்வகாரணாகமம் மகோத்சவ விதிப்படலம்

"சௌரமாசம் பிரசஸ்தம்ஹி சாந்திரமாசே ப்ரசஸ்தகம்"

(சௌரமாதமே மேலானது; சாந்திர மாதம் அற்பமானது.)

2. உத்தரகாரணாகமம் சிவராத்திரி பூசா விதிப்படலம்

"சௌரமானே விரதம் குர்யாத் சாந்திரமானே நகாரயேத்."

(சௌரமானத்தில் விரதம் செய்யத் தகுந்தது; சாந்திரமானம் தகாதது.)

3. காமிகாகமம் நவராத்திரி விதி கூறுமிடம்

"சௌரமானேந கர்த்தவ்யம் ... ... ... ...
சாந்திரமானே நகர்த்தவ்யம் கிருதஞ்சேது ராஷ்டிரநாசனம்."

(சௌரமானமே கொள்ளத்தகுந்தது. சாந்திரமானம் தள்ளத்தகுந்தது. சாந்திரமானத்தில் செய்தால் தேசமே அழியும்.)

4. சிவாகம பிரயோக சந்திரிகை உத்சவப்படலம்

"மாசஞ்ச துவிவிதம்ப்ரோக்தம் சௌரஸ்யாது சாந்திரமாநகம்
சௌரமானேன கர்த்தவ்யம் விரதஞ்சோத்சவம் உத்தமம்
அதமம் சாந்திரமானேன சைவாதீனாந்து நிஷ்பலம்."

(மாதங்கள் சௌரமானமென்றும் சாந்திரமானமென்றும் இரண்டு வகையாகச் சொல்லப்படுகின்றன. சைவர்கள் முதலானவர்களுக்கு விரதோத்சவங்கள் சௌரமானப்படி செய்யத்தக்கவை. அதுவே உத்தமம். சாந்திரமானப்படி செய்வது அதமம், பயனுமில்லை.)

இவ்வாறு விதிகளியற்றியும் சிலர் மயங்கிச் சாந்திரமானத்தைக் கொள்ளத்தொடங்கியபோது பெரியோர்கள் இன்னுங்கண்டிப்பான விதிகளை விதிக்கலாயினர். அவைகளிலொன்று பின்வரும் காமிகாகம விதி.

" ... ... ... சர்வேஷாம் சௌரமாநகம்,
பரார்த்தேசால யேஷ்வேஷு சௌரமாநேந காரயேது
சௌரமானம் விஹாயாத சாந்திராதிபி: கிருதேயதி
ஆயுஸ்ரீபுத்ர நாசஸ்ச தத்கர்ம நிஷ்பலம்பவேத்."

(எல்லாருக்கும் சௌரமானம் உரியது. பரார்த்த ஆலயங்களுக்கெல்லாம் சௌரமானமே கொள்ளத்தக்கது. சௌரமானத்தைவிடுத்துச் சாந்திரமானத்திற் செய்தால் ஆயுளும் செல்வமும் குழந்தைகளும் நாசமடையும். மேலும், அச்செயலும் பலனின்றிப்போம்.)

இவ்வாராய்ச்சியினால் சௌரமானமே நிலையுடையது, தலைசிறந்ததென்பதும், அதினால் சௌரமானத்திலே விழாக்கள் விர

தங்கள் செய்யத்தக்கன என்பதும், சாந்திரமானம் நிலையற்றதும் போலியானதும் அற்பமானதுமா மென்பதும், அதனால் விழாக்கள் விரதங்கள் சாந்திரமானத்தில் செய்யலாகாதென்பதும் நிலைபெறுகின்றமை காண்க.

## அதிமாதமும் மலமாதமும்

அதிமாதமென்பது சாந்திரமானத்துக்குரியது. இது சௌரமான மாதத்தில் இரண்டு அமாவாசைகள் வரும்போது முதல் அமாவாசைக்கு மறு நாள் முதல் இரண்டாவது அமாவாசை முடிய உள்ள காலம். இவ்வதிமாதத்தினால் சௌரமாதத்திற்கு யாதொரு குறைவுமில்லை. உதாரணமாக நிகழும் விபவ ஆண்டில் ஆடிமாதம் இரண்டு அமாவாசைகள் வந்திருக்கின்றன. அதனால் ஆடிமாதம் முதல் அமாவாசைக்குப்பின் மறு அமாவாசை முடிய உள்ள காலம் அதிமாதமெனச் சொல்கின்றனர். ஆனால் இவர்கள் அதிமாதத்தைச் சொல்லளவிலேயே வைத்திருக்கின்றனர். சாந்திரமானிகளாகிய எந்தச் சுமார்த்தப் பார்ப்பனராவது சென்ற ஆடிமாதத்தில் உள்ள அமாவாசைகளையும், பிரதோஷங்களையும், ஏகாதசிகளையும் அநுட்டியாது விடுத்ததுண்டா? ஆடிமாதம் பிறந்த எவராவது தமது பிறந்தநாளை ஆடியில் கொள்ளாதிருந்ததுண்டா? ஆடிமாதத்திலிறந்த தாய் தந்தையர்க்கு எவராவது ஆடியில் திதி செய்யாது விடுத்ததுண்டோ? எவராவது சென்ற ஆடி மாதத்தை அதிமாதம் அதாவது போய்மாதம் ஆதலின் அம்முப்பது நாளும் பொய்யான காலம் அது நம்மைப் பாதிக்காதென உண்ணாதும் உறங்காதும் இருந்ததுண்டா? இல்லையே. பின் ஏன் அதிமாதம் அதிமாதமென்று கூறி உண்மை தெரியாதவர்களை ஏமாற்றவேண்டும். இவ்வஞ்சகம் என்று நீங்குமோ? சென்ற ஆடிமாதத்தில் நடைபெற வேண்டுவனவாகிய முளைக்கொட்டுத் திருவிழா எல்லா ஆலயங்களிலும் ஆடிமாதத்திலேயே நடைபெற்றது. சங்கரநயினார் கோவில் கோமதியம்மன் தபசுத்திருநாள் ஆடிமாதத்திலேயே நடைபெற்றது. வைணவர்களும் வில்லிபுத்தூரில் ஆண்டாளுக்கு ஆடித் திருவிழாவை ஆடிமாதத்திலேயே நடத்தி மகிழ்ந்தனர். இவ்விதமாக ஆடிமாதத்தில் நடைபெறவேண்டுவனவாகிய விழாக்களும் விரதங்களும் அம்மாதத்திலேயே நடைபெற்றிருப்பதை நேரிற் கண்டும் கொண்டு முள்ள சுமார்த்தப் பார்ப்பனர்கள் பின்னும் அநுட்டானத்திலில்லாத தமது சாந்திரமானத்துக்குரிய அதிமாதத்தைச் சௌரமாத மாகிய *ஆடியில் தப்பிதமாக ஏற்றிக் கூறுவதும் அதைக்கேட்டுச் சௌரமானிகளிற் சிலர் அக்கூற்

றில் மயங்குவதும் விந்தையே. இதனால் அதிமாதமும் அதனைக் கொண்டுள்ள சாந்திரமானமும் பேச்சளவிலேயே இருக்கின்றன என்ற உண்மை தெளிவாகிறது.

மலமாதமென்பது இரண்டு; பௌர்ணமி வருவது என்றும் பௌர்ணமி வராததென்றும் வடமொழி நூல்கள் கூறுகின்றன. பௌர்ணமி வராத மாதத்தை நச்சுமாதம் (விஷமாதம்) என்று சில நூல்கள் கூறுகின்றன. இவைகளின் விவரமெல்லாம் தனியே ஆராய்வோம். அதிமாத மலமாதங்கள் சௌரமானத்துக்கும் சௌரமானிகளுக்கும் இல்லை. சாந்திரமானிகளே கொள்வர்.

---

# பெருநிலக்கிழவர் பேக்கன்

[திரு. காழி. சிவ. கண்ணுசாமியவர்கள் பி. ஏ.,]

இம் மண்ணுலகை நீத்து யாண்டுகள் முந்நூறாகியும் தம் பெயரிறவாத் தன்மையோராய் இற்றை நாளிலும் திகழும் ஆங்கில நூலாசிரியர்கள் பலரினும் அரும்பெறன் மணியெனத் தலைசிறந்து விளங்கும் ஒரு சிலரில் பிரான்ஸிஸ் பேக்கன் என்பாரும் ஒருவராவர். இவரது முழுப்பெயர் வேரூலம் உடையார் அல்லது ஸெயின்ட் ஆல்பன்ஸ் வைக்கவுண்ட் பிரான்ஸிஸ் பேக்கன் என்பதாகும்.

நூலாசிரியராயும், தத்துவஞானியாயும், அரசியல் வல்லுநராயும் சிறந்திருந்த இவர் பிறந்தது ஆங்கில அரசாங்கத்தின் தலை நகராகிய இலண்டினில்தான். அந்நகரைச் சேர்ந்த ஸ்ட்ராண்ட் என்னும் பகுதியிற் கட்டப்பட்டிருந்த "இயார்க் விடுதியில்" இவர் 1561-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் நாள் பிறந்தார். இவரது தந்தையான சர் நிக்காலஸ் பேக்கன் என்பவர் ஆங்கில அரசாங்கத்தின் "பேரிலச்சினைப் பெருங்காப்பாளர்" (Lord-keeper of the Great Seal) என்ற உயர் பதவியி லிருந்தவர்; தாயோ, ஸர் அந்தோனி கூக் என்பாருக்கு மகளாகப் பிறந்து ஸர் நிக்காலசுக்கு இரண்டாவது மனைவியாக வாழ்க்கை பூண்டவள். இவ்விருவருக்கும் பிறந்த இரண்டாவது குழந்தையே பிரான்ஸிஸ் பேக்கன். இளமையிலேயே ஆழ்ந்த உளப்பான்மையும், திண்ணிய அறிவும் படைத்தோராயிருந்த இவர் விரைவில் எலிஸபெத் அரசியாரின் அறிமுகமுடையவரானார். அரசியார் வேடிக்கையாக இவரை "இளைய பெருங்காப்பாளர்" என அழைப்பதுண்டு.

பன்னிரண்டாவது ஆண்டில் தனது அண்ணனுடன் கேம்பிரிட்ஜ் நகர உயர்தரக் கல்லூரியிற் சேர்ந்து கல்வி கற்று, பதினைன்காவது ஆண்டினிறுதியில் இலண்டனிற்குத் திரும்பிவழக்கு நூல் கற்கத் தொடங்கினுர். அதன்பின் பிரான்ஸ் நாட்டு முக்கிய நகராகிய பாரீஸ் நகரத்தில் ஆங்கிலத் தூதுவராயிருந்து வந்த சர் அமியாஸ் பாலெட் என்பவரிடம் இளைய அலுவலாளியாய் வேலைபார்த்து வந்தார். இக்காலத்தில்தான் இவர் பிரெஞ்சு நாட்டுப் பேரறிஞராகிய மாண்டெயின் என்பவரியற்றிய நூல்களை அவாவுடன் கற்று அவ்வழி பின்பற்றத் துணிந்தார். இதன் பயனே பிற்காலத்தில் அவர் எழுதிய "அறிவுரைக ளாகும்.

இவ்வாறக, பத்தொன்பதாவது ஆண்டு நடைபெறுகையில் இவரது தந்தை இறந்தார். ஆகவே இவர் பாரீஸை விட்டு இலண்டனுக்குத் திரும்பி வந்து வருவாய்க்கு வழிதேட வேண்டுவதானுர். உள்ளம் இயற்கையாக அறிவு நூல்கள் கற்பதிலும், எழுதுவதிலும் சென்றதாயினும், அதற்கு மாருக வருவாய் கருதி வழக்கு நூற் பயில வேண்டியவரானுர்; 1582ல் வழக்கறிஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்காலத்தில் அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்குடையவராக விருந்த தனது பெரிய தந்தையான பெருநிலக்கிழவர் பர்லி என்பவர் தனக்கு ஏதாவது பெரியதோர் அலுவல் வாங்கிக் கொடுப்பார் எனப் பெரிதும் எதிர் பார்த்திருந்தார். அது நிறைவேருவிடினும் அவரது செல்வாக் கைக்கொண்டு இருபத்து மூன்ருவது வயதில் பாராளு மன்றத்தில் அங்கத்தினராக இடம்பெற்றுர்; விரைவில் தன் திறமையைக் காட்டி நற்பெயர் எய்தினுர்.

ஆயினும், பெரிய தந்தையான பர்லி தனக்கு வேண்டிய வழியில் எதுவும் தக்க உதவியளிக்கவில்லை யென்ற ஒரு எண்ணம் இவர் நெஞ்சத்து இடைவிடாதிருந்து வந்தது. ஆகவே அவர்க்கும் அரசியார்க்கும் எதிரிடையாகவும், எஸ்ஸெக்ஸ் என்ற பெருநிலக் கிழவர் சார்பாகவும் ஒரு முறை பாராளு மன்றத்திற் பேசி அரசியாருடைய சீற்றத்திற் காளானுர். ஆனலும் எஸ்ஸெக்ஸ் என்பவரால் தற்காலம் பன்னீராயிரம் பவுன் விலைபெறக் கூடிய ஒரு பகுதி நிலத்தை டிவிக்கன் ஹாம் என்னும் ஊரில் முற்றாட்டாகப் பெற்றுர். ஆயினும் 1598ல் அதே பெரியாரை ஐர்லாந்து கிளர்ச்சியை அடக்க மேற்கொண்டு செல்லும்படி தூண்டிவிட்டு அதில் அவர் தோல்வியடைந்து குற்றஞ்சாட்டப்பட்ட போது அவருக்கு எதிரிடையாக இவரே (பேக்கனே) நீதிமன்றத்தில் வழக்குரைத்தார். செய்ந்நன்றி

கொன்ற இவ்விழி செயல் தன் மேம்பாடொன்றையே கருதிப் பிறர் நலம் பேணாது புரியப்பட்டதாகும்.

இதற்கிடையில் 1597-ம் ஆண்டில் இவர் தன் "அறிவுரை"களின் முதற்பகுதியை வெளியிட்டார். அது பொதுமக்களால் நன்கு வரவேற்கப்பட்டு இவர்தம் கல்வியறிவையும், புலமையையும் விளங்க வைத்தது. முகஸ்துதி முகமனியம்புதல் கைம்மேற் பலன் தருவதாகும் என்ற தத்துவத்தை உண்மையாகக் கண்டு கையாளத் துவங்கினர்.

அதன் பயனாய், ஜேம்ஸ் முதலாவர் அரசுக் கட்டிலேறிய பின் 1603ல் "சர்" பட்டம் பெற்றார்; அதன்பின் 1607-ல் ஸொலிஸிட்டர் ஜெனரல் என்ற பதவியடைந்தார். 1613ல் அதனினுமுயர்ந்த அட்டர்னி ஜெனரலுமானார். தான் பிடித்த ஒன்றை எவ்விதத்திலும் முயன்று சாதிக்கும் உறுதியுடையார் என்பது இவர் பீச்மேன் என்ற ஒரு சமயகுருவைச் சித்திரவதைக்குள்ளாக்கி இறைகேடு சூழ்ந்ததாக ஒப்புக்கொள்ளும்படி செய்ததனால் விளங்கும்.

ஸொலிஸிட்டர் ஜெனரல் பதவி பெறுவதற்கு முந்திய ஆண்டில், அதாவது நாற்பத்தைந்தாவது வயதில், இலண்டன் நகரத்தில் சிறந்த வணிகராயிருந்த ஒருவரது மகளான ஆலிஸ் பார்ன்ஹாம் என்பவரை மணம்புரிந்து கொண்டார். அந்த வணிகர் இறந்த காலத்து அவர் வைத்துப்போன ஆண்டு ஒன்றுக்கு ஆயிரத்தைந்நூறு பவுன் வருவாயுள்ள சொத்து இவர் பாலதாயிற்று. அன்றியும் இக்காலத்தில் அரசாங்கத்திலிருந்தும் இவர்க்கு நல்ல ஊதியங் கிடைத்து வந்தது.

இருந்தாலும் வீண்பகட்டில் நம்பிக்கை வைத்தவராய் வருவாய்க்கு மிஞ்சின செலவு செய்து வந்தமையால் இவர்க்குக் கடன் மிகுதியாகவே எந்நாளு மிருந்துவந்தது. மணமுடிந்த பின் கெருலம் என்ற விடுதியமைக்க இவர் அளவு வரையற்ற பொருட்செலவு செய்தார். அவ்விடுதியின் பரப்பும், அதன் கண் நிறைக்கப்பட்ட அந்த மிகுந்த சாமான்களும், எண்ணிறந்த ஊழியர்களும், இவர் கட்டுத் திட்ட மற்ற பெருஞ் செலவாளியென்பதை விளக்கின. இறந்தபோது இருபத்தீராயிரம் பவுன்கள் கடன் என்றால் அதிகம் கூறவேண்டுமோ?

இது நிற்க, இவர்க்கு மகப்பேறு என்பது இல்லா தொழிந்தது. மனைவியுடன் மிகவும் ஒற்றுமையாகவும் இவர் இருந்து வந்

தாரெனக் கொள்ளலாம். ஆயினும் இறக்குங் காலத்தில் மனை விக்கு ஒன்றும் வைக்கவில்லை. மேற்குறித்தவாறு பெருங்கடன் நிற்குங்கால் இவர் வைப்பதற் கென்ன இருக்க முடியும்? இவர் கையாண்டு வந்த "முகமன்" தத்துவத்தால் "அரசரும்" அவர் உயிர் நண்பனுகக் கருதப்பட்டு வந்த பக்கிங்ஹாம் என்பவரும் இவருக்கு மிகவும் வேண்டியவர்களானுர்கள். அதனுல் 1617ல் இவர் நிறைந்த சம்பளத்தோடு கூடிய உயர்ந்த பதவியாகக் கரு தப்பட்டு வந்த "பேரிலச்சினைப் பெருங்காப்பாளர்" என்ற பத வியை யளிக்கப் பெற்ருர். அடுத்த ஆண்டில் "லார்ட் சான் ஸேல்லர்" என்ற பதவியையும் பெற்ருர். ஒன்றின்மே லொன்ரு கப் பதவிகள் உயர்ந்து வந்தன. 1621-ல் வெரூல முடையார் அல்லது ஸெயின்ட் ஆல்பன்ஸ் வைக்கவுண்ட் என்ற பெரும் பதவி யடைந்தார். இவ்வாறு தலைமைச் சிறப்பெய்திய அவ் வாண்டிலேயே இவரது தாழ்வும் துவங்கிற்று. தன் பதவிகளைக் கொண்டு நடுவிகந்து நன்பொருள் வெஃகினுர். அதற்கேற்பப் பக்கிங்ஹாம் என்பவரும் தன் நண்பர் பலரையும் இவர் மாட்டு உதவி பெற அனுப்பிவைத்தார். கண்ணை மூடிக்கொண்டு கை நிறையக் கூலி பெற்றுப் பொருளீட்டினுர்; அம்பல் முற்றி அல ராயிற்று.

நீதிமன்றத்தில் தான் கைக்கூலி வாங்கியதாக ஒப்புக் கொண்டு தன் குற்றம் பொறுக்குமாறு வேண்டினர். அரசாங்க அலுவல்கள் யாவற்றையும் விட்டு விட்டு, ஆயுட்காலம் வரை இலண்டன் கோபுரச சிறையில் அடைபட்டிருப்பதுடன் நாற் பதினுயிரம் பவுன் கட்டணம் செலுத்தவேண்டும் என்றும் தீர்ப் புப் பெற்ருர். ஆயினும் மறுநாள் அரசனது ஆணையால் சிறை வாசமும், கட்டணஞ் செலுத்தலும் நீக்கப்பட்டதாகையால், மிகுந்த தலையிறக்கத்துடன் வெரூலம் விடுதிக்குத் திரும்பினுர். அதுமுதல் இறக்கும் வரையில் வேறு வேலையில்லாதபடியால் தன் காலத்தை அறிவு வளர்ச்சியில் செலவிட்டார். 1626-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் நாளில் அறுபத்தைந்தாவது வயதில் சீதளங் கண்டு இறந்தார். இதுவே இவர்தம் வரலாற்றின் சுருக்கமாகும்.

## அவர் "அறிவுரைகள்"

பேக்கன் இயற்றிய பல நூல்களிலும் அவர்தம் "அறி வுரைகள்" என்ற நூலே சாலச் சிறந்ததாகும். இலத்தீன் மொழியில் அவரெழுதியுள்ளவற்றைக் கற்பார் இற்றைநா ளொரு வருமிலர். "கல்வி வளர்ச்சி" என்று எழுதிய அவரது அரிய

பெரியதோர் நூல் என்றென்றும் மாறாப் புகழ்கொண்டு நிலவ வல்லதாயினும், இன்றியமையாது கற்கப்பட வேண்டிய நூற் றொகுதிகளில் ஒன்றாக அது கணக்கிடப்படுவதில்லை. ஆனால் அவர் "அறிவுரை"களைப் படியாமல் ஆங்கில மொழியிற் புலவனானேன் என்று கூறுவோனது கூற்று, திருக்குறளைக் கல்லாது ஒருவன் தமிழிற் பண்டிதனானே னென்று கூறும் பயனில் கூற்றையே யொக்கும்.

இனி, பேக்கன் காலத்திற்கு முன்னெழுந்த அறிவு நூல் களில், ஒழுக்கம், நீதி யென்பன போன்ற பொருள்கள் பெரி தும் எடுத்தாளப்படுவதில்லை. அவைகளெல்லாம் சமய நூல் களிலும் தர்க்க நூல்களிலுமேதான் காணப்படும். அப்பகுதி நூல்களோ பெரிதும் பரிபாடையிலேயே எழுதப்படுவது இயல்பாகலின், அவற்றைப் பொது மக்கள் படித்துணர்தல் அரிதினும் அரிதாகும். ஆகவே அத்தகைய நீதி யுணர்த்தும் பொருள்களை யுட்கொண்ட அறிவுரைகளை மக்கள் இயல்பாகப் பேசும் வழக்கு நடையில் எழுதிப் பலரும் அறியுமாறு வெளி யிட்ட சிறப்பு பேக்கன் பெருமகனார்க்கே உரியதாகும். அவர் "அறிவுரை"களைக் கற்போர் ஒவ்வொருவரும் நீதி தத்துவத் துறையில் தாந்தாமே ஊன்றி நினைத்துத் தெளிந்து ஓர் முடி விற்கு வரவேண்டு மென்ற அவா உடையராவர் என்று கூறுதல் மிகையாகாது. பெரிதுங் கண்ணாரக் கண்டதையுங் காதாரக் கேட்டதையுங் கொண்டே உலகப் போக்கைத் தாமாய்த் துணர்ந்தவாற்றைப் பிறர்க்குப் பயன்படுமாறு தெளித்துரைத் தல் வேண்டுமென்ற கருத்தோடு வெளிவந்த நூலே அவர் "அறிவுரைக"ளாதலால் உலக வியல்பைப் பல்லாற்றானும் ஆராய்ந்து சீர்தூக்கி வடிகட்டிய பல உண்மை முடிவுகளை அதன்கட் காணலாம். எளிதில் யாவரும் அறிந்துணரக் கூடிய உவமைகளும் மேற்கோள்களும் செறிந்து கிடப்பதால், அதை உலக வாழ்வின் நல்லோவியம் என்றே கூறுவதுமுண்டு.

இத்தகையதோர் அருமை பெருமை வாய்ந்த நூல் யாவர் கருத்தையும் எளிதினிற் கவர்தலு மரிதே? 1595-ம் ஆண்டில் முதன் முதலாக வெளிவந்த இவர் "அறிவுரைகள் 1597-ம் ஆண்டு முடிவதற்குள் ஐந்து முறை பதிப்பிக்கப்பட்டு வெளியா யின. 1625-ம ஆண்டு முடிவதற்குள்ளோ பிரெஞ்சு, இத்தாலி யன், இலத்தீன் என்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட் டன. (அதன் பிறகு பிற பல மொழி பெயர்ப்புகள் ஏற்பட் டிருந்தாலும் முறையாகப் பல அறிவுரைகளை ஆசிரியர் பேக்க னார் கருத்திற்கேயன்றி நடைக்கும் மாறுபாடின்றித் தமிழில்

மொழி பெயர்க்கப்பட்டது இப்பொழுதுதா னென்றும், அதை வெளியிட்ட சிறப்பு பைந்தமிழ் வளங்கொழிக்கும் நந்தஞ் "செந்தமிழ்ச் செல்வி"க்கே உரியதாகும் என்றுங் கூறலாம்.)

இனி, இவ் "அறிவுரைகள்" நீதி, ஒழுக்கம், அரசியல், வரலாறு, சிந்தனை, உலக வியற்கை என்ற பல துறைகளிலும் எழுந்தனவாகும். பொதுப்படக் கூறுமிடத்து, மக்கள் நெஞ்சகத்து இயற்கையாகப் பெரும்பாலும் நிகழும் எண்ணங்களை எல்லாம் தாமுய்த்துணர்ந்தவாறு எழுதி விளக்குவதன்றி அவர் தம் ஒழுக்க முறைகளினும், இழுக்கத்தையே மிகைபட எடுத்துக் கூறப்பட்டிருப்பதை இந்நூலில் பரக்கக் காணலாம். அதுவே இந்நூலின் மங்காச் சிறப்பிற்குச் சிறந்ததோர் ஏதுப் போதும் !

இனித் தாம் எடுத்துக்கொண்ட ஒரு பொருளைப்பற்றி யெழுதுங்கால் அதனை ஒட்டிப் பல கூறியும், வெட்டிப் பல கூறியும் கூறுவனவற்றை மிகவுஞ் சுருக்கமாகவும், புதை பொருள் உடையதாகவும் எழுதிப் போதலே பேக்கனார் கையாண்ட முறையாகும். சுருங்கக் கூறி விளங்க வைத்த லொரு புடையாகச் சுருங்கக் கூறிச் சிந்திக்க வைத்தலே அவரது உயர் நோக்கமாகும்.

ஏனெனில், எழுதப் புகுந்தவை அறிவுரைகள் என்ற பெயருக் கேற்ப, அவரது தெள்ளிய அறிவின்கண் அவ்வக் காலத்தே தோன்றிய பல கருத்து முடிபுகள் என்றே கூறலா மாகலின், எடுத்துக் கொண்ட பொருளை விளக்கும் வகையில் ஒருவித ஒழுங்கையும் அமைப்பையுங் காண்பதரிதாகும். எழுத வெடுததுக் கொண்டது பொருளின் இக்கூறு என்று முதற்கண் வரைந்து கோடல், அதனை யொட்டிய கருத்துகளைக் கூறல், அதற்கு மாறுனவற்றைக் கூறி மறுத்தல், தங் கூற்றுக்கு மேற்கோள் காட்டி நிலை நிறுத்தல், முடிந்தது முடித்தல் என்ற அறிவியற்கட்டுரை அமைப்பு முறை இவரது நூலின்கண் காணப்படாது.

நூனடையை யெடுத்துக் கொண்டால், புதை பொருள் மிகுதி யுடைமையும், சுருங்கச் சொல்லலும் என்ற அழகுகளையே ஊன்றுகோலாய்க் கொண்டு ஒவ்வொரு பொருளையும் பற்றித் தாம் கூறவந்ததை மிகவுங் குறைந்த வளவிற் கூறி முடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே அது செல்லுகிறது என்பது படிப்பார்க்குப் புலனாகும். ஒவ்வொரு தொடரும் ஒரு சூத்திரமாகவோ அன்றிப் பெரும்பாலும் பழமொழி

யாகவோ நின்று, படிப்போர் நெஞ்சகத்துப் பசுமரத்தாணி போற் பதிவதே இந்நூனடைச் சிறப்பாகும். ஆயினும் இவ்வாறு ஆழ்ந்த பெருங் கருத்துகளையெல்லாம் மிகவுஞ் சுருக்கமாகக் கூற வந்ததில் அக்கருத்துகளின் பருப்பொருள் எளிதினில் விளங்காமலே போதலுங் கூடும். இக்குற்றம் இந்நூலில் பலவிடங்களிற் காணப்படும். அன்றியும் அச் சுருங்கக் கூறற் காரணமாகவோ நெஞ்சக் கிளர்ச்சியை யளிக்கக்கூடிய எழில் நடை இந்நூலில் மருந்திற்குங் காண்பதரிதாயிற்று. திருவள்ளுவர் தாங் கூறப் புகுந்த நூலுக்கு எவ்வாறு குறட்பாவே சிறந்ததெனத் தேர்ந்து கைக்கொண்டனரோ அவ்வாறே பேக்கனும் தம் நூலிற்குச் சொற் சுருக்கமே உகந்ததெனக் கொண்டனர். திருக்குறளிலுள்ள ஒரு மொழியை நீக்கிப் பிறிதோர் மொழி பெய்து பொருள் தெரித்தல் என்பது எவ்வளவு கடிதோ அவ்வளவு கடிதே பேக்கனர் அறிவுரைகளின் சொற்களை மாற்றுதலும். ஏற்றவாறு ஏற்ற விடத்தில் சொற்கள் அமைந்திருப்பதும், ஒரு சிறு தொடரை விளக்குவதற்கும் பல வரிகளானன்றி முடியாதென்னும்படியான பொருட் செறிவுடையதாயிருப்பதுமே அவர் அறிவுரைகளுக்கு ஆங்கில மொழியில் திருக்குறளிற்குத் தமிழ் மொழியில் கிடைத்த உயரிட மனையதோர் உயரிடத்தை யளித்திருக்கின்றன. ஆகவே அரிதினிலுய்த்துணர்ந்த பொருளெல்லாம் பாரறிய வேறு தெரிந்து, திறந்தொறுஞ் சேரச் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லிய,

> "புலவர்நம் பேக்கரன்றிப் பொங்காங் கிலத்திற்
> சிலவர் புலவரெனச் செப்ப—னிலவு
> பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
> கறங்கொளிமா லைக்கும் பெயர்."

---

# பொருள் விளக்க வேண்டுகோள்.

[திரு மு. சி. பூரணலிங்கம் பிள்ளையவர்கள், பி. ஏ., எல். டி.,]

பின்வருமடிகளுக்குப் பொருள் விளங்குமாறு 'செந்தமிழ்ச் செல்வி'யைப் படிக்கும் அன்பர்களை வேண்டுகின்றேன். இவை திருஞானசம்பந்தர் தேவாரத் திருமுறைகளில் வருவன.

1 கடுத்தானே காலனைக் காலாற் கயிலாய
மெடுத்தானை யேதமா கம்முனி வர்க்கிடர்
கெடுத்தானை கேழ்கிளருந் திருக்கா றுயில் (II திருக்காறுயில்)

(அந்வயப்படுத்திப் பொருள் கூறுக)

2 ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய் (II திருமயிலாப்பூர்)
(எந்தத் திங்களில்?)

3 பண்ணுர் பதினெண் கணங்கடம் மட்டமிநாட்
கண்ணுறாக் காணுதே போதியோ......
(எந்தத் திங்களில்?)

4 கற்றார்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
பொற்றப்புக் காணுதே போதியோ......
(பொற்றப்பு என்னை? எந்தத் திங்களில்?)

5 கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான்றன்
பெருஞ்சாந்தி காணுதே போதியோ...
(என்னை? எந்தத் திங்களில்?)

6 அந்தண்பூங் கச்சியே கம்பனை யம்மானைக்
கந்தண்பூங் காழியூ ரன்கலிக் கோவையாற்
சந்தமே பாடவல் லதமிழ் ஞான
சம்பந்தன்...... (II கச்சியேகம்பம்)

7 பூதமுதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன்னெலிமாலை யென்றேகலிக் கோவை சொல்லே
(III திருப்பாசுரம்)

8 அற்றன்றி யந்தண் மதுரைத்தொகை யாக்கினுனுந்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைச்சோலை தெண்ணீர்
(தொகையாது?)

9 கூட்டிஞர் கிளியின் விருத்த முரைத்த தோரொ(ர)லியின் தொழிற்
பாட்டு மெய்சொலிப் பக்கமே செலுமெக்கர்
(III திருவாலவாய்)
(ஷ விருத்தமும் பாட்டுங் கிடைக்குமா? கதை)

10 தேவாசிறியோம் பிழையைப் பொறுப்பாய் பெரியோனே
யாவாவென்றங் கடியார் தங்கட் கருள்செய்வா
யோவாவுவரி கொள்ள வுயர்ந்தா யென்றேத்தி
மூவாமுனிவர் வணங்குங் கோயின் முதுகுன்றே.
(II திருமுதுகுன்றம்)

இச் செய்யுளில் பொதுப்படக் கூறும் மூவா முனிவரில் எவ ருடைய கூற்றயினு மமைந்துளதாயின் விளக்குக.

# என் வேண்டுதல் *

[திரு M. P. S. வேலாயுதம் பிள்ளையவர்கள்]

எங்கு மனமானது பயமற்றும், தலையானது நிமிர்ந்து மிருக்கிறதோ;

எங்கு அறிவு உரிமை பெற்று மிளிர்கின்றதோ;

எங்கு உலகம் குறுகிய குடும்பச் சுவர்களால் துண்டங்களாக்கப்படாதிருக்கிறதோ;

எங்கு மொழிகள் மெய்ம்மையாய் ஊற்றினின்றும் வெளி வருகின்றனவோ;

எங்கு இடையறு உழைப்பு பலனடைய தன் கைகளை நீட்டிக்கொண்டிருக்கிறதோ;

எங்குத் தெளிவுபெற்றஅறிவாய ஓடை வழிதவறி,உயிரற்ற பாலைவனமபோன்ற வழக்கத்தின்கண் வீழாமலிருக்கிறதோ;

எங்கு மனமானது நின் அருளால், எப்பொழுதும் விரிவடைந்துவரும் அறிவின்பாலும், தொண்டின்பாலும செலுத்தப்பட்டு வருகிறதோ;

அந்த உரிமையாய மேலுலகத்தே, என் இறைவனே! என் தாய்நாடு கண் விழிக்குமாக.

II

நான் நின்பால் இறைஞ்சும் வேண்டுதல் ஈது, என் இறைவ! என் நெஞ்சத்திலூன்றிக் கிடக்கும் வறுமை நோயை வேரற அறுப்பாயாக.

என் மகிழ்ச்சிகளையும், துன்பங்களையும் சாமானியமாய்ப் பொறுத்துக்கொள்ள எனக்குத் திறனளிப்பாயாக.

என் அன்பானது தொண்டின் வயப்பட்டுப் பலன்றரு மாறு செய்ய எனக்குத் திறனளிப்பாயாக.

ஏழைகளை நான் கைவிடாதிருக்கவும், மமதையான் அகங்கரித்துத் திரிவோருக்கு நான் தாள்பணியாதிருக்கவும் எனக்குத் திறனளிப்பாயாக.

நாடோறும் நடைபெறும் அற்பக் காரியங்களுக் கிரையாகாது, என் மனத்தை உயர்வாய் வைத்துக்கொள்ள எனக்குத் திறனளிப்பாயாக.

என் திறனனைத்தையும் அன்புடன் நின்னடிக்கே யாக்கவும் எனக்குத் திறனளிப்பாயாக.

---

* [திரு. ரவீந்திரநாத் தாகூர் இயற்றிய "கீதாஞ்சலி"யினின்றும் மொழிபெயர்க்கப்பட்டது.]

# இறைவன் அருட்டிறம்

என் ஆசைகளோ மிகுதி, நான் விம்மிவிம்மியும் அலறுகின்றேன். ஆனால் நான் விரும்புவனவற்றையெல்லாம் அறவே மறுத்து, நீ என்னைத் தடுத்தாட்கொள்கிறாய். நினது உரம்பெற்ற இவ் விரக்கம் என் வாழ்நாள் முழுவதும் பரவி நிற்கின்றது.

நான் கேளாமலே, நீ இவ்வானத்தையும், வெளிச்சத்தையும், இவ் யாக்கையையும், உயிரையும், நெஞ்சத்தையும், எனக்கு அளித்து, பேராசையால் நேரும் கேடுகளினின்றும் என்னைக் காத்து, நான் உன்னையடைய அருகனாக்கி வருகின்றனை.

உன்னைத் தேடித் தேடியுங் காணாமல், தளர்வுற்று நிற்கையில், உன்னையடைய நான் துரிதமாய் வருகையில், நீ சிறிதேனும் இரக்கமின்றி மறைந்து கொள்கின்றனையே. எனது அவா வெள்ளத்தில் நான் மூழ்கி விடாவாறு என்னை என்ஞான்றுந் தடுத்து, நான் நினது பாதப் போதுகளை யடையுமாறு எனக்கு நாடோறும் அருள் புரிகின்றாய்.

## II.

நீ என்னுடன் பேசாவிடில், அதனை நான் மௌனமாய்ப் பொறுத்துக் கொள்வேன். இராக்காலம்போன்று நான் தலை வணங்கிப் பொறுமையுடன் காத்துக்கொண்டிருப்பேன்.

காலைப் போழ்தோ வருவது திண்ணம். இருளோ மறைந்தொழியும். வானத்தைப் பிளந்துகொண்டு, பொன்னருவி யனைய உன் மொழிகள் எனக்கு இன்பத்தைப் பெருக்கும்.

## III.

இவ் வுலகில் என்பால் அன்பு பாலிப்பவர்கள் என்னை எவ்வாற்றாலும் பிணைத்துவிட முயலுகின்றார்கள். ஆனால் அவர்கள் என்பால் வைத்துள்ள அன்பைவிட மேம்பட்ட உன் அன்போ அத்தகையதன்று. நீயோ எனக்கு உரிமையை யளித்து விடுகிறாய்.

நான் அவர்களை மறந்து விடுவேனோவென்று ஐயுற்று, அவர்கள் என்னைத் தனியே விடுவதில்லை. நாட்களோ ஒன்றன்பின் னொன்றாய்க் கடந்து போகின்றன. நீயோ அகப்படுகின்றாயில்லை.

நான் வழிபடுங்கால் உன்னைக் கூவாவிடினும், உன்னை நெஞ்சத்தில் வைத்து நினையாவிடினும், நீ என்பால் வைத்துள்ள அன்பானது, என் அன்புக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றது.

இல்லற வாழ்க்கை

# இல்லற வாழ்க்கை

[இளவழகனார்]

வசைஇல் வான்திணைப் புரையோர் கடும்பொடு
விருந்துஉண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை
நினரோடு உண்டலும் புரைவது என்றாங்கு
அறம்புணை யாகத் தேற்றிப்...பெயர்ந்தனன்.

(குறிஞ்சிப்பாட்டு, உ0௬-அ.)

'குற்றமில்லாத உயர்ந்த வகுப்பைச் சார்ந்த பெரியோர் தம் சுற்றத்தாரோடு வந்து விருந்துண்டு மிஞ்சிய உணவினை நீ இடுகையினால் யான் உண்ணுதலும் உயர்ந்தது என்று பெருந் தன்மைவாய்ந்த தலைவன் தன் தலைவிக்குக் கூறி, அவ்வாற்றால் இல்லறம் தம்மைக் கரையேற்றுங் கருவியாவதாக அவட்குத் தெளிவித்து...நீங்கினன்'.

'பெருந்தகை என்று தேற்றிப் பெயர்ந்தனன்' என்று முடித்துக்கொள்க. 'புரையோர்' என்னுஞ் சொல் 'உயர்ச்சி' யென்னும் பொருளைத் தரும் 'புரை' என்னும் முதனிலையினின் றுந் தோன்றி 'உயர்ந்தோர்' என்னுங் கருத்திற் பழந்தமிழிலக் கியங்களிற் பெருவரவினதாய்ப் பயின்று வந்துள்ளது. 'புரை வது' என்று பின்னும் அச்சொல் உயர்வுப் பொருளில் வந் திருத்தல் கண்டுகொள்க. உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஒவ்வோ ரினத்திலும் உண்மையாதலின், 'வான்றிணைப் புரையோர்' என் றிங்கு வந்தது போன்ற தொடர்களுக்குத் 'தமக்குள்ள ஒழுக் கத்தினால் உயர்ந்த வகுப்பில் அடங்குதற்குரிய பெரியோர்' என்று பொருள்கூறல் வேண்டுமே யல்லாமற், பிறப்பினால் உயர் குடிப் பெரியாரென்று பொருளுரைத்தல் உண்மைக்கு மாறாம். திருவள்ளுவப் பெருமானும் இதனைக் 'குடிமை' யென்று ஒரு தன்மையாயெடுத்து விளக்கினமையும இக்கருத்தினை உட்கொண் டமையாலாமென்க. 'வசையில்' என்றமையாற் குற்றமின்மை யும், 'வான்றிணை' யென்றமையால் நன்மை யுண்மையும் புரை யோர்க் குரைத்தவாறாம். கடும்பு—சுற்றம்; இதனைக்

" கடும்பொடுங் கடும்பொடும் பரவுதுங்
கொடும்பா டறியற்க வெம்மறி வெனவே."*

* பரிபாடல், உ: எ௫-௬.

என்னும் பரிபாட லடிகளிலுங் காண்க. இங்குக் கூறப்பட்ட சுற்றங்களும் அப் பெரியார் தன்மையை ஏற்று அவர்க்குச் சூழ இருந்து தொண்டு செய்யுந் தொண்டர் குழாத்தினராவர். 'விருந்துண்டெஞ்சிய மிச்சில் உண்டலும்' என்றார், முதற்கண் நல்லாராயினார்க்குப் பசி தீர்த்தலே இல்வாழ்வாரின் முதற் கடமையாமென்றற்கு. 'பெரியோர் விருந்துண்டு மிஞ்சிய உணவினை உண்டல் உயர்ந்தது; அதுவுமன்றி அம்மிச்சில் உணவினை நின்னோடு உண்டலும் உயர்ந்தது' என்னுங் கருத்துணரப்படுதலின், உண்டலும் என்பதன் உம்மை எச்சம். 'மிச்சில் உண்டலும், அதனை நின்னோடுண்டலும் புரைவது' என்று பொருள் கொள்க. பாட்டிலுள்ள சொற்றொடர் முறை புரைவது என்னும் ஒருமை வினை ஏற்றது. இல்வாழ்வார் அம்மிச்சில் உணவினையுந் தலைவியரோடிருந்து உண்டலே சிறப்பாமென்பது கருத்து. தனது உயிரறிவினைத் தலைவி தனது இல்லறச் செய்கையினால் மலவிருள் நீக்கி விளக்கி இறைவன் திருவருளுக்கு இலக்காக்குதலின், தலைவன் அவள் அருமை நோக்கி 'நின்னோடுண்டலும் புரைவ' தென்றான். நின்னோடு, வேற்றுமை மயக்கம். அறம்- இல்லறம்; இதற்கு 'அறு என்னும் முதனிலையிற்றோன்றி அறியாமையினையும், அது காரணமாகச் செய்யும் தீவினையையும் அறுப்பதென்னும் பொருட்டாம்'† என்று சொற்பொருளுரைப்பர் ஆசிரியர் மறைமலையடிகள். 'புரையோர்க்கு விருந்திட்டு அதனினின்றும் மிஞ்சிய மிச்சிற்சோற்றினை இல்வாழ்வார் கருத்தொருமித்து உண்ணும் வாழ்க்கையினை யுடையராயின், அவ்வகையான இல்வாழ்க்கை அவர்தம்மை இவ்வுலகத்துன்பங்களென்னுங் கடலினின்றும் இறைவன் திருவடியென்னும் அருட்கரைக்கு ஏற்றுகின்ற நற்புணையாகும்' என்பது இவ்வடிகளின் கருத்தாகும்.

பொருள்வயிற் பிரிந்து பொருள் திரட்டி வந்த தலைவன் இனி அப் பொருள் கொண்டு தனது வாழ்க்கைத் துணையான தலைவியுடன் இல்லமர்ந்து இல்வாழ்க்கையினை நிகழ்த்துவான். இல்வாழ்க்கை யென்பது அத் தலைவன் தலைவியரின் உயிரைத் தூய்மைப்படுத்து அவர்க்கு எஞ்ஞான்றும் அழியாத இன்பப் பெருக்கினை விளைக்குங் கருவியாகும். எனவே தலைவன் தலைவியரின் இல்வாழ்க்கை யென்னும் உயரிய அரண்மனைக்கு அவர்தம் திருமணக் கூட்டமே வாயிற்படியா மென்க. இத் திருமணக் கூட்டமென்னும் வாயிற்படியின் வாயிலாக இல்வாழ்க்கை யரண்மனையுட் செல்லலுறுந் தலைவன் தலைவியர் தமக்குத் திருமணப்

† திருவாசக விரிவுரை, சிவபுராணம், ௯௨.

பருவம் வரும் வரையில் இதுகாறும் அறியாப் பருவத்தராய், விளையாட்டியல்பினராய் இருந்து வந்ததுபோல் இனி இருத்தல் இயலாது. தொடர்பானதொரு முதல் நோக்கத்தினை அடிப்படையாயுடைய வாழ்க்கையென்பது இதுகாறும் அவர்க்கு நிகழ்ந்திலது. ஆனால் இனியோவெனில், அவர்தம் நெஞ்சத்தையும் சொல்லையும் செயலையும் முழுதுங் கவர்ந்து நிற்கவல்லதோர் அரிய நோக்கத்தினைத் தனக்கு அடிப்படையாய்க் கொண்ட வாழ்க்கையையே அவர் உடையராகின்றார். அவர்தம் நெஞ்சும் சொல்லும் செயலும் இனி அகன்று செல்கின்றன; ஆழ்ந்து செல்கின்றன; நுணுகியுஞ் செல்கின்றன; ஏதொன்றையும் அமர்ந்து உற்று நுணுகி ஆராயவும், ஆராய்ந்து தெளியவும், தெளிந்து உரம்பெறவும், உரம்பெற்றுச் செய்து முடிக்கவும் அவர் இடம் பெறுகின்றார். அங்ஙனம் ஒன்றனைச் செய்து முடிக்கும்போது எத்தனையோ இடையூறுகள் அவர்தம்மை எதிர்த்து நிற்கும். அங்ஙனம் எதிர்க்குங்கால் அவ்விடையூறுகட்கு அணுத்துணையும் அஞ்சுவது செய்யாது தாமும் அவை தம்மைஎதிர்த்து உடைத்தெறிந்து தாம் மேற்கொண்ட அருஞ்செயலையே எப்படியானும் முடிக்குங் கட்டாயத்திற்கு அவர் வருவர். இவ்வகையான முறைகளிலே இல்வாழ்க்கையை மேற்கொண்ட தலைவன் தலைவியர் தமது வாழ்நாண் முழுதும் இடையறாது பழகுகின்றமையால், அவரது உயிரறிவு அறியாமை தேய்ந்து விளக்கமுற்று விரிந்து பேரறிவாகி இறைவனடியிணையை யுணரும் நிலைக்கு வந்திடும். வந்திட, அக்காதன் மக்களின் அவ் வரும்பெருந் தகுதி நிலையினையே நெடுங்காலமாய் எதிர் நோக்கி வரும் ஆண்டவன் தனது இன்னருளை அவர்க்கு வழங்கி அவரைத் தனது பேரின்ப நுகர்ச்சிக்கண் இருத்திடுவன். இல்வாழ்க்கை முறை தன்னை மேற்கொண்ட தலைவன் தலைவியரை இவ்வாறு கரையேற்றுதலாற்றான் தலைப்பிலெடுத்துக்கொண்ட மேற்பாட்டினால் தலைவன் தன் தலைவிக்கு 'அறம் புணையாகத் தேற்றிப் பெயர்ந்தனன்.'

இல்வாழ்க்கை முறை தலைவன் தலைவியரைக் கரையேற்றுமெனப்படும் இவ்வுண்மை,

> 'காமஞ் சான்ற கடைக்கோட் காலை
> யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி
> யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
> சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே.'*

* தொல், கற்பு, ௫௧.

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் இல்லறத்தின் பயன் ஈதென்று விளக்கிக் கற்பிய லிறுதியில் இயற்றி நிறுத்திய நூற்பாவினால் நன்கு பெறப்படும். இந்நூற்பாவின் கருத்து, தலைவனுந் தலைவியும் இவ்வுலகத்திலே ஒன்றாய்ப் பிணைந்து சுற்றத்தாரோடும் மக்களோடுங் கூடி இல்லறம் நிகழ்த்தும் பொழுது, உலகத்தின் கண் நுகர வேண்டிய நுகர்ச்சிகளை யெல்லாம் ஒவ்வொன்றாய் நுகர்ந்து பார்க்கப் பார்க்க அந் நுகர்ச்சிகள்தாம் ஏதும் நிலையா தொழிதலை அறிவின் உணர்வராதலின், முடிவில் அவைதம்மி லெல்லாந் துவர்ப்பு வரப்பெற்று அம்முகத்தால் நிலையான பேரின்ப நுகர்ச்சியினை விளைக்கும் வீடு பேற்றினை விரும்பித் துறந்த உள்ளத்தராவர்; இதுவே முற்கூறிய இல்லறத்தின் பயனும்' என்பது. இக்கருத்தினைச் செவ்வையாய் உற்று நோக்கும் போது, மக்களுயிர்களின் அறியாமைத தேய்வுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் காதலுணர்ச்சி வாய்ந்த இல்லற வாழ்க்கை இன்றியமையாத கருவியாய் முடிகின்றதென்பது தெளிவாய் விளங்கும். எனவே அறியாமையை ஒழித்து அறிவைப் பெருக்கிக் கொள்ளும் அரிய நோக்கத்தோடு பிறக்கும் ஒவ்வொருவரும் காதன் மணம் புணர்ந்து இல்லறம் நிகழ்த்துதலான பெருங் கட்டாயத்தி லிருக்கின்றா ரென்பது சொல்லாமலே பெறப்படுகின்றது. இன்றேல், அவர்க்கு அறியாமை கழலலும் அரிதாய்ப், பின்னர் அறிவு விளங்கலும் அரிதாய், அவ்வாற்றால் இறைவன் திருவருளுற்று வீடு பெறுதலும் முற்றும் அரிதாய் முடிவில் யாதும் இல்லையாய் அவர் பிறப்பின் நோக்கம் நிறைவேறாதாய் ஒழிந்திடும்.

> 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
> தெய்வத்துள் வைக்கப் படும்.'

என்னுந் திருக்குறண் மொழியினால் ஆசிரியர் திருவள்ளுவர் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்த'லையே விரும்பி விளக்கினமையுங் கண்டு கொள்க.

இனி, 'வையத்துள் வாழ்வாங்கு வாழும்' அவ்வாழ்க்கை தான் யாது என்று ஆராயற்பாலது. உலகத்திலே பிறந்து தனது அறியாமையைத் தேய்த்து அறிவைப் பெருக்கிக்கொள்ள விரும்பும் ஒவ்வொருவர்க்கும் இடையூறுகளோ எண்ணில்லாமற் பெருகிக்கொண் டிருக்கின்றன. அவற்றுள் தமது நோக்கத்துக்கு ஒரு பெருங்கருவியாய் நின்று உதவுவதான உடம்பிற்கு உறும் இடையூறுகளை முதன்மையாய் நினைந்து பார்க்கத்

* திருக்குறள், இல்வாழ்க்கை, ௰.

தக்கவை. உடம்பிற்கு உண்டாம் ஊறுபாடுகளிலும் இன்றியமையாதன பசி, பிணியென்னும் இரண்டாம். இவ்விரண்டுள்ளும் பிணி பசியினால் உண்டாதலின், பசியே முதன்மையாம். எனவே, வீடுபேறடைய விரும்பும் ஒவ்வோருயிர்க்கும் எதிர்ந்து வரும் இடையூறுகள் எல்லாவற்றிலும் பசியே மிக முதன்மையான இடையூறென்பது செவ்விதின் விளங்கும். விளங்கவே பசித்துன்பம் இல்லாத வகையில் உயிர்வாழ்தற்கு மக்கள் இடம் பெற்றால், அவர் மையப்பைய வீடுபேறடையவும் இடம் பெறுவர். இன்றேல் அவர் பிறந்தும் பிறவாதவரே யாவர். அவர்க்கு ஏதொரு முயற்சியும் நிகழமாட்டாது.

> ' குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
> பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ
> நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
> பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
> பசிப்பிணி யென்னும் பாவி.' *

என்னும் மணிமேகலை யடிகள் இங்கு உற்றுநோக்கற்பாலன. ஆகவே மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் ஆணும் பெண்ணுமாய்க் காதன் மணம் புணர்ந்து ஒருவருக்கொருவர் உதவியாய் நின்று முதலிலே தமது பசித்துன்பத்தினை நீக்கிக் கொள்ளுதற்கு வழிபார்த்தல் வேண்டும். காதன் மக்கள் தம்மை இந்நிலையில் வைத்துக்கொள்ளும் பொழுதே, பசி நீக்கிக்கொள்ளும் இச்செய்கையையே முடிந்த இன்பம் பயக்கும் முடிந்த செய்கையாய் நினைந்து அவ்வளவின் மகிழ்ந்து விடாது, பேரறிவினைப் பெருக்கி இறைவனை யடைதல் வேண்டுமென்னும் வேறொரு முடிந்த செய்கைக்கு இதனைக் கருவியளவாய் உணர்வது அவர் தமக்கு மிகவும் இன்றியமையாததாகும். இவ்வுணர்ச்சி ஆண் பெண்ணுவார்இருபாலார்க்கும் மிகத்தெளிவானமுறையில்இருத்தல்வேண்டும். பின்னர்த், தமக்குப் பசித்துன்பம் வந்து வருத்துதல் போலவே ஏனையோர்க்கும் அத்துன்பம் விடாது பற்றி வருத்தும் என்பதனை அவர் நன்றாய் உணர்வராதலின், தம்மை அப் பசித் துன்பத்தினின்றுங் காப்பாற்றிக் கொள்ளுதல் போலவே பிறரையும் அதனினின்றுங் காப்பாற்றுதற்கு அவ் விருபாலாரும் விழைகுவர். எனவே அவ்வாறு விழைந்து ஏனையோரின் பசித்துன்பத்தினையும் பரிந்து நீக்குதல் இல்வாழ்வார்க்கு முதன்மையான கடமையாகின்றது. அவ் வேனையோரினும், வீணே காலத்தைக் கழிக்காது பிறப்பின் நோக்கத்தைப்

* மணிமேகலை, கக: எசு-அ0.

பின்பற்றி அறிவு பெருக்கி இறைவனை யடைதற்கு முயலும் அறநெறியாளர்க்கு அவர்தம் உடம்பினுல் அவர்க்கேதும் ஊறு பாடு விளைந்து கவலை நேராவண்ணம் அவரது பசித்துன்பத்தை நீக்குதல் மிகச் சிறப்பாகும்.

> " ஆறிடும் வேள்வி யருமறை நூலவர்
> கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதில்
> நீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலே
> பேறெனி லோர்பிடி பேறது வாகுமே." *

என்னுந் திருமூலர் திருமொழியும் இதனை நன்கு விளக்கும். பசித்துன்பம் நீக்குதற்கு முன்வருவாரெவரும், இனி அவர்க்கு உறும் பிணி முதலியன களைதற்கு மருந்து முதலியன உதவுத லுஞ் செய்வர். இவ்வாறு இல்வாழ்வாராற் பசித்துன்பம் முதலி யன நீங்கப்பெறும் அறநெறியாளர் முதலியோர் மூவகையின ராவர்.

எல்லாமக்களும் ஆணும் பெண்ணுமாய்க் கூடியமர்ந்து இல்லறம் நிகழ்த்துங் கட்டாயம் உடையரென்று ஆசிரியன்மார்க்கும் இறைவற்கும் அது கருத்தாதல் காட்டி மேலே விளக்கி யிருக்கின்றமையால், இங்குக் கூறப்படும் மூவகையினரும் இல் வாழ்க்கையினையுடையவரே யென்பது அறியற்பாலது. அவர் தம்முள் எவரும் மனைவி மக்களையும் வீடுவாசல்களையும் விட்டு நீங்கித் தனித்திருப்பவரல்லர். இதனை மயக்கத்திற் கிடமில்லாத வகையில் நன்குய்த் தெளிந்துகொள்ளல்வேண்டும். இனி அம் மூவகையினரென்பார் எவரோவெனின், இல்லற வாழ்க்கையில் நிற்பார், புதிது மேற்கொண்டு அவ்வில்வாழ்க்கையினை மிக்க ஆவ லுடன் நுகரு நிலையினரென்றும், பல்லாண்டுகளாக அதனைமேற் கொண்டு நன்குய் நுகர்ந்து நுகர்ந்து பார்த்து அவற்றின் நிலை யாமை கண்டு அம்முகத்தால் அதனைத் துறந்த உள்ளத்தினராய் இறைவன் அருட் கண்ணராய் நுகரு நிலையினரென்றும் இரு வகைப்படுவர். இவ் விரு வகையினரையும் இல்வாழ்க்கையின் முன் நிலையினரென்றும் அதன் பின் நிலையினரென்றுங் கூறலாம். முன் நிலையினர் இவ் வுலகவாழ்க்கையினை ஒரு நுகர்தற்குரிய பொருளாக எடுத்து அதன்கண் முதல்நோக்கம் வைத்து நுகர்ந்துகொண் டிருப்பர். பின் நிலையினர் அங்ஙனம் இவ்வுலக வாழ்க்கையினை ஒரு நுகர்தற்குரிய பொருளாய் எடுத்துநுகர்ந்து கொண்டிராமல், அதனை அதனின் வேறுனதோர் இறைவனின்ப

---

* திருமந்திரம், ௧அ௬௧.

வாழ்க்கைக்குக் கருவியாய் நினைந்து, தமது முதல்நோக்கத்தினை
இறைவனின்ப வாழ்க்கைக்கண் நிறுத்தி மற்றுத் தமது துணை
நோக்கத்தினையே இவ் இல்வாழ்க்கைக்கண் நிறுத்தி நுகர்ந்திடு
வர். இவ் இருவேறு நிலையினரும் ஒருவர்போலவே ஆணும்
பெண்ணுமாய்க் கூடி வெளிக்கு ஒரே நோக்கத்தினர்போல
இல்வாழ்க்கையினை நிகழ்த்துவராயினும், இவர் தம்முள் ஒருவர்
இல்லறத்தார்: மற்றொருவர் துறவறத்தாராவரென்க. முன் நிலை
யினர் இல்லறத்தாரும் பின் நிலையினர் துறவறத்தாரு மாவரென்
றுணர்தல்வேண்டும். இவ்விருவகை நிலையினரையும் ஒருவமை
முகத்தால் விளக்கிக் காட்டுவதனால், முன் நிலையினர் தாமரை
யிலையின் அடிப்பக்கத்திற் பற்றிய நீருக்கும், பின் நிலையினர்
அவ்விலையின் மேற்பக்கத்திற் பற்றியும் பற்றாமலிருக்கும் நீருக்
கும் ஒப்பாவரென்று கூறல்வேண்டும். முன் நிலையினர் இல்வாழ்க்
கையை இல்லறத்தில் நின்று நுகர்ந்து பார்த்துத் துவர்ப்புற்றுச்
சில வாண்டுகளிலெல்லாம் அவ்வாழ்க்கையைத் துறவறத்தில்
நின்று நுகரும் பின் நிலையினராய் மாறுவர். திருக்குறள் முத
லான தலைவந்த நூல்களிலெல்லாம இல்லறத்தாரென்று கூறப்
படுபவர்இல்வாழ்க்கையின் முன் நிலையினரென்றும்,துறவறத்தா
ரெனப்படுபவர் அவ் வில்வாழ்க்கையின் பின் நிலையினரென்றும்
உற்றறிந்துகொள்க. எனவே இல்வாழ்க்கையென்பது இல்லற
வாழ்க்கையெனவும், துறவற வாழ்க்கையெனவும் இருவகைப்
பட்டு நுண்ணிய அறிவினர்க்கு நன்றாய்ப் பிரிந்து விளங்கும்.

இல்வாழ்க்கையின் முன்நிலையினரான இல்லறத்தார் இல்
வாழ்க்கையினை நுகர்ந்து பார்க்கும் பற்றுள்ள நிலையினராய்
இருத்தலால், அவ் வில்வாழ்க்கையின் பின் நிலையினரான துற
வறத்தார் தாம் அவ்வாழ்க்கையினை முன் சென்று நுகர்ந்து
பார்த்துப் பழகிய தமது பற்றற்ற நிலையினையும் அந்நிலையினை
எய்துமாற்றையும முன் நிலையினர்க்கு எடுத்துக்காட்டி அவரை
யும் அங்ஙனம் பற்றற்று நுகரும் துறவறநிலைக்குக் கொணரும்
ஆசிரியராய்த் திகழ்வர். எனவே இல்வாழ்க்கையின் பின் நிலை
யினரான துறவறத்தார் முன் நிலையினர்க்கு ஆசிரியராகின்ற
முறையால் அவர் 'அறவோ' ரெனப்படுவார். இனி அவரே
தமது அருளொழுக்க நன்முறையினால் 'அந்தண'ரெனப்படுவார்.
தமது உள்ளத்துறவு முறையால் 'துறவோ'ரெனப்படுவார்.
ஆகவே, 'அறவோர்' என்பாரும், 'அந்தண' ரென்பாரும்
'துறவோ' ரென்பாரும் இல்வாழ்க்கையின் பின் நிலையினர்
அதாவது மேல் நிலையினரான ஒருவரேயாவர்.

இனி இல்லறத்தாரென்று இங்கெடுத்துக்கொள்ளப்பட்டவர்
இல்வாழ்க்கையின் முன்னிலையினரேயாவராதலால், பிறர்க்குப்

பசிதீர்க்கும் அறவினையைப் புரிபவரும் பெரும்பாலும் அவரே யாவர். அவர் இல்வாழ்க்கை நுகர்ச்சியினைச் சுவைத்துக் காணும் நிலையினராயிருத்தலால் அவரினும் அவ்வில்வாழ்க்கைக் கண் பற்றற்ற உள்ளத்தினராயிருக்கும் துறவறத்தாரே அறியாமையைத் தேய்த்து இறைவனையறியும் அருண்முயற்சியினை மிகுதியும் உடையவராவர். அங்ஙனம் உயிர் முயற்சி உடையார்க்கு உணவு முதலியவைகள் சேகரித்தலான உடம்பின் முயற்சி மிக்கிருத்தலாகாது. அதனால் அவரது அருளுழைப்புக் குன்றிக் குறைந்துபோம். ஆகவே இல்லற நிலையினர் துறவறத் தார்க்கு அங்ஙனம் அவர்தம் அருள் முயற்சி குன்றிக் குறையாத வாறு அவரது பசித்துன்பம் முதலியவற்றை நீக்குதற்கு உரிய ராவர். இவ்வளவுங் கூறியவாற்றால் இல்வாழ்க்கையினராற் பசித்துன்பம் முதலியன நீங்கப் பெறுதற்குரியரான மூன்று வகையினரில் துறவோர் ஒருவகையினராவர் என்பது விளங் கும். மற்றொருவகையினர் விருந்தினர்; இன்னொருவகையினர் சுற்றத்தார். விருந்தினரென்பார் முன்பின் அறியாதவராய்ப் பசித்துவரும் இல்லறநிலையினர். இவர்தாம் தாம மேற்கொண்ட தொரு நற்றொழிலை முன்னிட்டு ஊர்விட்டு ஊர் செல்வர். செல்லுமிடங்களில், இடத்தானுங் காலத்தானும், பிற வசதி கள் குறைவானும் உணவு முதலியவற்றைத் தாமே ஏற்பாடு செய்துகொள்ளல் ஏலாதாயின், ஆங்கவர் பிறர் உதவியை நாடி நிற்பர். அஞ்ஞான்று அவரைத் தமதில்லத்திற்கு விருந்தாக ஏற்றுக் கொண்டு அவர்க்கு உண்டிமுதலியன உதவுதல் இல் வாழ்வார் கடனும். சுற்றத்தவரைத் தமதில்லில் இருத்தி உண விடுதல் விருந்தாகாதென்பது இங்கு நன்றாய்க் கருததிருத்தற் பாலது.

இனிச் சுற்றமெனப்படுவார் உடம்பின் தொடர்பானும் பிற வாற்றானும் தம்மைச் சூழ்ந்து நிற்பவராவர். இருக்கும இடத் தின்தொடர்பானும், அலுவற்றொடர்பானுந் தம்மைச் சூழ்ந்து நிற்பவரெல்லாமும் 'சுற்ற' மென்னும் இவ்வகையுள் அடங்கு வர். இவர்தாம் காதலன் காதலியாக மணம்புரிந்து இல்வாழ்க் கையில் நிற்கும்பொழுது தம்முள் ஒருவரையொருவர் பொருள் வயிற் பிரிவு முதலிய ஏதுக்களாற் பிரிந்து தனியரானாலும், அல் லது தம்முள்ளொருவர் இறந்து போகத் துணையற்றுத் தனிய ரானாலும் அவரெல்லாம் அஞ்ஞான்று இல்லற நிலையில் நிற்குந் தம் சுற்றத்தவரால் உண்டிமுதலியன கொடுத்துக் காப்பாற்றப் படுதற்குரியராவர். தமது சுற்றத்தில் திருமணங் கூடாத துணை யற்ற ஏழைச் சிறுவர் சிறுமிகளும் இங்ஙனங் காப்பாற்றப்படுதற் குரியர். இவ்வாறு சுற்றத்தார், அறவோர், விருந்தினர் என்னும்

மூவகையினர்க்கும் இல்வாழ்வார் உண்டி முதலியன உதவுதலில் நல்ல துணைவராயிருத்தல் வேண்டுமென்பது,

"இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"*

என்று நாயனாரால் நன்கெடுத்து விளக்கப்பட்டது. இம்மூத் திறத்தார்க்கும் விருந்திடும் முறையினால் இல்வாழ்வார்க்கு அவர் தம் உள்ளப்பான்மை மேன்மையாகிச் செம்மைப்படுதலால், அவர்க்கது அவர்தம் முன்னேற்றத்துக்கு உறுதுணையாகும். தலைவன் தலைவியர் இல்வாழ்க்கையை மேற்கொள்வதெல்லாம் தக்கார்க்கு விருந்தளித்தற்கேயாமென்று

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"†

என்னுந் திருக்குறள்கொண்டு விளக்கிய நாயனார் அவ்வில்லறப் பகுதி முழுமையும் அன்புடைமை, இனியவைகூறல், செய்ந் நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமு டைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்கா றாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனிலசொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் என்னும் செம்மைப் பண்புகளில் இல்வாழ்வார் படிப்படியாய் உயர்ந்து துறவற நிலைக்குத் தகுதியாமாறு உள்ளச்செம்மை பெறுமாற்றினை முறை முறையாய் நன்கு விளக்கிக் காட்டுதலால், விருந்திடும் நட்பமுணர்ந்து அதுசெய்வார்க்கு அச்செய்கை மூகத்தாலேயே அவர்தம் உள்ளம் செம்மைப்பட்டுத் திருந்தி வரவரஉயர்ந்து வருகின்றதென்பதூஉம் வெளிப்படையாகும்.

இவ்வாறான திருந்திய உள்ள நிலைகளோடு கூடிய இல் வாழ்க்கையைச் சிலப்பதிகார நூலாசிரியரான ஆசிரியர் இளங் கோவடிகள், தமது வாய்குளிரப் 'பெருந்தண்வாழ்க்கை' யென்று கூறி மகிழ்ந்தார். அங்ஙனங் கூறும் பொழுதே இல்வாழ்வார் தம்மை நாடிய மூவகையினர்க்கும் மேற்காட்டியவாறு உண்டி முதலியன உதவிப் போற்றுமிடத்தேதான் அவர்தம் இல் வாழ்க்கை பெருந்தண் வாழ்க்கை யென்னும் உயர்வுக்கு வரு மென்பதனையும் நன்கு தேற்றி,

"மறுப்பருங் கேண்மையோடு அறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்."*

* இல்வாழ்க்கை, க. † விருந்தோம்பல், க. * சிலப், உ; அ௯-௯.

என்று கூறி யருளினார். இவ் வரும்பெரும் அடிகட்கு நுண்ணுரை தெரிக்கும் அடியார்க்குநல்லார், 'இதன் கருத்து:—கேண்மையோடெனவே சுற்றந்தழாலும், அறப்பரிசாரமுமெனவே அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க்கெதிர்தலுமென்பதாயிற்று. இவற்றோடே பொருந்திய வாழ்க்கையெனவே அருளுடைமை, அன்புடைமை இனியவை கூறன் முதலிய இல்லறப் பகுதியெல்லா மடங்கும்' என்று மிகத் தெளிவாய் அவ்வடிகளின் கருத்துண்மையை விளக்குதலின் மேற்காட்டிய உண்மைகளெல்லாம் நன்கு விளங்குதல் காண்க.

இனி, அறியாமையைத் தேய்த்து அறிவைப் பெருக்கி இறைவன் திருவருட்கு இலக்காதற் பொருட்டு இல்லறத்தை மேற்கொள்ளுதலான உண்மையும், அவ்வில்லற நிகழ்ச்சி விருந்து புறந்தரூஉம்வழி அன்புடைமை முதலான இனிய அருளியல்புகளிற் றம்மைப் பழக்குவித்து இறைவனருளை விளைவிக்குமாறும் நன்கு தெளிந்த காதன்மக்கள் தாம் அந்நோக்கத்தோடு இல்லறம் பயில்வர். நோக்கமறிந்து பயிறலால் அவ் வாண் பெண் காதன் மக்கள் இருவரும் இல்லறத்தின் உண்மைப் பயனை எளிதில் அடையப்பெறுவர். அஃதறியா மக்கள் அங்ஙனம் அதன் பயனை எளிதில் அடைதல் இயலாது. ஆதலால் அக் காதன்மக்கள் இருவருக்கும் தெளிந்த கல்வியறிவும் அதன் உணர்ச்சியும் இன்றியமையாது வேண்டற்பாலனவாம். இவற்றை இளமையிலேயே அவர்தம் பெற்றோர்கள் அவர்தம் மேல் வாழ்க்கையினைக் கருத்தூன்றி நினைந்து பார்த்து அவர்களைப் பழக்கி வந்திருத்தலும முதன்மையானது. அன்புடைமை இனியவை கூறல் முதலாக மேலெடுத்துக் காட்டிய இல்வாழ்க்கையின் மெய்த்தன்மைகளி லெல்லாமும் பெற்றோர்கள் தம் மக்களை நன்கு ஒழுகுமாறு பயிற்றி வந்திருத்தல் வேண்டும். மக்களைப் பெற்றோர், அவர்கள் பிற்கால வாழ்க்கையைச் சிறிதேனும் நினையாமலும், நினைந்து, கல்வி யறிவு, தெளிவு நலம்,' காதலுணர்ச்சி, கடவுளன்பு, இல்லறவாழ்வு, அன்புடைமை முதலிய நல்லொழுக்கங்கள் என்பவற்றி லெல்லாம் இளமையிலிருந்தே பயிற்றாமலும் உண்டியும் உடையும் நகையும் மட்டுங் கொடுத்து அவற்றிலேயே மென்மேலும் அவாவுடையராம்படி அவர்களைப் பழக்கி வந்தால் அம்மக்கள் ஆண்டின் முதிர்ந்து மணங்கூடி நிகழ்த்தும் இல்வாழ்க்கை சிறிதும் சிறப்புற்று விளங்காதன்றோ? இல்வாழ்க்கையின் பயனை அம்மக்கள் சிறிதும் உணராரன்றோ?

இங்ஙனமே, தலைவன் தலைவியர் இருவரும் தமக்குள் விளைந்த காதலுணர்ச்சியினைத் தீதல்லாத நல்லவழியில் ஒருவர்க்கொரு

வர் பெருக்கியும் பெருக்குவித்துக்கொண்டும் உண்மையான் உணர்ந்து மகிழ்தற்கான இன்னிசை மிழற்றல், அறிவுப்போரிடல், புலமையால் வெல்லல், குறிப்பறிவுறுத்தல், ஆடலமைத்தல், பாடலொடாடல், பூவிளையாடல், நீர்விளையாடல், தூய்மை விளக்கல், அழகு மிகுத்தல், நடையுடை மாற்றல், சாயல் விளைத்தல், காதலுணர்த்தல், நிறையழிகல், அழியாது நிறுத்தல், ஊடல் புணர்த்தல், அளவின் புலத்தல் முதலிய இனிய திறங்களெல்லாம் அவ்விருபாலார்க்கும இருத்தல் வேண்டும். இவைதாம் அவர்கட்கு இயன்றமட்டும அமைத்துக் கொடுக்கும் வகையில் அவர்தம பெற்றோர்கள் கல்வி யறிவு முதலியவற்றில் அவர்களை இளமை தொட்டே பழக்குதல் வேண்டும். இவைதமக்கெல்லாம் அக் காதன்மக்கட்கு அறிவின் விரிவு மிக இன்றியமையாத தாகுமென்க. இத்துணைக் காதலுணர்ச்சியும், அறிவு நூலுணர்ச்சியும, அவையிரண்டின் நுகர்ச்சிப் பழக்கமும் ஆண் பெண் என்னும் இருபாலார்க்கும சிறந்த கல்வியுணர்ச்சியோடு கூடியிருக்குமானல், அவர்களால் நிகழ்த்தப்படும் இல்லறவாழ்க்கை, அடியார் பெருமக்கள் எல்லாம்வல்ல அன்பரு ளின்பங்களின் நிலைக் களனை ஆண்டவனேடிருந்து நுகர்ந்துணரும் பேரின்ப வாழ்க்கையே யாகுமென்பது மிகையாகாது.

> "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்
> போஒய்ப் பெறுவது எவன்?" *

என்று இல்வாழ்க்கையின் உண்மையை உண்மையான் உணர்ந்து இனிது நுகர்ந்து விளங்கிய திருவள்ளுவனர் மிகத் தெளிவாக இக்கருத்தினை ஆற்றலோடு புலப்படுத்துக் காட்டுதல் காண்க.

இன்ன இயல்புகளான் வாழ்க்கை நிகழ்த்தும் இல்லறத்தார்க்கு அவரது முதல் நோக்கம் காதலுணர்ச்சிக்கண்ணும் இறைவனருட்கண்ணுமே பயின்று கிடக்குமாதலின், அவர் தமக்குள் மெய்யுறு புணர்ச்சி மிக அரிதாகவே நிகழும். ஒரோவொருகால் மிக அரிதாய் நிகழும அப்புணர்ச்சி தானும் இழிந்த காமத்தன்மையினல் நிகழாமல் இறைவனது அருட் குறிப்புக்கு ஆளாதல் வேண்டுமேயென்னும் குறிப்பினல் மக்களைபெறுகின்ற நோக்கத்தோடுமட்டும் உயர்ந்த அருளுணர்ச்சியின் வழியதாய் நிகழாநிற்கும். அருளுருவான ஆண்டவன் உயிர்களின் மலத்தினைக் கெடுத்தற்பொருட்டு அவைதம்மை ஒவ்வோருடம்புகளினும் புகுத்தி உலகத்திற்

* இல்வாழ்க்கை, சு.

பிறப்பிக்கும் முயற்சியில் முனைத்து நிற்கின்றானாதலின், அவன் எடுத்துக்கொள்ளும் அம்முயற்சிக்கு உறுதுணையாக உலகத்தில் முன்னமேயே பிறந்து சிறிதறிவு வளர்ந்து வரப்பெற்ற ஏனையுயிர்கள் தம்முண் மெய்யுற்றுப் புணர்ந்து மக்களைப் பெற்றெடுப்பராயின், அஃதவனால் பெரிதும் போற்றித் தழுவப்படும். அவ்வாற்றால் அவரெல்லாம் இறைவனருளுக்கு இலக்காகுவர். எனவே மக்களைப் பெற்றெடுக்கும் முயற்சிப் பொருட்டே மெய்யுறு புணர்ச்சி நிகழ்வதாமெனவும், மற்று அப்புணர்ச்சிக்கண் வேறுவகையின் இன்பம் பெறும் பொருட்டு அது நிகழ்வதன்றாமெனவும், ஏனைக் காதலின்பங்க ளெல்லாம் தலைவன் தலைவியரின் அறிவாராய்ச்சிகளின் வழியதான நட்புணர்ச்சிக்கண்ணவா மென்பதும் பகுத்துணர்ந்து அவை தம்மை இறைவனருள் விளக்கத்தினால் நுகர்ந்து காணலே மெய்ம்முறையினால் வாழும் இல்லறவாழ்க்கையரின் நன் முறையாய் முடிகின்றது. இவ்வகை புணர்ச்சிகளாற் கௌவிக் கிடக்கும் நெஞ்சப்பான்மை வாய்ந்த இல்வாழ்வார்க்குப் பிறக்கும் மக்களே தூய உடம்பும் தூய அறிவும் தூய உணர்ச்சியும் நிரம்ப உடைய நன்மக்களாய்ப் பிறங்கி இறைவனெடுத்த முயற்சிக்கு நற்பயன் காட்டுவாராய் விளங்குவர். 'செய்வன திருந்தச் செய்' என்னும் உயர்வுரைப்படி இறைவரது நோக்கத்திற்கிணங்க மக்கட்பேற்றுக்கு உடல் புணரும் இல்வாழ்க்கை மாந்தர் முதலில் தூய உடம்பு தூய அறிவு தூய உணர்ச்சி முதலியவற்றில் தம்மைச் சிறப்பாக வைத்துக்கொண்டு அதன் பின்னர் அவ்வியல்புகள் தாம் ஒருருவெடுத்தாலென அழகுறு மக்கள் தோன்றல்வேண்டு மென்னும் முனைந்த உணர்ச்சியுடன் இறையருள் நோக்கத்தினை முன்கொண்டு தமக்குட் கூட்டம் பெறுவராயின், அம்முறையினால் அவர் எண்ணியவாறே ஆரருண் மக்கள் பொலிந்து தோன்றுவராதலின், அவ்வாற்றால் அவர் இறைவனது நோக்கத்திற்கு முழுதும் பயன்பட்டவராவர். அஞ்ஞான்று இவர்தம் கூட்ட நிகழ்ச்சிக்கண் இழிந்த காம உணர்ச்சியென்பஃது இறைவன் முயற்சிக்கிணங்க மக்களைப் பெறல் வேண்டுமென்னும் அருளுணர்ச்சிக்கு முன் தன்னாற்றல் கெட்டு அடங்கி மற்றதற்கு உதவியாய் நிற்கும். இவற்றிற்கெல்லாம் இல்வாழ்வா ரிருபாலார்க்கும் தக்க உணர்ச்சி விரிவும் அது தன்னைப் பயக்கவல்ல உயர்ந்த கல்வியறிவும் நிரம்பவும் வேண்டுமென்பது மறுக்கப்படாத உண்மையாகும்.

இன்னும், ஆணும் பெண்ணுமாய் இயற்கையே யமைந்து உலகத்திற் பிறத்தலின் நோக்கம் மேற் கூறியவாறெல்லாம் காதல் நுகர்ந்தும் அறநெறி யொழுகியும் அறியாமையைத்

தேய்த்து அறிவைப்பெருக்கி இறைவனருளுணர்ந்து இன்ப மெய்தற்காமெனனும் முதன்மையான நோக்கத்தினை இல்வாழ் மக்கள் தெளிந்த அறிவுணர்ச்சியோடு இனிதுணர்வராயின் மட்டும், அவர் தமக்குள் ஒற்றுமைக் குறைவும், தீய ஒழுக்கமும், சண்டை சச்சரவுகளும், கொலை பழி முதலியவைகளும் சிறிதும் நேரா. அப்போது அக் காதன் மக்களின் முதல் நோக்கம் அறிவைப் பெருக்குதலிலேயே முனைந்து நிற்பதாதலின், அதன் மேற் கருத்துவைத்துப் பயிலும் அவரெல்லாம் தமது வாழ்க்கையிடையே வறுமையுண்டாயினும், அல்லது நகை உடை உணவு முதலியன இல்லையாய்ப்போயினும், மற்று நோயுங் கவலையும் பிரிவுந் துன்பமும் நெடுக நிகழினும், இன்னும் இவை போன்ற இடுக்கண்கள் பல இடையறாது நேரினும் 'காரியத்தின் மேற் கண்' என்றபடி தமக்குள் ஒற்றுமை குன்றாது நெஞ்சம் விலகித் தளராது தங்கடமை வழுவாரன்றே. ஆகவே திருமணங் கூடுங் காதன் மக்கட்குச் சிறந்த காதலுணர்ச்சியும், தெளிந்த அறிவு நூலறிவும், உயர்ந்த பழக்க வழக்கங்களும் இளமைதொட்டே அமைந் திருக்குமாயின், திருந்திய இல்லற வாழ்க்கை அவரிடையே நிலைபெறுய் நிகழ்ப்பெறு மென்பது செவ்விதின் விளங்கிற்று. இவ்வகைப்பட்ட திருத்தமான உள்ளத் தன்மைகளை அவ் ஆண் பெண் மக்கட்கு விளைத்துத் தராது, வறிதே வெளிக் கட்டுப்பாடுகளை மட்டும் இயற்கைக்கு முரணுக ஓரளவு மின்றி நிரம்ப அமைத்து வைத்தால், அங்ஙனம் அமைத்து வைத்ததோ டமையாமல் அக் கட்டுப்பாடுகளிலே கொழுந் தனைய இளம் பெண்களும், இளம் பிள்ளைகளும், மக்கள் தம்மின் வாழ்க்கை நுட்பங்களையும் இறைவனது திருவுளப்பாங் கினையும் நுனித்தறியும் வன்மையற்ற அறிவிலா மாந்தரின் மேற்பார்வைப் பட்டு அடக்கி யாளப்பட்டால் அம்முயற்சி வயலுக்கிறைத்த நீராகாது விழலுக்கிறைத்த நீராகவே முடிந் திடும். திருமண மக்கட்கு உள்ளச் செம்மையினை விளைத்துத் தராது புறக்கட்டுப்பாடுகளை மட்டும் பெருக்கி வைக்குஞ் செய்கை அவர்கட்கும் பிறர்க்கும் ஏதும் பயன் தருவதன்று மென்பது தேற்றி நந்தம் பெருநாவலர்கோன்

> "சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
> நிறைகாக்குங் காப்பே தலை" *

என்று ஆணித்தரமாக அறைந்து கூறுந் தெய்வத் திருக்குறள் இங்குக் கருத்தூன்றி நினைப்பிருத்தற்பாலது.

இனி இல்வாழ்மக்கட்கு இத்துணை இல்லற வொழுக்கங் களோடு தெய்வம் வணங்கும் முதன்மையான செயலும் தீதல்

---

* வாழ்க்கைத்துணைநலம், எ.

லாத நன்முறையிலே நிகழ்தற்கான உண்மையுணர்ச்சி இன்றியமையாது வேண்டற்பாலதாம். இவ்வகையான தெய்வ உணர்ச்சியும், இவ்வுணர்ச்சியினாலான வணக்கச்செயல்களும் ஆண்பெண்ணுவாரிருபாலார்க்கும் ஒத்த நிலையில் இருத்தல் வேண்டும். இற்றைக்கு ஐயாயிரத்து ஐஞ்ஞூறு ஆண்டுகட்கு முற்பட்டிருந்த தொல்லாசிரியரான தொல்காப்பியனார் கிழவனுங் கிழத்தியுஞ் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'* என்று நூற்பா அருளி, அவர்க்கும் முன்னிருந்த மிகப் பழைய தண்டமிழ் மக்களில் ஆண் பெண்பாலா ரிருபாலாரும் இல்லறம் நிகழ்த்து மிடத்துத் துறந்த உள்ளத்தராய் நின்று வீடுபேற்றின்பம்பெறற்பொருட்டு இறைவன் வணக்கத்திற் பயின்று பழகிய உண்மையைத் தெளிவாய் விளக்கியிருக்கின்றார்.

"கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்...
அறுகு சிறுபூளை நெல்லொடு தூய்"†

என்று சிலப்பதிகாரத்தின் கண்ணும், 'அஞ்சேலென் றருள்செய்வான் அமருங் கோயில் வலம்வருக மடவார்கள்'‡ என்று ஞானசம்பந்தப்பெருமான் தேவாரத்தின் கண்ணும் இதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. திருத்தொண்டர் புராணத்திலுள்ள மங்கையர்க்கரசியார், பரவையார், சங்கிலியார் வரலாறுகளும் இவ்வுண்மையை விளக்குவனவாம். மகளிராவார் தம் அருமைக் கணவன்மாருடன் கூடித் திருக்கோயில் சென்று வழிபடுமியல்பு, அரிவாட்டாய நாயனார் திருநீலநக்க நாயனார் முதலியோர் வரலாறுகளிற் பெறப்படும். மாணிக்க வாசகப்பெருமான் இல்வாழ்க்கைப் பெண்டிர்கள் இல்லத்திலுங் கோயிலிலும் இருந்து தங் கணவரொடும் ஏனை மகளிரொடுங் கூடிக் கடவுள் வணங்கும் முறைகளெல்லாம், திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல் முதலான தலைப்புகளில் மிக அழகாகப் பாராட்டிக் காட்டினார். ஆகவே ஆசிரியர் நக்கீரனார் தலைமகனால் 'தலைநின்று ஒழுகப்படுவன தருமம் அருத்தம் காமம் எனமூன்று, அம்மூன்றினையும் ஒரு பகலை மூன்று கூறிட்டு முதற்கட் பத்து நாழிகையும் அறத்தொடுபடச் செல்லும், இடையன பத்து நாழிகையும் அருத்தத்தொடுபடச் செல்லும், கடையன பத்து நாழிகையும் காமத்தொடுபடச் செல்லும், ஆதலான் தலைமகன் முதற்கண் நாழிகை தருமத்தொடு படுவான், தலைமகளும் வேண்டவே தானும் வேண்டிப்போந்து அத்தாணி புகுந்து அறங்கேட்பதும் அறத்தொடுபடச் சொல்

---

*தொல், கற்பு, ௫௧. †சிலப், கனாத், ௬௰, ௬௩. ‡ திருவையாறு, ௧.

வதுஞ் செய்யும்'* என்று கூறுகின்றமையால் இல்வாழ் மக்கள் இருபாலாரும் இடையன கடையன பப்பத்து நாழிகைகள் முறையே பொருள் சமைத்தற்கும், காதலரொடு கூடிக் காதல் விளையாடுதற்கும் பகுத்துக்கொண்டாற் போலவே, தெய்வம் வணங்குதல், தெய்வவிளக்க விரிவுரைகள் கேட்டல் சொல்லல் முதலான அறநெறிப்பழக்கங்கள் பயிறற்கும் முதற்பத்து நாழிகையும் பகுத்தெடுத்துக்கொள்ளற்குரியராகின்றார்.

பொருள்வயிற் பிரிந்து பொருள் தொகுத்து வந்த தலைவனும், அவனை ஆராக்காதலாய் எதிர்கொண்டு வரவேற்று அவனுடன் அமர்ந்த அவன் அருமைத் தலைவியும் மேற்கூறியவாறெல்லாம் திருந்திய இல்லறவாழ்க்கையினை மெய்யுணர்ச்சியுடன் நிகழ்த்துகின்ற முறையாற் பேரறிவின் விளக்கமும், காதலுணர்ச்சியுடன் நிகழ்த்துகின்ற முறையால் அன்பின்ப விளக்கமும், இவ்விருவகை யுணர்ச்சிகளோடு மக்கட்பேற் றுணர்ச்சியும் பெற்று அவ்வில்லறவாழ்க்கையினைத் தெய்வம் வணங்கி நிகழ்த்துகின்ற முறையால் திருவருள் விளக்கமும் முற்றப் பெற்றுத் துறவுணர்ந்து இறைவன் திருவருள் காணுந் தகுதி வாய்ந்து இன்பக் கண்ணராய் நீடு வாழ்வர். இதுவே, தமிழர் நாகரிக முற்றிருந்த பண்டைக் காலத்தில் அவர்தமக்குள் நிகழ்ந்த இனிய இல்லற வொழுக்கமா மென்பது.

---

## திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் எழு, எட்டாவது ஆண்டுகளின் நிறைவு விழா

இவ்விழா விபவ ஆண்டு, மார்கழித் திங்கள் கஅ, க௯-ம் நாட்களில் (1, 2-1-1929) திருநெல்வேலிக் கணபதி விலாசக் கொட்டகையில் பிற்பகல் 4-மணி முதல் நடைபெற்றது. சென்னை 'நவசக்தி' ஆசிரியர் திருவாளர் திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள் அவ்விரண்டு நாட்களிலும் தலைமை பூண்டு 'நால்வர் பெருமை' 'மங்கையர்க்கரசியார்' என்னும் பொருள்கள் பற்றி மிகவும் ஆர்வமாகக் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்ப் பேசினார்கள். இக்காலத்தில் சைவசமய நூல்களில் அறியாமையால் ஐயுற்றுத் துன்புறுவார்க்கு இவர்கள் பேசிய இரண்டு சொற்பொழிவுகளும் அறிவுச்சுடர் கொளுத்தித் திருத்தம் கற்பிப்பனவாய்த் துலங்கின.

முதல் நாளன்று சென்னை அட்வகேட்டும், சித்தாந்தம் ஆசிரியருமாகிய திருவாளர் ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் 'பெரிய புராணம் பொது உடைமைப் பெரும் பட்டயம்'

* இறைய சூய.

என்னும் பொருள்பற்றி ஆங்கில நூற் கருத்துக்களைப் பிணைத்துக்காட்டி மிகவும் அழகாகப்பேசினார்கள். பின்னர்த் தென்காசி, திருக்குறள் அவதானியார் திரு தி. ப. சுப்பிரமணிய தாஸ் அவர்கள் அறிவுடைமை என்னும பொருள் பற்றிப் பேசினார்கள்.

இரண்டாம் நாளன்று அவிநாசி, உயர் திரு. கருணாலய சுவாமிகள் 'தொண்டர் பணி' என்னும் பொருள்பற்றியும், அட்வகேட் உயர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் 'சைவ சமயமும் நமது கடமையும்' என்னும பொருள் பற்றியும், சென்னை, திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் 'சைவ சமய நடைமுறை' என்னும் பொருள் பற்றியும் சீர்திருத்த முறையாக மிக விளக்கமாகப் பேசினார்கள். பின்னர் திருவாளர் R. D. சேதுப்பிள்ளையவர்கள் முதலியோரால் சில தீர்மானங்கள் ஒரே மனதாய் நிறைவேற்றப்பட்டன. இரண்டு நாட்களிலும ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இசைத்திருவாளர் சுந்தர ஓதுவா மூர்த்தியவர்கள் இரண்டு நாட்களிலும தேவாரப்பாக்களை மிகவும இனிமையாகப்பாடி இறுதியில் தலைவர் முதலியோர்க்கு நன்றிகூறக் கூட்டம கலைந்தது.

விழாக்கண்டோன்

## மதிப்புரை

திருவாளர். வாசுதேவசர்மா M. A., B. L, என்பவர், திருச்சி நேஷனல் காலேஜில் வடமொழியாசிரியராயிருப்பவர். பண்டைத்தமிழ் நூல்களின் நயம் நன்குணர்ந்தவர். சிலப்பதிகாரக் கானல்வரிப் பாட்டுக்களையும், குறுந்தொகையில் 139 பாட்டுக்களையும் செவ்விய ஆங்கிலப் பாவிலே மொழிபெயர்த்து ஆங்கில மறிந்த உலகம் தமிழ்ப் பண்டைப் பனுவல்களின் சீர்மையையும் செம்மையையும் துய்த்தின்புறும் பொருட்டு உதவுகின்றார். அவர்க்குத் தமிழுலகம் மிக நன்றியுணரக் கடமைப்பட்டுள்ளது அவருடைய மொழிபெயர்ப்பு நூல்கள் வாயிலாகத் தமிழிலக்கியப்பெருமை எளிதின் யாவரும் அறிய நேர்வதறிந்து ஆங்கிலம் வல்லாரும் பிறரும் அவற்றை வாசிக்கவும பதிப்பிக்கவும் துணை புரிதல் பெருங்கடமையாகும்.

கா. சுப்பிரமணிய பிள்ளை

திருவாளர் ம. ஷண்முக முதலியாரால் பதிக்கப்பட்ட யூகிமுனி பூரணம 100, யூகிமுனி கர்சல் 152; அகஸ்தியர் ஷண்முக ஜாலமென்னும சாப்பராஜகுளிகை என்னும் தலைப்புகள் கொண்டு ஒரு கட்டடமா யமைந்த ஒரு நூல் எம் பார்வைக் கனுப்பப்பட்டது. அஃது இக்காலத்திற் குரியவாறு வழுவழுப்பான உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இது வயித்தியர்களுக்குப் பயன்படுவதொன்றே. இது வெளிவந்ததற்குக் களிப்புகின்றேம். இது கொண்டு மருத்துவஞ் செய்வது எவ்வளவு எளிதென்பது வயித்தியர்களே உணர்ந்து கொள்ள வேண்டுமேயன்றி, மற்றவாக்கியலாது. முடிவுரையாகக் கூறுமிடத்து வெளிவரா நூல்கள் வெளிவருவன மிகச்சிறந்த தென்பதேயாம். ரூ-க.